அமுதசுரபி

விலை ரூ: 6

டிசம்பர் 1994



ACC.NO. 10594

அமுதசுரபி

டிசம்பர் '94 மலர் : 47
பவ – மார்கழி இதழ் : 8

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே — பாரதியார்

அட்டைப்பட விளக்கம்

9 மதுரை தந்த மதுரவாணி
— கன்யா

அறிவியல்

77 சுழலும் புயல்
— டி. ஆர். சிவராமகிருஷ்ணன்

ஆன்மிகம்

17 ஆன்மிக உழைப்பு
— கர்மயோகி

21 இறைவனின் திருமைந்தர்...
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

இலக்கியம்

39 சங்கப் பலகை

இளைய அமுதம்

தயாரிப்பு : குண்டுமணி

61 நாவடக்கம்
பாம்பு ராஜா

64 தாயே தெய்வம்
தாதி பன்னாவின் தியாகம்

கவிதை

19 உலகம் உன் வீடு
— கருமலைப்பழம்நீ

38 மலர்
— பி.வி.பி

44 உன்னைப் பற்றி...
— வெ. இறையன்பு

44 அச்சுதா அவதாரம் எடு
— எஸ். குமார கிருஷ்ணன்

48 நிகழ்வு
— குடந்தை புகழேந்தி

சிறுகதை

24 அந்த சிவப்புப் பெண்
— ஆர். இராமமூர்த்தி

42 ஆளில்லாத கேட்
— வினோதானந்த்

45 புன்னகையும் பெருமூச்சும்
— தங்க. சிவராசன்

சோதிடம்

65 உங்கள் ராசிபலன்
— வித்வான் வே. லட்சுமணன்

தொடர்கதை

33 தனி மரத் தோப்பு
— ராஜேந்திரகுமார்

71 கங்காபுரிக் காவலன்
— விக்கிரமன்

நாணயம்

70 தேவை - பயனுள்ள கல்வி
— எஸ். ராஜரத்தினம்

பாவையர் பக்கங்கள்

தயாரிப்பு : கிரிஜா ராகவன்

49 எண்ணிப் பார்க்கலாம் பெண்ணே!
இம்மாதக் கோலம்

50 திருமணச்சீர் கொலு வேண்டாமே, ப்ளீஸ்

51 எனக்கென்ன இனிமேல்?
செய்துப் பாருங்களேன்

52 கூடி விளையாடுங்கள்

54 நூல்கோல் சுகியம், லவங்கலதா

55 சாதனை படைத்த சப்னா

56 இளைய தலைமுறை சிந்திக்கட்டுமே

57 திருமணத்திற்கு ஜாதகப் பொருத்தம் தேவையா?
சுண்டைக்காய் மகிமை

58 இயற்கை உணவுகள்

60 ஆணுக்குப் பெண்ணும்...

11 செய்திகள்

6 மலரும் மணமும்

துக்கத் தீபாவளி

'அமுதசுரபி' தீபாவளிமலர், வழக்கம்போல், தீபாவளி அன்று கிடைக்குமாறு எல்லா வாசகர்களுக்கும் அனுப்பப்பட்டன. விற்பனையாளர்களுக்கு இரயில் மூலம் அனுப்பப்பட்டவை உரிய நேரத்தில் கிடைத்து விட்டன.

அஞ்சல்வழி பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டவை சந்தாதாரர்களுக்கும், முன் பணம் அனுப்பி பிரதிக்குப் பதிவு செய்து கொண்டவர்களுக்கும் இருபது நாள்கள் கழித்தே கிடைத்துள்ளன.

இந்தச் செய்தியை அறிந்த போது நாம் மிகவும் திடுக்கிட்டோம். தீபாவளி மலரைப் பாராட்டிப் புகழ்ந்து எழுதியவையால் கிடைத்த மகிழ்ச்சி ஒரு கணத்தில் மறைந்து, துயரம் எம்மைச் சேர்ந்தது.

ஒவ்வொரு மாதமும் குறைந்தது 50 வாசகர்களுக்காவது தபாலில் கிடைக்காமல் போய், மற்றொரு பிரதியை அனுப்புவது வழக்கமாகி விட்டது. புகார்க் கடிதம் எழுதினால் தபால் இலாகாவினர் ஒரே மாதிரியான பதில். இதழ்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படாமையால் நாங்கள் ஏதும் செய்ய இயலாது என்று கைவிரித்து விடுவது அவர்கள் வழக்கமாகி விட்டது.

ஆனால், தீபாவளிமலர் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டன. புயலாலும், மழையாலும் இரண்டு மூன்று நாள்கள் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். பதினைந்து முதல் இருபது நாள்களா? யாரிடம் இந்த வேதனையைச் சொல்லி முறையிடுவது என்று தெரியவில்லை.

இந்த ஆண்டைப் பொறுத்தவரை மலர், டிபாசிட் செலுத்திய சந்தாதாரர்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்காததால், எங்களுக்குத் துக்கத் தீபாவளிதான்!

☆ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா ☆ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியம்
☆ ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன் ☆ இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்
☆ தனி இதழ் விலை : ரூ. 6/- ☆ ஆண்டுச்சந்தா : ரூ. 72/- ☆ ஆயுள் சந்தா : ரூ. 1000/-
☆ அட்டையில் : டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி ☆ வண்ணப்படம் : யோகா

மலரும் - மணமும்

Amudasurabi

The Magazine lives up to its 47-year-old tradition in Deepavali Malars. It opens with an invocation to Mother Tamil in Vikraman's style.

The contents can be broadly classified into serious articles, short stories, a lot of poetry, and lovely colour plates of the late Silpi's illustrations.

Those who have made meaningful contributions in the form of articles include M.P. Sivagnanam, Justice S. Mohan, Dr. M.S. Udayamurthy, A. Padmanabhan, R.M. Veerappan, Dr. N. Mahalingam, Pon Paramaguru, Dr. Ko.Vi. Manisekaran, Dr. K. Venkatasubramanian and 'Rakami'.

It is no surprise to see Balakumaran's contribution: but surprise of surprises, it is not a short story but a serious, (as is his wont these days) religious article ! Another surprise is an article on artist Gopulu.

Amudasurabi has articles on two cinema artistes: Prabhu and Sivakumar. But the Sivakumar article is delightfully different: it focuses on the artist in him, and a few of his paintings have also been published. Art's loss is cinema's gain!

Next year happens to be philosopher J. Krishnamurti's birth centenary year. Amudasurabhi has done itself proud by carrying an article on him by K. Asokan, supplemented by G.K. Murthy's soulful painting of him. Another painting of Murthy's that is bound to be well-received is that of Maraimalai Adigal (accompanying Pon Paramaguru's article.)

The usual gamut of short story writers adorn the issue: Rajendrakumar, Indumathi, P.V.R., Maharishi, R. Soodamani, Pratiba Rajagopalan, Jayarathan, Rajeshkumar, Anuradha Ramanan, Rajam Krishnan, Mi. Pa. Somu, Vikiraman and Thilakavathi.

To add critical value to these stories is an article by Prof. Ezhilmudalavan, examining the trend of present day short stories.

There are Silpi's colour paintings of Sri Guruvayurappan, Sri Parthasarathy, Udupi Krishna and Sri Mayapuri Krishna (Haridwar) in this 360 pages magazine that is priced at Rs. 40.

-- Indian Express

Amudasurabhi : Starting the special number with the photographs of Paramacharya and Sri Vijayendra Saraswathi by Manian Selvan is a feast to the eyes.

An article each by Justice S. Mohan, Dr. M.S. Udayamurthy. Ra.Ganapathi and Balakumaranare interesting. A beautiful piece on AV Meyyappa Chettiar and another on artist Gopulu are noteworthy. There are special biographical sketches in colour on Melmaruvattur Adigalar. J. Krishnamoorthy, 45th Akobila Matt Sri Azhagiya Sringer and Sri Arabhindo and Mother.

A piece on T.V. Gopalakrishnan and Dhananjayans's padavarnam meant for dance and another by Komala Varadan cover the fine arts section. Colour pictures of gods and goddesses also find a place. The cinema fans will find satisfaction in the write-up on Prabhu and Sivakumar. A literary piece by State Minister. Mr. RM. Veerappan and an article on Aswin Muthaiah, the polo player are other readable items. The wrapper carries the deity of Koothanoor by Gopulu.

-- The Hindu

வழக்கம்போல் கண்கவரும் வண்ணப்படங்களுடனும், கருத்தை அள்ளும் கதை - கட்டுரைகளுடனும் வெளிவந்துள்ளது, 'அமுதசுரபி" தீபாவளி மலர்.

ம.பொ.சி. நீதிபதி ச. மோகன், விக்கிரமன், பாலகுமாரன், கி. வேங்கட சுப்பிரமணியம் முதலியோரின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்துமதி, ராஜேந்திரகுமார், கோவி. மணிசேகரன், திலகவதி, வல்லிக்கண்ணன், அனுராதா ரமணன், ஆர். சூடாமணி முதலானோர் சிறுகதைகள் எழுதி உள்ளனர்.

சில்பி, கோபுலு, ஜெயராஜ், மாருதி, மணியம் செல்வன், வினு போன்றோரின் ஓவியங்கள் எழிலுடன் பளிச்சிடுகின்றன. கோபுலு தீட்டிய அட்டைப் படம் அருமை. பிரபு பற்றிய கட்டுரையும், ஆன்மிகத் தலைவர்களின் வண்ணப் படங்களும் சிறப்பு அம்சம். மலரின் விலை ரூ. 40.

-- தினத்தந்தி

தாமரைப் பூவில், வீணையுடன் அமர்ந்திருக்கும் சரஸ்வதி தேவியின் கோபுலுவின் வண்ண அட்டைப் படத்துடன், இந்த ஆண்டு தீபாவளிமலர் வெளிவந்திருக்கிறது. ம.பொ.சி., உதயமூர்த்தி, பாலகுமாரன, ரா. கணபதி ஆகியவர்களின் கட்டுரைகள், கோவி. மணிசேகரன், பி.வி.ஆர். மகரிஷி, வல்லிக்கண்ணன், ராஜம் கிருஷ்ணன், மீ.ப. சோமு போன்ற பிரபல எழுத்தாளர்களின் சிறுகதைகள், ஐம்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகளுடன், 'அமுதசுரபி' மலர் வழக்கமான ஜொலிப்புடன் வெளிவந்திருக்கிறது. அழகுக் கண்ணனின் ஐந்து கோலங்கள்- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமனின் பக்திக் கட்டுரை, மலருக்கு ஆன்மிகச் சிறப்பு சேர்க்கிறது. 'யோகா'வின் வண்ணப்படங்கள், நடிகர் சிவகுமாரின் ஓவியம், பிரபுவுடன் ஒருநாள் என்ற கட்டுரை, வினோபா பாவேயைப் பற்றி நா. மகாலிங்கத்தின் கட்டுரை ஆகியவை மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. படித்து மகிழவும், பாதுகாக்கவும் மலரில் பல அம்சங்கள் உள்ளன.

-- தினமலர்

'தீபாவளி மலர் 94' அட்டை முகப்பில் திரு. கோபுலு அவர்களின் கைவண்ணத்தில் தமிழ் மகள் உலா வந்தது மனத்தில் நீங்காத உன்னத இடத்தைப் பிடித்தது. கலைகள் கவிதைகள் கதைகள் மிகவும் அற்புதமாக சற்று சிந்திக்கவே தூண்டின. இதற்கெல்லாம் சொல்லி வைத்தாற்போல் பிள்ளையாரைப் போற்றும் பிள்ளைத் தமிழ் - சாந்தினி அவர்களின் கட்டுரை மணிமகுடமாகத் திகழ்ந்தது.

-சி.பா.சந்தானகோபாலகிருஷ்ணன்

வணக்கம். அமுதசுரபி தீபாவளி மலர் கண்டேன். ஒழுங்கான பள்ளிப் பிள்ளைகள் தேர்வுக்குப் படிப்பதைப் போல் முழுதும் படித்து முடித்தேன். நான் பொதுவாக, தீபாவளி எப்போது

வரும் என்று பறவைத் தேடலாய்க் காத்திருப்பது இனிக்கும் பலகாரங்களுக்காவோ, வெடிக்கும் பட்டாசுகளுக்காகவோ அல்ல. சுவைக்கும் அமுதசுரபிக்காகத்தான்! நூலின் அமசங்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆனால், எதை யெதை என்பதில்தான் குழப்பம். இருப்பினும் சில சொல்கிறேன்.

முதலில், அட்டைப்படமே சட்டம் போட்டு வைக்க வேண்டும் போல அப்படியோர் அழகு! அசத்துகிற வண்ணங்கள்! அடுத்து திரு. ரா. கணபதி அவர்களின் சொல்லோவியம் விழிகளை ஈரமாக்கி நெஞ்சை நெகிழ வைத்து' சிறிது நேரம் சிந்தையை அடக்கிச் சீவனை ஒடுக்கி முந்திய வரிகளில் நினைவு முகிழ்த்திருக்க விம்மிதமாய் மனசு இன்பமான துன்பத்தில் கரைந்தது.

இரவு எப்போது வரும்? - இதயத்தில் இரத்தம் வடிந்தது! (ஜெயரதன்) நடிகர் சிவகுமார் அவர்களின் சித்திரங்கள் வியப்பை அளித்தது! கோலம் போடும் பெண்ணின் பார்வையின் சோலைக் குளிர்ச்சி சொக்க வைத்தது!

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் (திலகவதி)அவர்களின் தேசியத்தாபம், ஆயிரமாயிரம் உள்ளங்களின் அனல் பறக்கும் கேள்வியின் மறுபதிப்புத்தானே! 'ஜனநாயகம்' என்பதன் விளக்கவரி ஒன்றுபோதும் அவர் உள்ளத்தைக் காட்ட! மிகுந்த பாராட்டுகள்!

அப்பாடா, பக்தி, எழில், சுவை, கதை, கனவு, தொழில் என எல்லாத் துறையிலும் புகுந்து புறப்பட்டு 'காக்கை -குருவி எங்கள் சாதி'யில் மனம் நிறையச் செய்து விட்டீர்கள். மிக்க மகிழ்ச்சி.

- அனு. வெண்ணிலா

அமுதசுரபி முகப்பு படமும், கல்கியின் தீபாவளி மலர் முகப்புப்படமும் வெவ்வேறாக இருந்தாலும் விளக்கக்கரு கலைவாணி சரஸ்வதி தேவியின் மகிமையைப் பறைசாற்றியது எங்களுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

- ஆர். தமிழரசி

அமுதமான மலர்
முத்தானமலர்
தரமான மலர்
சுந்தரமான மலர்
ரம்மியமான மலர்
பிறிதொரு காலத்திற்கும் பயன்படும் மலர்

- கல்வே. சு. சதாசிவம்

மலரில் விளம்பர கனத்தைக் காட்டிலும் விஷய கனம் அதிகம். இலக்கியம், ஆன்மிகம், சிற்பம், சித்திரம், நாட்டியம், ஓவியம், கைவினை, திரைக்



கலை, அறிவியல் என்று எத்தனையோ துறைகளை உள்ளடக்கிய பெட்டகமாகத் திகழ்கிறது.

அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்களின் பெரியதோரு குழுவையே கூட்டி இருக்கிறீர்கள். பாலகுமாரன் எழுதியுள்ளது போல், மலரைப் படிக்கும் போது ஸத்ஸங்கத்தின் நடுவே இருக்கும் அமைதியும், ஆனந்தமும் பிறக்கின்றன.

அருமையான லே-அவுட். பிழைகள் காணமுடியாத அச்சுக்கோப்பு. ஒவ்வொரு பக்கத்திலும் உழைப்பும், சிரத்தையும், ரசனையும் புரிகிறது.

- சுஜாதா விஜயராகவன்

மலர் மிக நன்றாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. மனநிறைவளித்த தீபாவளிப் பரிசாக அமைந்தது. திரு. டி.வி.எஸ். அவர்களின் அஞ்சலிக் கவிதையில் கண்டுள்ளது போல் 'பித்துப் பிடித்தது போல் பிருந்தாவனத்தின் முன்' விழி நீர் பொங்க நெட்டுயிர்த்துப் பலமுறை நின்று திரும்பியிருக்கிறேன். தோன்றாத்துணையாய் என் துன்பங்களில் காட்சியளித்துக் காத்த காஞ்சி முனிவர்க்குக் கண்ணீரஞ்சலி அக்கவிதை. இலக்கிய மாமணி பொன். பரமகுரு அவர்கள் கட்டுரை, நா.சீ.வ. அவர்களின் 'ஆன்ம இசை' என்ற அழியாக் கவிதை, சிவகுமார் அவர்களின் அற்புதச் சித்திரங்கள் - ஓ எதை விடுவது? எழுதினால் வளரும். மற்றபடி மலர் அருமை. பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம்.

- க. விசாலாட்சி.

மலர் அழகாக இருக்கிறது. கண்களுக்கு விருந்தாக விளங்குவது போல, கருத்துக்கு இனிய விருந்தாகும் கதைகள், கட்டுரைகள், கவிதைகளைக் கொண்டிருக்கிறது.

- வல்லிக்கண்ணன்

மலர் ஒரு சிறப்பான சிறந்த படைப்பு. யாவருக்கும் மதிப்பு தந்து அவர்களை ஊக்குவிக்கும் வகையிலான நல்ல படைப்பு.

- ஜே. ஜி. கண்ணப்பன்

பல்கலைக் கழகங்கள் பற்றிய கட்டுரை கண்டேன்.

தக்க சிறப்பிடம் தந்து வெளியிட்டுத் தமிழ்த்துறைக்குப் பெருமை தேடித் தந்த தங்கள் பண்புள்ளத்தை நன்றியோடு போற்றுகிறேன். என் சார்பிலும் துறையினர் சார்பிலும் நன்றி.

- முனைவர் மா. இராமலிங்கம்
[எழில் முதல்வன்]
தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி-24.

நவம்பர் இதழில் டாடா நகர், தட்சிண பாரதமஹிளா சமாஜம், பெருமை படத்தக்க சாதனை, மங்கையரின் சமூக சேவை. எல்லாமே ஜாம்ஷெட்பூர் - இரும்பு நகரம் பன்முகப் பெருமை கொண்டிருப்பதை அழகாக விவரிக்கின்றன. இத்தகைய அறிமுகம் 'அமுதசுரபி' யில்தான் முதல்முறையாக வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது. கங்காபுரிக் காவலன் - கல்கி பரம்பரைக்கு ஓர் இலக்கியக் காணிக்கை.

- சௌரி சென்னை-78

வணக்கம் பாலஜோஸ்யரின் குரு பெயர்ச்சிப் பலன் இலவச இணைப்புடன் மலர்ந்திட்ட இம்மாத அமுதசுரபியின் அருமையான தீபாவளி சிறப்பிதழுக்கு எனது மனப்பூர்வமான பாராட்டுகள்.

- ப. மூர்த்தி பெங்களூர்.

'அமுதசுரபி' 1994-ஆம் ஆண்டு தீபாவளி மலர் பார்த்தேன். இன்னும் முழுவதுமாகப் படித்து முடிக்கவில்லை. பார்த்த வரையில் ஆன்மிகவாதிகளுக்கு அது நல்விருந்தாக அமைந்திருப்பதைக் கண்டேன். தீபாவளிப் பண்டிகைக்கு இது பொருத்தமான படையலே.

தீபாவளி மலர்களில் பெரும் பங்கு பற்றும் ஓவியர்களைப் பற்றி கோபுலுவைக் கொண்டு நினைவு கூர்ந்திருப்பது கோபுலுவைக் கௌரவிக்கும் செயலாகும். 'அமுதசுரபி' மட்டுமே இந்தச் சிறப்பைப் பெறுகிறது என்று எண்ணுகிறேன்.

முப்பது கடிதங்களை ரவிக்கைக்குள் மறைக்கச் செய்த கோபுலு சொல்லும் மனைவிமேல் சந்தேகக் கதாசிரியர் 'சோளி கே பீச்சே' பாடலாசிரியரை முந்திக் கொண்டிருக்கிறாரே!

- வஜ்ஜிரவேல்

எத்தனை கவிதைகள்! கவிதைக்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவம் நெஞ்சை நெகிழ வைக்கிறது. மிகமிக மகிழ்ச்சியாக இருக்கிறது. இளையவன், மதி ஒளி, சக்திக கனல், சிற்பி, அடியார்க்கு நல்லான், இலந்தை, தமிழழகன் என்று எத்தனை நல்ல கவிதைகள்!

பூசைக்கு வைத்துக்கொள்ளத்தக்க ஏராளமானபடங்கள். தூடாமணி, ஜெயரதன், விக்கிரமன் என்றுசிறுகதைகள் எல்லாமே சிறப்பாக உள்ளன. கட்டுரைகள் பயனுள்ளவை. குறிப்பாக, நண்பர் கோபிநாத்தின் இரு நல்ல கவிதைகளை நண்பர் சுராஜ் கட்டுரையில் படித்து மிக மகிழ்ந்தேன்.

உற்சாகமான உழைப்பின் உயர்வாக மலர் வெளி வந்திருக்கிறது.

- நா.சீ. வரதராசன்.

அமுதசுரபி தீபாவளி மலர் வாவ்! ரியலி தூப்பர்ப். சிறந்த சிறுகதைகளையும், சிரிக்க வைக்கும் ஜோக்குகளையும் வியக்க வைக்கும் வண்ணப் படங்களையும் வெளியிட்டு அசத்தி விட்டீர்கள். குறைந்தது ஒன்றரை மாதமாவது டைம் கொடுங்கள். அப்பொழுது தான் எல்லாவற்றையும் முழுமையாகப் படித்து விமர்சிக்க இயலும்.

-ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

தாங்கள் அன்புடன் அனுப்பி வைத்த தீபாவளி மலர் கிடைத்தது. எப்பொழுதுமே மலர் தூடிய மன்னராக விளங்கும் தாங்கள், இம்முறை மிகச் சிறப்பாக 'அமுதசுரபி' மலரைத் தயாரித்திருக்கிறீர்கள். நட்புக்குத் தலைப்பாகை கட்டி மகிழும் தாங்கள், 40 ஆண்டு காலமாகவே வழக்கமான பழகிய நண்பர்களை, மலரில் கரம் கோத்து அழைத்துச் செல்கிறீர்கள். பாரம்பரியச் சிறப்பு மிகுந்த இந்த நட்பாங்கிழமைக் குணம் தங்கள் தலைமுறைக்குப் பிறகு, கழுதை உழுத களமாகிப் போகும்.

எனக்கு அத்தனை மலர்களும் வந்தன. மலர்களை எல்லாம் பார்த்து விட்டு ஸ்வீட் ஸ்டால்களைப் பார்த்து மலைத்து நிற்பதைப் போலப் பிரமித்துப் போனேன். எல்லாமே ஆப்செட்டின் ஆவேசங்களாக இருந்தன. என்றாலும், சிலவற்றில் தோய்ந்தேன்.

'அருள் வரம் தருவாய் தமிழ்த் தாயே!' என்ற தங்களின் வேண்டலில் இளமீசை பாரதியைப் பார்த்தேன்

இதைக் கூராக்கிக் கொண்டால் முறுக்கு மீசை பாரதி தோற்றுவார். நீரோட்டம் கொண்ட தங்களின் தமிழ் நடை, தேரோட்டம் நடத்தி இருக்கிறது. ஜி.கே. மூர்த்தியின் அடிகளார், ஓவியமாக இல்லை; உயிர்ப்புடன் காட்சி அளித்தார். இந்த வகை, வரைவில் மூர்த்தியை வெல்ல, இன்று, வேறோர் ஓவியர் இல்லை. புலவர் தாமரைக் கண்ணன் அடிகளாரைப் பற்றி மந்திரச் சொற்களால் அர்ச்சித்திருந்தார். உண்மை ஒன்றைப் பற்றி எழுதினால். தர்மம் சொல் எடுத்துக் கொடுக்கும்.

அமுதசுரபியை அண்டமாக வைத்துக் தோற்றிய ஓவியர் சிவக்குமார் இன்று பிரமாண்டமாக வளர்ந்து இருப்பதை, அவருடைய லே-அவுட் காட்டி, தோள் தட்டுகிறது.

30, 40 ஆண்டுகளுக்கு முன்னால் நான் அமுதசுரபி மலருக்கு ஆற்றிய பணிகளை, இன்று என்னைவிடச் சிறப்பாக செய்யும் இளைஞர் நாகராஜகுமாரைப் பாராட்டி மகிழ்கிறேன். நாகராஜகுமார்? பெயர் சரிதானே? அவர் எந்தப் பெயரில் இருந்தாலும், அமுதசுரபியின் பிச்சியான அவருக்கு என் வாழ்த்துகள்.

இளமைக்காலத்தின் நட்பின் மகிழ்வில்.

வாசவன்.



மதுரை தந்த மதுரவாணி

'கன்யா'



பேசுவது அவதார புருஷரான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவாள். பேசியது சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்பு.

"அமெரிக்காவில் அவ இப்படி ஜயக்கொடி நாட்டியிருக்கிறது அவளுக்குப் பெருமை சேக்கறது மட்டுமில்லே; நம்ம தேசத்துக்கே பெருமை தேடிக் குடுத்திருக்கா... ரொம்ப காலமா அவாளுக்கு நம்மைப் பத்தி இருந்த கௌரவ எண்ணம் இப்பக் கொஞ்சம் வருஷமாக் கொறஞ்சுண்டே வந்திருக்கு. விவேகானந்தர் நமக்கு அங்கே பெரிசாப் பெருமை சேத்துக் குடுத்தார். Boston "Brahmins"-னே சொல்ற அளவுக்கு அங்கே இருக்கப்பட்ட ஆத்ம லக்ஷ்யம் உள்ள அறிவாளிகள் ஒண்ணு சேந்து நம்ம வேதாந்தக் கலாசாரத்துலேயிருந்து அநேக விஷயங்களை எடுத்துண்டு அனுசரிச்சிருக்கா. சுதந்திரப் போராட்டத்துலேயும் ரூஸ்வெல்ட் மாதிரியானவா நமக்கு ரொம்ப ஆதரவா இருந்திருக்கா. இங்கிலீஷ்காரா நமக்கு சுதந்திரம் தந்ததுக்கே அதுவும் ஒரு முக்கியமான காரணம். இப்படியெல்லாம் இருந்தாலும் இப்பக் கொஞ்சம் வருஷமா நிலைமை மாறிண்டு வரது.

"அமெரிக்காவும் ரஷ்யாவும் 'கோல்டு-வார்'னு பிரிஞ்சு நின்னுண்டு அவாவாளும் கோஷ்டி சேக்கறதுல நம்ம ராஜாங்கம் ரஷ்யா பக்கமே சாஞ்சுண்டிருந்தாலும், 'திட்டம், திட்டம்'னு லோகம் பூராவும் பிக்ஷா பாத்திரத்தை நீட்டிண்டு இருக்கறதுலேயோ அமெரிக்காகிட்டே தான் பெரிய கப்பரையா நீட்டிண்டிருக்கு! அவாளும் 'கோல்டுவார் பாலிடிக்ஸை உத்தேசிச்சு கப்பரையைத் தாராளமாவே ரொப்பிண்டிருக்கா.' ஆனாலும் நம்மைப் பத்தி அவாளுக்கு இருந்த கௌரவ அபிப்பிராயம் தேஞ்சுபோய், கொறைவான எண்ணமே ஏற்பட்டுண்டிருக்கு. இந்த சமயத்துல இவ அவாளோட பிரபலமான பத்திரிகைகள்லாம் கொண்டாடற மாதிரி கீழக்கரையிலேயிருந்து மேலக்கரை வரை ஜயக்கொடி நாட்டிண்டு போறதால, அவாளுக்குக் கீழ்க் கையா 'வாங்கிண்டே' இருக்கற நாமும் மேல் கையா இருந்து 'வாங்கிக் கோங்கோ'ன்னு அவாளுக்குக் குடுக்கறத்துக்கு நம்மகிட்ட ஒரு கஜானா இருக்குன்னு தெறந்து காட்டி, இந்த தேசத்துக்கே பெருமை சேத்திருக்கா!"

தெய்வ மனிதர் குறிப்பிடும் அந்த "அவ"ளும் "இவ"ளும், அவரை ஒரு தெய்வத்துக்கும் மேலாகப் பூஜித்து வரும் ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியன்னைதாம்! சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்னர் அவர் ஒரு விஜயதசமி நன்னாளன்று ஐ.நா. சபையில் இசை வினிகை வழங்கி, அது சேர, அகன்று விரிந்த அமெரிக்காவின் கீழ்க்கோடியிலிருந்து மேல்கோடி வரை நாடும் ஏடும் புகழ நடத்திய இசைப் பயண விவரங்கள் ஸ்ரீ மகா பெரியவாளிடம் சமர்ப்பிக்கப்பட்டபோதே அவர் தமது பொன்னிதயம் நிரம்பி இவ்வாறு கூறினார்.

அந்த ஜகத்குரு அருளிய அகில - உயிர்க்குல - அன்புறவு - உபதேச அமுதத்தை அந்த விஜய தசமியன்று கானாமுதமாக்கி உலக மகாசபை மூலம் ஜகத்துக்கெல்லாம் பரிமாறும் பேறு எம்.எஸ்ஸுக்கே கிடைத்ததெனில் அவரது பாக்கியத்தை என் சொல்ல?

*

பேசுவது அவதார புருஷரான சுவாமி ஸ்ரீ சத்ய சாயி பாபா. பேசியது பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்.

"நாரதர் மகாவிஷ்ணுகிட்டே, 'ஸ்வாமி! நீ பக்த ஜனங்களுக்கு சதா காலமும் கிடைக்கற இடம் எது? உன் வாசம் வைகுண்டம்னு சொன்னாலும் நீ ஆபத்திலே இருக்கறவங்களை ரக்ஷிக்கறதுக்காக அடிக்கடி வைகுண்டத்தை விட்டு ஓடிப் போயிடறே! யோகிங்க ஹ்ருதயத்திலேயே உன்னைப் பிடிச்சு வைச்சுக்கறாங்கன்னு சொன்னாலும், மாயாவியான நீ, அங்கேயிருந்தும் ஏமாத்திட்டு மறைஞ்சு போய் வேடிக்கை பாக்கறே! சூரிய மண்டல மத்தியிலே ஸவிதா ஜ்யோதியா நீ இருக்கேன்னு சொன்னாலும், ஜனங்க திருஷ்டியில பாதி காலம் அஸ்தமனமா இருக்கறதால அங்கேயும் உன்னை சதாகாலம் அவங்க கிரஹிக்க முடியாது. அதனால, வைகுண்டம், யோகி ஹ்ருதயம், சூர்யன் எல்லாம் நீ ஏதோ இன்ஸ்பெக்ஷனுக்கு வந்துட்டுப் போயிடற ப்ராஞ்ச் ஆஃபீஸுங்க மாதிரிதான் தெரியறது. ஸ்வாமி! நீ எப்பவுமே எங்களுக்குக் கிடைக்கற ஹெட் ஆஃபீஸ் எது?"ன்னுகேட்டார்.

"அதற்கு ஸ்வாமி, "ஆமாம். ஜனங்க பிடிக்கும்படியா நான் சதாகாலமும் வைகுண்டத்திலேயோ யோகிகள் ஹ்ருதயத்திலோ, ஸூரிய மத்தியிலேயோ வசிக்கவில்லை. எப்பவும் என்னைப் பிடிக்கக் கூடிய ஹெட் ஆஃபீஸ் எதுன்னா, என்னுடைய பக்தருங்க கானம் பண்ணுகிற இடம்தான்.

"நாஹம் வஸவாமி வைகுண்டே ந
யோகிஹ்ருதயே ரவௌ ।
மத் பக்தா; யத்ர காயந்தி தத்ர
திஷ்டாமி நாரத॥"

"இங்கேயும் ஸ்வாமி கொஞ்சம் மாயாவியாகத்தான் பேசியிருக்கார். வைகுண்டாதிகளில 'ந அஹம் வஸாமி' - 'நான் வசிக்கவில்லை' என்கிறார். ஆனால், பக்தருங்க கானம் பண்ணுற இடத்திலே 'வஸாமி' - 'வசிக்கிறேன்'ன்னு சொல்லலை! அங்கே 'திஷ்டாமி' - 'நிற்கிறேன்'ன்னுதான் சொல்றார்! நிற்கிறவர் எப்ப வேணா ஓடியும் போயிடலாமில்லே?"

"மத்த பக்தருங்க கானம்னா இப்படி ஸ்வாமி 'திஷ்டாமி'. இநத சுப்புலக்ஷ்மியோட கானம்னா அங்கே வெறும் 'திஷ்ட' இல்லே; (அங்கே அப்படியே 'ப்ரதிஷ்டா'! ஓடிடுவாரோன்னு பயமில்லாம ஸ்திரமாப் பிரதிஷ்டா".)

அச்சமயம் எம்.எஸ். ஏதோ ரெகார்டிங் செய்ய வேண்டியோ, அல்லது பெரியதொரு ஸதஸில் கச்சேரி செய்ய வேண்டியோ இருந்தது. அது நல்லபடி நிறை வேற வேண்டுமென்று, எந்நாளும் தம்மை மாணவியாகவே கருதும் அந்த மாப்புகழ் விதுஷி கவலையோடும் பயத்தோடும் ஸ்வாமி பாபாவிடம் வேண்டினார்.

ஸ்வாமி அங்கு அப்போது கூடியிருந்தோரைப் பார்த்து, "இந்தக் காலத்துல 'ஸரிகம' சிக்ஷை ஆயிட்டாலே 'அஹம்' ஏறிப்போயிடறது! இந்த அம்மா பாருங்க! ஸ்தானத்திலே உச்சிக்குப் போனவிட்டும் இவ்வளோ விநயம்!" என்று தம் பொன் மனம் பொங்கிக் கூறிவிட்டே மேற்சொன்ன நாரத - நாராயண ஸம்வாதத்தை அழகுற இயம்பினார்.

*

அந்த உலகம் புகழும் பெருமையையும் அதனால் குலையாத அவரது அற்புத எளிமையையும் காட்டுவதாக ஒரு நிகழ்ச்சித் துணுக்கு:

அம்மு சுவாமிநாதன் ஒரு வெள்ளையருடன் எம்.எஸ்.ஸைக் காண வந்திருந்தார். அது பிரஸித்தமான கல்கிப் பூங்காவில் அன்னை வசித்து வந்த காலம். அது தெரியாமல் வெள்ளையர் எம்.எஸ்.ஸிடம் அவரது முகவரி கேட்டார். அதைச் சொல்ல எம்.எஸ்ஸுக்கும் தெரியவில்லை! அத்தனை எளிமை!

அம்மு அம்மையார் பகபக வென்று சிரித்தார். வெள்ளையரைப் பார்த்து, "மெட்ராஸ், கேர் ஆஃப் எம்.எஸ். (கவனமாகப் படித்தீர்களல்லவா? - 'மெட்ராஸ், கேர் ஆஃப் எம்.எஸ்') என்று எழுதி உலகத்தின் எந்த மூலையிலிருந்து கடிதம் போட்டாலும் இந்த ஊருக்கு வந்துவிடும்!" என்றார்.

*

அப்படிப்பட்ட அந்த உலகப் பிரக்யாதிக்கு மஹா பெரியவாளின் அருளே காரணம் என்று கூறி, அதனைப் பதி ஸ்ரீசதாசிவமவர்களுக்குச் சமர்ப்பிப்பதே பாரதப் பெண்ணறத்தின் நல்வடிவான அன்னையின் வழக்கம்.

பேசுவது, மீண்டும் மஹா பெரியவாள்தாம்: "எந்த ஸதஸா யிருந்தாலும் சரி, டாக்டர் எம்.கே. கார்ப்பரேஷன் ஸிவிக் ரிஸப்ஷனானாக்கூட சரி, என் அனுக்ரஹத்துலதான் பாடறதான்னா சொல்லிக்கறா? எங்கிட்ட அவ வந்தது தொள்ளாயிரத்து அம்பத்தஞ்சுலே தானே? அதுக்கு எத்தனையோ வருஷம் முன்னாடியே அவளுக்குப் பெரிசாப் பேர் வந்தாச்சே! அது மதுரை மீனாட்சி அனுக்ரஹம்னா".

'மதுர ஸங்கீதம்' என்பதையே காட்டும் இனிஷியல்கள் கொண்ட எம்.எஸ். பிறந்தது அந்த மீனாட்சியின் ராஜதானியான மதுரையில் தான். சங்கீத தேவதையான சியாமளையாகவும் மாதங்கியாகவும் மந்திர தந்திர சாத்திரங்கள் கூறும் தேவிதான் புராண ரீதியில் மீனாட்சி. அவளுடைய அருள் பெற்ற அருமைப் புதல்வி ஸ்ரீமதி எம்.எஸ். ஆகையால், இசை வன்மைக்காகவும் கொடை வன்மைக்காகவும் அன்னை பெற்றுள்ள பட்டங்களுக்கும் பாராட்டுகளுக்கும் கணக்கில்லைதான் என்றாலும் அவரது ஜன்ம ஸ்தலமும் இசைத் தெய்வத்தின் தலைநகரமுமான மதுரையிலுள்ள பல்கலைக்கழகம் தற்போது அவருக்கு 'டாக்டர்' பட்டம் சூட்டிக் கௌரவித்துக் கௌரவம் பெறுவதில் ரஸிக உலகம் தனியானதோர் உவகை காணத்தான் செய்கிறது.

ஈராண்டில் எண்பதைத் தொடவிருக்கும் அப்பெருமகளுக்கும், 'தன் பெருமை தானறியா' அந்த எளிய குழந்தையை இந்த அதிசாமர்த்திய உலகில் கண்ணும் கருத்துமாகக் காத்து உருவாக்கிக் கொடுத்துள்ள ஸ்ரீசதாசிவம் அவர்களுக்கும் அருள்மிகு மீனாட்சி - சுந்தரேச்வரர்கள் மிக்க அருளோடு சாந்தி ஸுகத்தைப் பொழிவாராக! oo





★ திரு ஏ. இக்னேசியஸ்,
சேர்மன்,
இக்கி ரிசார்ட்ஸ்



★ கொடைக்கானலில் அமைந்துள்ள 'குகை சிற்றுண்டிச் சாலை'



★ ஊட்டியில் உள்ள உணவு விடுதி.


இக்கியில் இந்தியாவைக் காணலாம் வாருங்கள்

1988 இல் திருத்தலப் பயணம் செய்பவர்களின் வசதிக்காக வேளாங்கண்ணியில் முதன் முதல் தொடங்கப்பட்டது இக்கி விடுமுறை நிறுவனம். வெளி நாடுகளில் விடுமுறை விடுதிகளின் பயன்களை நன்கறிந்த திரு. இக்னேசியஸ், இந்தியாவின் கலாசாரமும் பல்வேறு மாநில மக்களின் பண்பும் முதலில் இந்திய மக்களிடையே பரவவேண்டும் என்ற எண்ணத்தில் இக்கி ரிசார்ட் இன்டர்நேஷனல் லிமிடெட்டைத் தொடங்கினார்.

"இந்திய மக்களிடையே பெரும்பாலானோர் இன்னும் விடுமுறைக் கலாசாரம் அறியாதவர் களாகவே இருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம் தங்கும் வசதி இல்லாததே எனலாம். விடுமுறைகளில் சாதாரணமாகவே உறவினர்கள் இருக்கும் இடங்களுக்கே செல்லப்பட்டு வந்தன. இதனால் இந்தியாவிலேயே பல இடங்களை நாம் அறியாதவர்களாகி விட்டோம்" என்கிறார் திரு. இக்னேசியஸ். சாதாரண மக்களும் ஓர் இடத்திற்கு ஒரு வாரத்திற்குத் தங்குவதற்காக இவர்கள் விடுதிகளைச் சொந்தமாக்கிக் கொண்டால் இவர்களின் ஏனைய விடுதிகளிலும் செல்ல மாற்று வசதியும் அளிக்கப்படுவதால், இவர்களிடம் விடுமுறை வசதி வாங்கியவர்கள் பல இடங்களையும் கண்டுகளிக்க வாய்ப் படைகிறார்கள். தற்போது கொடைக்கானல், ஊட்டி, மாமல்லபுரம், முதுமலை ஆகிய இடங்களிலே மூன்று விதமான காட்டேஜ்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. பெரியவர் இருவரும் இரண்டு குழந்தைகளும் தங்குமிடம், நான்கு பெரியவர்களும் இரண்டு குழந்தைகளும் தங்குவதற்காக, ஆறு பெரியவர்களும் இரண்டு குழந்தைகள் தங்குவதற்காக என்று மூவகைப்படுத்தியுள்ளனர். "விடுமுறை வசதிகளே (Retail Purchase of Real Estate) சில்லரை முறையில் விற்கப்படும் வீடுகள்" என்கிறார் திரு. இக்னேசியஸ்.

"பல இலட்ச ரூபாயைச் செலவிட்டு நாம் கட்டும் வீடுகளில் அல்லது பிளாட்களில் மின்சாரமும், பலவித வசதிகளுக்காகவும், அதை நல்ல முறையில் பராமரிக்கவும் நாம் தனியாகச் செலவிட்டே ஆகவேண்டியுள்ளது. இந்தக் கருத்தை உணராத மக்களே, நாங்கள் மின்சாரத்திற்கும், மற்ற வசதிகள் செய்து தருவதற்கும் வசூலிக்கும் தொகை குறித்துக் குறை கூறி வந்தனர். இதைக் குறித்து அவர்களுக்கு விளக்கிக் கூறியவுடன் இதனால் எழும் கேள்விகள் இல்லாமல் போயின. விடுதிகளை இவ்வாண்டு உபயோகப்படுத்தப் போவதில்லை என்பதை முன்னமேயே தெரியப்படுத்தினால் அக் காலத்தில் வேறு பயணிகளுக்கு வாடகைக்கு விட்டு அந்த வாடகை உரிமையாளர்களுக்குத் தரப்படும் என்று கூறினால்கூட பலரும் (95% மக்கள்) இதைத் தெரியப்படுத்தாமல் விடுமுறைகளை வீணடிக்கிறார்கள்.

★ முதன் முதலாகத் தொடங்கப்பட்ட வேளாங்கண்ணி விடுதி



இதனால் குறிப்பாக, வெளி மாநிலத்தில் உள்ளவர்கள் மாற்று விடுதி கோரிக் கேட்கும்போது இல்லை என்றே கூறவேண்டி வருகிறது. அவர்கள் வேறு இடங்களை ஏற்பாடு செய்து, இங்கு வந்து பார்க்கும்போது விடுதிகள் காலியாயிருக்குமானால் மன வருத்தமடைகிறார்கள். இதையெல்லாம் உணர்ந்து விடுமுறை விடுதிகளின் உண்மையான கருத்தை உணர்ந்து செயல்படும்போது எல்லாரும் பயனடைகிறார்கள்.

இக்கியில் இப்போது புதுமையாக, இந்தியாவின் 57 நகரங்களில் இவ்விடுமுறை விடுதி வசதிகளை ஏற்பாடு செய்யவுள்ளனர். இதனால் பல நகரங்களைப் பலரும் காண வசதி செய்துள்ளார்கள். கோவா, நைனிடால் போன்ற இடங்களிலும் மேலும் சுமார் 200 இடங்களிலும் இவ் வசதியை இன்னும் ஐந்தாண்டுகளில் செய்து முடிக்கச் செயல் திட்டம் வகுத்துள்ளார் திரு. இக்னேசியஸ். பல இடங்களில் அங்கு பிரபலமடைந்து வரும் விடுமுறை விடுதிகளுடன் இணைந்து செயல்படவும் திட்டமிட்டுள்ளார். சிங்கப்பூர், மலேசியா, அரபு நாடுகள் ஆகிய வெளிநாடுகளிலும் இப்படிப்பட்ட வசதிகளை அங்குள்ள விடுதிகளுடன் இணைந்து செயல்படத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 'It's great going Indeed' என்ற அவர்களது கருத்துப்படி இந்தியாவை முழுமையாகக் காண இக்கியின் மூலமாகவே முடியும் என்பதை உணர முடிகிறது.

— டி.ஆர்.ஜி.



செல்வி ரத்னா

செல்வி ரத்னாவின் நடன நிகழ்ச்சி சமீபத்தில் நடந்தது. ஒல்லியான உடல்வாகு இருப்பதால் இவரது நடனம் வெகுவாக விறுவிறுப்பாக விரைந்தது. "செந்தில் மாநகர் வாழும்" என்ற பந்தணை நல்லூர் ஸ்ரீநிவாஸன் அவர்கள் இயற்றிய வர்ணம் நல்ல ஜதிக் கோர்வைகளையும் கருத்தைக் கவரும் பாவங்களையும் கொண்டிருந்தது. "ஹரிதுமுஹரோ" என்ற மீரா பஜன் நிகழ்ச்சியின் சிறப்புக்கு ஒரு முத்துப் பதக்கமாக ஒளிர்ந்தது. "தாயம் உருட்டலானான். அங்கே சகுனி வென்றுவிட்டான்" என்ற பாரதியின் வரிகளைத் தன் ஆடலில் வெளிக் கொணர்ந்தார் ரத்னா. ஆதிமூலத்தை அழைத்த கஜேந்திரனும், பிரகலாதனைக் காப்பாற்றிய நரஸிம்மத்தின் உக்கிரமும் நம்மை உணர்ச்சி வசப்படுத்தின. 'நட்டுவாங்கத் திலக' மாகிய கலைமாமணி திருமதி இந்திரா ராஜன் அவர்களின், அரங்கத்தை நிமிர்ந்து உட்காரச் செய்யும் நட்டுவாங்கமும், அவரது குழுவினரின் ஒற்றுமையான இசையும், பந்தணை நல்லூர் ஸ்ரீநிவாஸனின் மிருதங்கமும் ரத்னாவின் கச்சேரியை முதல் தரமாக்குவதற்குத் துணையாக நின்றன. ஆசிரியையின் பெயரைப் பிரபலப்படுத்தும் திறமை கொண்ட மாணவிக்கு நம் நல்வாழ்த்துகள்.

—ராஜலக்ஷ்மி சுந்தரம்

ஸ்ரீ ரெட்டியாப்பட்டி சுவாமிகளின் வட்சார்ச்சனை பூஜையும், 'மெஸெஞ்ஜர் டிவைன் அண்ட் கெய்டு' என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழாவும் தவத்திரு சேதுராம் சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றன.

விழாவில் கலைமாமணி விக்கிரமன், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பொன். பாஸ்கரன், டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

புட்டப்பர்த்திக்கு வரும் திருத்தலப் பயணிகளுக்காக, உஜ்வாலா ஃபவுண்டேஷன் பி.லிட்., ஸ்ரீசத்ய சாய் கிராமத்தில் (புட்டப்பர்த்தி - பிரசாந்தி நிலையத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவு) ஏழரை ஏக்கர் நிலப்பரப்பில் '150 தனித் தனி விடுதிகள் கட்டத் தீர்மானித்துள்ளார்கள். ஒவ்வொரு விடுதியும் முழுமையான வசதிகளுடன் கூடிய வரவேற்பறை, சாப்பாட்டறை, தூங்கும் அறை, சமையல் அறை வெளிப்புறத்தில் மிக நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்ட பூந்தோட்டம், இயற்கை மருத்துவ மையம், சைவ உணவகமும் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருப்பதி தேவஸ்தானத்தின் முதன்மை எக்ஸிகியூடிவ் ஆபீசர் டாக்டர் சி.அன்னாராவ் இந்நிறுவனத்தின் சேர்மனாகவும் திரு கே.எம். சௌத்ரி மானேஜிங் டைரக்டராகவும் பொறுப்பேற்றுள்ளார்கள். 1994 இல் பூமி பூஜை போடப்பட்டு 1995 நவம்பர் மாதத்தில் தவத்திரு சத்ய சாயி பாபாவின் 70ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி நடக்கவிருக்கும் வைபவங்களுக்கு வரும் பக்தர்கள் தங்கக்கூடிய வகையில் இவ் விடுதிகள் தயாராகிவிடும் என, திரு சௌத்ரி கூறினார். இதில் தங்குவதற்கு ஒருமுறை கட்டணமாக ரூ. 75,000/- செலுத்தி, வருடத்தில் 15 நாள்கள் தங்கலாம். 10 ஆண்டுகள் கழித்து மேலும் 10 ஆண்டுகள் தங்குவதற்கோ அல்லது கட்டிய தொகையைத் திரும்பப் பெறவோ முடியும் என்றும் திரு சௌத்ரி தெரிவித்தார். ★

ஸ்ரீபஞ்சமுக ஆஞ்சநேய நிலையம்



காஞ்சி காமகோடி பீட பரமாச்சார்ய சுவாமிகள் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பரிபூர்ண அனுக்ரஹத்துடன், சென்னையில் அம்பத்தூருக்கு அருகிலுள்ள ஐயப்பாக்கத்தில் 8 அடி உயரமுள்ள ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேய சுவாமியின் கோயில் கட்ட உத்தேசித்துள்ளோம். அதே வளாகத்தில் ஸ்ரீ ராமர் சந்நிதியும் அமைக்கப்பட உள்ளது. இவற்றைச் செய்து முடிக்க மனை உள்பட ரூ. நான்கு லட்சம் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்புனிதப் பணி நாடெங்கிலுமுள்ள ஆஸ்திக அன்பர்களின் தாராளப் பொருளுதவியினால்தான் முடிக்க முடியும். எனவே இதைக் காணும் ஆஸ்திக அன்பர்கள் தாராளமாகப் பொருளுதவி அளித்து ஸ்ரீராம, ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேய சுவாமிகளின் கோயில் கட்டி முடிப்பதில் பங்குகொள்ள வேண்டுகிறார்கள். காசோலை மற்றும் டிமாண்ட் டிராப்டை Sri Panchamukha Anjaneyar என்ற பெயரில் எடுத்து அனுப்பவும். இதற்கு வருமான வரி விலக்கு 80 G உண்டு. அனுப்ப வேண்டிய முகவரி :

N. இராகவன்
2, கலைவாணி நகர்,
பட்டம்மாள் காலனி,
கீழ்கட்டளை – 601 303

கஜபூஜை

சென்னை அம்பத்தூர் கங்கை நகர் ஸ்ரீபரத்வாஜ ஆசிரமத்தில், பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகள், ஸ்ரீபரத்வாஜ சுவாமிகள் முன்னிலையில், சென்னை நகர போலீஸ் கமிஷனர் ராஜகோபாலன் உலக அமைதிக்காக கஜபூஜையை நடத்தினார்.



'SIC குரூப்'பின் ஊக்கப் பரிசு மழை

பாதுகாப்பு, நேர்மை, நம்பிக்கை – இதுவே SIC குரூப்!

SIC நிர்வாகிகள் குழுவில் கந்த கோட்டத்தின் முதன்மை அறங்காவலர் பி. பாலசுப்பிரமணியம், பார்க் டவுன் பெனிபிட் பண்ட் லிமிடெட்டின் சேர்மன் ஆர். விவேகானந்தன், பர்பெக்ட் பெனிபிட் பண்ட் லிமிடெட்டின் இயக்குநர் கே.சுந்தரம், சூர்யா இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷனின் ஆர்.சூரியகுமாரி, கன்சல்டன்ட் டாக்டர் எஸ். பிரகாஷ் ஆகியோருடன், ஸ்ரீமுத்துக்குமார சுவாமி பர்மனெண்ட் பண்ட் லிமிடெட்டின் இயக்குநர் ஆர். லட்சுமணசாமி இடம் பெற்றிருக்கிறார்.

ஆர். லட்சுமணசாமியை சந்தித்தோம். சிரித்த முகம், வசீகரப் பேச்சு. அமர்ந்திருக்கும் இருக்கைக்குப் பின் சுவரில் அருவியின் எழிலோவியம். கோபத்துடன் வந்தவரையும் மாற்றி சாந்தப்படுத்திவிடக்கூடிய சக்தி அந்த அருவியின் வீழ்ச்சியில் தெரிந்தது.

மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500 வீதம் 20 மாதங்கள் செலுத்தி அல்லது ஒரே தவணையாக ரூபாய் 8250/– செலுத்தி 20+60 மாதங்களுக்குப் பிறகு ரூபாய் 25000/– பெறும் திட்டத்தை விளக்கினார் ஆர். லட்சுமணசாமி.

2999 நபர்கள் மட்டுமே இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். இவர்களுக்கு ஒரு பரிசுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 2 மாருதி வேன் உள்பட 668 விலை மதிப்புள்ள ஊக்கப் பரிசுகளை அளிக்கிறார்கள். "இதற்காகும் தொகை ரூபாய் 40 லட்சமாகும். இது தமிழ்நாட்டில் முதல் முறை" என்றார்.

டெபாசிட்களுக்கு 21% வட்டியுடன் 1% ஊக்கத் தொகையையும் அளிக்கிறது SIC குரூப்.



பி. பாலசுப்பிரமணியம்,



ஆர். விவேகானந்தன்

"இந்தத் தொகையை வீடு கட்ட, பிளாட் வாங்கத் தேவைப்படுபவர்களுக்குக் கொடுத்து உதவுகிறோம். குறைந்த வட்டி விகிதத்தில் வாகனங்கள் வாங்கவும் வசதி செய்து தருகிறோம். சர்வீஸ் சார்ஜ் எதுவும் பெறுவதில்லை.

மக்களுக்கு, தங்கள் சொத்தின் மதிப்பு தங்களுக்குத் தெரிவதில்லை. தேவையற்ற இடைத்தரகர்களின் குறுக்கீடு குறைந்து நேரடியான நல்ல தொடர்புகளுக்கு வளர்ந்து வரும் நிதி நிறுவனங்கள் உறுதுணையாக இருக்கின்றன" என்ற லட்சுமணசாமி 1984 ஆம் ஆண்டு முதல் இந்த நிதி நிறுவனத் தொழிலில் வலம் வருகிறவர்.

"SIC குரூப் கம்பெனிகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 84000 எங்களது விரைவான சேவை மூலம் மக்கள் திருப்தியடைகிறார்கள். மார்ச் 1995க்குள் 100 கோடி ரூபாய் இலக்கை எட்டிவிடுவோம்" என்றார், புன்னகை ததும்ப.

வீட்டினை அடமானம் பெற்று பணம் தரும் நாள்கள் மலையேறி, வீடுகட்ட – வாங்க, பணம் தரும் SIC குரூப்பின் நிறைவான சேவையை மக்கள் புரிந்து கொண்டு பலன் பெறும் முறையைப் பாராட்டி மகிழ்கிறோம்.

— நாகராஜகுமார்

தேசிய நூலக வார விழா

27ஆவது தேசிய நூலக வார விழா 14.11.94 முதல் 20.11.94 முடிய சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில் அமைந்துள்ள கன்னிமாரா பொது நூலகக் கட்டடத்தில் நடைபெற்றது.


படைப்பாளர் தின விழாவில் 'கலைமாமணி' விக்கிரமன் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றினார். துணைப் பொது நூலக இயக்குனர் வே.மோகன்தாஸ் முருகேசன் வரவேற்புரை நிகழ்த்த, முன்னாள் காவல்துறைத் தலைவர் சி.எல்.இராமகிருஷ்ணன் சிறப்புரை நிகழ்த்தினார்.

ப.மாணிக்கம், மனசை ப.கீரன் வாழ்த்துரை வழங்க, நன்றியுரை நவின்றார் திருமதி. பார்வதி. ○

ராம் காஷ்யப் இன்வெஸ்ட்மெண்ட்

ராம் காஷ்யப் இன்வெஸ்ட்மெண்ட் லிட் 1993இல் தொடங்கி 1.4.94 முடிய உள்ள 30.9.94 அரையாண்டு காலத்தில் ரூபாய் 21.76லட்சம் மொத்த லாபம் ஈட்டியுள்ளது. நடுத்தர வர்க்கத்தினரின் தேவைக் கேற்ப, அவர்கள் வீட்டுத் தேவை உபகரணங்கள் குறைந்த வட்டியில் கொடுப்பதே இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள். வீடியோகான் லீசிங் மற்றும் இன்டஸ்ட்ரியல் பைனான்ஸ் லிட் ரூபாய் நாற்பது லட்சத்திற்கு இந்நிறுவனத்தின் பங்கில் முதலீடு செய்துள்ளது. 15,50,000 பங்குகள் ரூபாய் 10விலைக்கே இந்திய மக்களுக்கு 8.12.94 அன்று அறிவிப்பு செய்யும். தற்போதைய இந்தியப் பொருளாதார நிலையும், நடுத்தர வர்க்கத்தினரின் தேவையைப் பூர்த்தி செய்வதில் எடுத்துக்கொள்ளும் ஆர்வமும் கொண்டு பார்க்கும் போது இந்தப்பங்கு வாங்குவதை லாபம் பெறக் கூடிய சிறந்த பங்காகக் கொள்ளலாம். இந்நிறுவனம் திரு.பி.என். தேவராஜனை சேர்மனாகவும், திரு.ஏ.வெங்கடரமணியை மேனேஜிங் டைரக்டராகவும் கொண்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு ஸ்ரீராம் குரூப் நிறுவனங்களின் சேர்மன் திரு.ஆர்.தியாகராஜன் கார்ப்பரேட் அறிவுரையாளராக இருப்பது இந்நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்கிறது. ○

ஆன்மிக உழைப்பு



கர்மயோகி

சக்தி வெளிப்பட்டுச் செயலாவது உழைப்பு, உடலுழைப்பு என்பது நாம் அறிந்தது. ஆசையைக் கட்டுப்படுத்துவது போன்றவையான படபடப்பை வெளியிடாமலிருக்க எடுக்கும் முயற்சி, எரிச்சல் வரும்பொழுது அதைக் காண்பிக்காமல் இனிமையாகப் பழகுவது, பிடிக்காத காரியங்களை மற்றவர்க்காக உணர்வை வற்புறுத்திச் செய்யச் சொல்வது உணர்வின் உழைப்பாகும். புரியாததைப் புரிந்து கொள்ள முயல்வது அறிவின் உழைப்பு எனலாம். தெளிவில்லாத விஷயத்தைத் தெளிவுபடுத்துவது, சிக்கலை அறிவாலும் யோசனையாலும் அவிழ்ப்பது, ஒரு செயலைச் சுருக்கமாகச் செய்ய முனைவது, அதன் சூட்சுமத்தை அறிவது ஆகியவை அறிவால் நாம் மேற்கொள்ளும் உழைப்பாகும்.

ஆன்மாவின் அம்சங்கள் மௌனம், சாந்தி, ஜோதி, அன்பு, திறன், சத்தியம், (உண்மை) அனந்தம், காலம் கடந்த நிலை, அழகு, நன்மை, ஜீவியம் போன்றவை. அறிவால் சிந்திக்கும் போது மனத்தில் ஒளி எழுந்தாலும், மௌனம் தேடிவந்தாலும் மனத்தின் (அறிவின்) உழைப்பு ஆன்மிக உழைப்பாகிறது.

மனித ஜீவனின் நிலைகள், முதல் நிலை உடலிலிருந்து, முடிவான நிலை ஆன்மா வரை உடல், உணர்வு, அறிவு, ஆன்மா என நான்கு நிலைகளில் உள்ளது. நாம் எந்த நிலையிலிருந்து உழைக்கிறோமோ அதற்குரிய பலன் உண்டு. உழைப்பின் நிலை உயர்ந்தால், பலன் அதிகமாகும்; சீக்கிரமாகவும், சுலபமாகவும் கிடைக்கும்.

உழைப்பின் நிலையை உயர்த்துவதெப்படி?
உயர்த்தினால் எப்படி பலன் அதிகமாகும்?

குடும்பம் நடத்துவதும், ஆபீஸில் வேலை செய்வதும் அனைவரும் அறிந்த உழைப்பு. அதை எப்படி உணர்வாகவும், அறிவாகவும், ஆன்மாவாகவும் மாற்றுவது என்று விளக்கினால் பலனிருக்கும். இதுபோன்ற கருத்தை, பள்ளிக்கூடம் நிறுவுவது, கம்பெனி ஸ்தாபிப்பது, பொதுத்தொண்டு செய்வதில் விளக்கினால் புரியும். அது குடும்பத்திற்கும், ஆபீஸ் கடமைக்கும் நேரடியாகப் பயன்படாது என்றாலும் இரண்டிற்கும் சட்டம் ஒன்றே.

அறிவால் உழைப்பது என்றால் உடனே நாம் உடலால் உழைப்பதற்குப் பதிலாக யோசனை செய்வது என்று நினைக்கிறோம். உடலால் உழைக்க வேண்டாம் என நம்புகிறோம். அப்படியல்ல. உடல் உழைப்பின் சாராம்சத்தையும், உணர்வின் இரகசியத்தையும் அறிந்தபின் அறிவால் உழைப்பை மேற்கொண்டால், உடல் உழைப்பும், உணர்வின் உழைப்பும் குறைந்து, யோசனைக்கு முக்கியத்துவம் வந்து ஒன்றரை வருட வேலை ஐந்து மாதத்தில் முடியும். உடல் உழைப்பைத் தவிர்க்க முடியாது; குறைக்கலாம். சாரத்தை அறியும் அளவுக்கே குறைக்கலாம். ஆன்மிக உழைப்பு அறிவின் உழைப்பைவிட உயர்ந்தது.

நம் உழைப்பின் நிலை உயரும்பொழுது சூழ்நிலை உயர்ந்து பெரிய உதவி நம்மைத் தேடி வரும். அதனால் வேலை எளிதில் முடியும். அதிகப் பலனைத் தரும். சீக்கிரம் பலன் வரும். உடல் உழைப்பை மேற்கொள்ளும்பொழுது உழைத்துப் பணம் சம்பாதிக்கிறோம். உழைப்பால் உதவியை நாடுகிறோம். வேலைக்காகப் பல இடங்களுக்கு அலைகிறோம். அதற்குரிய பாணியில் மெதுவாகக் காரியம் கூடிவருகிறது. அதையே உணர்வால் செய்தால், உழைப்பை ஆர்வமாகச் செய்கிறோம். உடனுள்ளவர் ஒத்துழைத்து இரண்டு நாள் வேலை ஒரு நாளில் முடிகிறது. பணம் உள்ளவரின் உணர்வை நாம் போற்றினால், அவர் நமக்கு உதவ முன்வருகிறார். வேலைக்காகப் பல இடங்களுக்கு அலைவதற்குப் பதிலாக, அவ்விடங்களில் உள்ளவரை நாடினால், அவர்கள் உணர்ச்சி

யைப் போற்றினால் அவர்கள் உதவியால் காரியம் எளிதில் முடிகிறது. அப்படிப்பட்ட வரைப் பற்றி நாம், "அவர் நன்றாகப் பழகுவார். போகுமிடத்தில் உதவி கிடைக்கும். எளிதில் காரியம் முடியும்" என்கிறோம். அறிவால் உழைக்க, நம் திட்டத்தைப் பற்றி யோசனை செய்து, நமக்கு உதவும் சட்டங்கள் எவை, ஸ்தாபனங்கள் எவை எனக் கண்டால், பே டத் தொடர்பு ஏற்பட்டு, காரியம் சீக்கிரம் முடிகிறது. அலையாமல், பதற்றப்படாமல் சிந்தனையை மேற்கொண்டால் இது நடப்பதைக் காணலாம். மனம் வேலை முடிந்தபின் பெறும் அறிவை ஆன்மா வேலையை ஆரம்பிக்கும் முன் தெளிவாய்ப் பெறக் கூடியது. ஆன்மிகத் தெளிவு பெற்றால், அறிவால் உழைப்பவர், உணர்வால் உழைப்பவர், உடலால் உழைப்பவர், அவருக்குக் கட்டுப்பட்டு ஒத்தாசை செய்வார்கள். மிக சீக்கிரம், அதிகமான பலன் வரும்.

பல்வேறு நிலைகளில் நிகழ்ந்த பலவற்றை உதாரணமாகக் கூறுகிறேன் : -

1. 3000 ரூபாய் சம்பளக்காரர் மேற்கண்ட கருத்தை ஏற்று அறிவையும், ஆன்மாவையும் துலக்க முயன்றபொழுது 30 கோடி கம்பெனி முதலாளி நண்பராகி, 8 நாள் வேலைக்கு 28,000 ரூபாய் பலன் கிடைத்தது. அவரையறியாமல் அவர் வேலை முடிய வேண்டும் என்று அவரிடம் பழக்கமில்லாதவர் ஒருவர் பிரார்த்தனையை மேற்கொண்டார்.

2. 50 லட்சம் கம்பெனி 100 கோடி கம்பெனிக்கு சப்ளை செய்த பொழுது அந்த முதலாளி இம் முறையைக் கேள்விப்பட்டு, எப்படி பின்பற்றுவது எனத் தெரியவில்லை எனத் திகைத்திருந்த பொழுது, பெரிய கம்பெனி முதலாளி நெருங்கிவந்தார். முறை, விளங்கும் முன்பே பலித்துவிட்டது.

3. பொதுத் தொண்டர் சர்க்காரில் டைரக்டர் ஜெனரலை நெருங்கி தன் திட்டங்களைச் சொல்லவே, அவர் திட்டங்களைப் பாராட்டி ஏற்றுக்கொண்டு நண்பரானார். நாளடைவில் தொண்டு உயர்ந்து, உலகெங்கும் பரவியது.

4. உடலாலோ, உணர்வாலோ செய்ய முடியாத நாட்டுச்சேவைக்கு முன்னோடியான திட்ட அறிவுக்குப் புறம்பானதாக அனைவருக்கும் தெரிந்த காலத்தில், அதன் ஆன்மிக சாரத்தை அறிய முயன்றபொழுது தலைமையான பதவியிலுள்ள ஆபீசர் சேவையைப் பற்றித் தானே கேள்விப்பட்டு, தானே முன்வந்து, பொறுப்பேற்று, வெற்றிகரமாக முடித்துக்கொடுத்தார்.

5. கம்பெனிக்கு சப்ளை செய்பவர்கள், அதிகாரிகளை பவ்யமாக நாடி வணங்கி நிற்பார்கள். சப்ளையர் மேற்சொன்ன சூழ்லிவிருந்ததால், அதிகாரி அவர் 'உதவி'யை நாடி அபரிமிதமான உதவியைச் செய்தார்.

6. 1000 ரூபாய் கடன் பெற முடியாத நிலையிலிருந்த 100 ரூபாய்ச் சம்பளக்காரர் மேற்சொன்ன கருத்தை ஆதாரமாகக் கொண்டு 3000 ரூபாய் கடன் பெற முனைந்தபொழுது 14,000 ரூபாய் பரிசு கிடைத்து, மேலும் கூட்டு முதலாக இலட்ச ரூபாய் கிடைத்தது.

7. எவரையுமே பார்த்துப் பேச அஞ்சும் தாழ்ந்த நிலைப் பட்டதாரி இதுபோன்ற நிலையில் இக்கருத்தைச் சோதனை செய்ய முற்பட்ட பொழுது, பிரபலமானவர் அத்யந்த நண்பராகி, தானும் பிரபலமானார்.

8. இலட்ச ரூபாய் முதல், அளவுகடந்த பெரிய தொகை என உற்றாரும், ஊராரும் திகைத்து நிற்கும்பொழுது, கையில் இரண்டு லட்சத்தைக் கொடுத்து, மேலும் தன் 40 லட்சத்தையும் கொடுக்கச் சம்மதிப்பதாக வாழ்வு பலன் அளித்தது.

9. ஒரு லட்ச ரூபாய் கம்பெனியில் போய் பேசி வாடிக்கை பிடிக்க முடியாதவருக்கு, 40 கோடி கம்பெனி முதலாளி தேடி வந்து, தங்கள் கம்பெனிக்கு வந்து உதவ வேண்டுமென்றார்.

10. 650 ரூபாய் சம்பளம் பெறும் மேனேஜருக்கு 20 லட்ச ரூபாய் கம்பெனி முதலாளி உதவ முன்வந்து 200 கோடி செல்வரிடம் அழைத்துப் போய் உடன் உதவி பெற்றுக் கொடுத்தார்.

11. எந்த விவசாயியும் ஏறெடுத்துப் பார்க்காத நிலத்தை உரக் கம்பெனி பெரும் விலைக்கு வாங்கியது.

12. எளிய பொதுத் தொண்டர் மேற்சொன்ன கருத்தின் உண்மையை ஆர்வமாக, ஆழ்ந்து ஏற்றுக்கொண்டபொழுது பெரும் செல்வாக்கிலிருந்து அமெரிக்க சர்க்காரில் Asst. Secy. of State. உதவிக் காரியதரிசியாக இருந்தவர், தொண்டர் கருத்தை ஆமோதித்து, உதவ முன்வந்தார்.

கிணற்றில் தண்ணீர் இறைப்பவர் மனம் கோணாமல், குறை சொல்லாமல், எரிச்சல் படாமல் தினமும் நீரை இறைத்தால், அவர் வாழ்நாள் முழுவதும் மௌனமாக இறைக்க வேண்டும் என்பதை அவர் அறிவார். இந்த உடல் உழைப்பை, உயர்த்த முன்வந்தால், உதாரணமாக ஆன்மிக உழைப்பாக்க முன்வந்தால், அவர் செய்யும் முயற்சி சரியானதென்றால், கிணற்றுக்கு பம்ப் வரும். உடல் உழைப்பு 90% குறையும்.

தன் ஸ்தாபனத்தில் மாத சம்பளத்தைக் கொடுக்கக் கஷ்டப்பட்டு இரண்டு தவணையாகக் கொடுப்பவர், தன் உழைப்பின் நிலையை

உயர்த்த முன் வந்தால், சர்க்கார் அது போன்ற ஸ்தாபனங்கட்கு சம்பளம் கொடுக்கும் பொறுப்பை ஏற்று முதல் தேதி தவறாமல் கொடுக்கிறது.


40,000 பாட்டில் மருந்து மாத உற்பத்தியாகும் கம்பெனி முதலாளி கம்பெனி நஷ்டத்தை எப்படி ஈடுகட்டுவது என, சிந்தனையை எல்லா வழியிலும் உயர்த்தி, மேலும் அதை ஆன்மிக முயற்சியாக்க, எதற்கும் மனம் அசையக் கூடாது என்ற நிலையை அடைந்தவுடன், புதுத் தொடர்பு ஏற்பட்டு, மாதம் 1.25 லட்சம் பாட்டில் உற்பத்தியாகி, கடன் கரையும் வழி ஏற்படுகிறது.

ஆன்மிக உழைப்பு என்பதை சுருக்கமாகச் சொன்னால், எதற்கும் மனம் நிலைகுலையாத பொறுமை, நிதானம் பெறுவதாகும். பெரிய ஸ்தாபனங்களில் தலைமை வகிப்பவர்கள் முதன் முறை நெருக்கடி ஏற்பட்டால் நிதானமிழப்பார்கள். சாமர்த்தியமாக சமாளிப்பார்கள். அது பலமுறை வந்தபின், நிதானத்தை இழக்காமல் சமாளிக்கும் சாமர்த்தியம் வரும். அனுபவம் வளர்ந்தால், இயல்பாக சமாளிக்க முடியும். அனுபவம் முதிர்ந்தால், தனக்கு அடுத்தாற் போலுள்ளவர் மூலம் சமாளிப்பார்கள். கடைசி நிலையில் நெருக்கடி வராமல் நிர்வாகம் செய்வார்கள். இந்நிலைகளில் அவர்கள் அனுபவம் எப்படி வளர்ந்து, நிறைந்து; முதிர்ந்து, கனிகிறது என்பதை ஆயிரம் புத்தகங்கள் விளக்குகின்றன. எம்.பி.ஏ., படிப்பில் இதைப் பயில்பவர் முதலிலேயே முதியவர் அனுபவத்துடன் செயல்படுகிறார்கள். ஆன்மிக முயற்சி இதனுடைய சாரமாகும். அன்னையை ஆழ்ந்துணர்ந்து பக்தி நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டால் அவரவர் நிலைக்கேற்ப இந்த ஆன்மிக சாரம் அவர்களை வந்தடையும். அதற்கேற்ப குடும்பமோ, ஆபீஸோ, தொழிலோ முன்னேறும்.

கருணை ஆன்மாவை வெளிப்படுத்துவது. கருணையுடன் செயல்பட்டால் ஆன்மா துலங்கும். பொறுமை கருணையின் சாரம். அதனால் அதைவிட உயர்ந்தது. பொறுமையே நிதானம். பொறுமை இறைவனைச் செயலில் வெளிப்படுத்தும். நடைமுறையில் நாமே தேடிப் போகாமல், தானே நம்மைத் தேடி வருவது ஆன்மாவின் செயலாகும்.

கடமைகளைச் செவ்வனே பொறுப்போடு செய்து, தாமதமில்லாமலிருந்தால், மனம் பலனைக் கணக்குப் போடாவிட்டால், ஆன்மா விழிப்புற்று செயல் ஆன்மிக செயலாகும். அது உண்மையானால் மனதில் இனிமை தோன்றும். பிறரிடம் பெருந்தன்மையான தாராளம் உற்பத்தியாகும். "பெருந்தன்மையும், இனிமை

உலகம் உன் வீடு..



'கருமலைப்பழம்நீ

மனிதா! நீதான்
மகத்துவம் மிகுந்தவன்!

உன்
சுட்டு விரலுக்குச்
சூரியனும் தலைவணங்கும்!
இயற்கையும்
எழுந்து நிற்கும்!

விண்ணையும் மண்ணையும்
வசப்பட வைத்தாய்;
விஞ்ஞானச் சுடரானாய்;
மெய்ஞ்ஞானப்பழமானாய்;
ஆனாலும்...
மனிதனாய் வாழமட்டும்
மறந்து விட்டாய்!

வன்முறை; போர்க்குணம்;
தன்னலம்; ஆரவாரம்;
இன்னும்
சாதிமத வெறியால்
ரத்தக் காண்டம்!
ஓ! மனிதா!
உன் மனக்கதவை
என்று திறக்கப் போகிறாய்?

சிக்குண்ட நூலாய்க்
கிடந்தது போதும்!
பின்னப்பட்ட ஆடையாய்
இன்றே உருமாறு!

தனித்தனியே பிரிந்து
தடம்மாறிப் போனது போதும்!
அணி அணியாய் இணைந்து
அகிலத்தைச் சமமாக்கு!

யும் சேர்ந்து இறைவனாகின்றன" என்கிறார் அன்னை.

நம் அன்றாட வாழ்வில் பல விஷயங்கள் இதுபோல் நடப்பதை நாம் இந்தச் சட்டப் படி நடப்பதாகப் புரிந்து கொள்வதில்லை. வாழ்வில் இந்நிலைகள் அடுக்கடுக்காகத் தொடர்ந்து வருவதில்லை. எந்த உயர்ந்த நிலையும் எவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப வந்து அவர் காரியங்களைப் பூர்த்தி செய்வதைப் பார்க்கிறோம்.

- உணர்வில் இதமானவர்கள் திருமணம் செய்ய, தக்க பொருள், மற்றவையில்லாமல் தயங்கித் தயங்கி நின்ற வேளையில் அது பிறரால் பூர்த்தியானால்,

"ஆரம்பித்தேன், பல பக்கத்திலிருந்தும் உதவிவந்தது. முடிந்துவிட்டது" என்பார்.

- கையிருப்பில்லாதவர்கள், ஆனால் இனிமை மிகுந்த இதயம் படைத்தவர்களாக இருந்தபொழுது, அவர்களது அளவுகடந்த மனத்தெளிவும், ஆன்மிக விழிப்பும், சூழலை உந்தி, பலர் மூலம் வீடுகட்டும் யோசனை வர ஆரம்பித்தது. அவர்கள் அதைக் கீழ்க்கண்ட வாறு வர்ணித்தார்கள்,

"யாரோ ஆரம்பித்தார்கள், எப்படியோ முடிந்தது".

- சென்னையில் பெரிய உத்தியோகத்தி லிருந்தவருக்கு ஆபீசில் போதுமான வேலை யில்லை என்பதே குறை. சக ஆபீசர்களின் வேலையை வாங்கிச் செய்து கொடுப்பதே அவர் வழக்கம். அவர் 6 மாத லீவு போட்டு பெங்களூரில் வீடு கட்ட ஆரம்பிக்க நினைத்தார். வீடு பூர்த்தியானபொழுது அவருக்கு லீவு தேவைப்படவில்லை என்று புரிந்தது. அவர்,

"வீடுகட்ட ஆரம்பித்தேன், என் வேலையைப் பலரும் செய்தனர். எவரும் என்னை வேலை செய்ய அனுமதிக்க வில்லை. லீவை ரத்து செய்து சென்னைக்குப் போய், கிருஹப்பிர வேசத்திற்குத் தான் வந்தேன்" என்றார்.

- "பட்டம் பெற்று, மேலும் (Professional degree) தொழிற்கல்வி பெற்று, அதற்குரிய பயிற்சியை, பெரிய கம்பெனியில் சில வருஷம் பெற்று, பிறகு ஆரம்பிக்கும் தொழிலை, பள்ளிப் படிப்பு முடித்த நான், நம்பிக்கையோடு, விவரம் தெரியாமல் ஆரம்பித்தேன். அறிவின் முயற்சியையும், ஆன்ம விழிப்பையும் எப்படிப் பெறுவது என்று தெரியாமல் தைரியமாய் ஏற்றுக் கொண்டேன்" என்றவர் காரியம் பூர்த்தி யான நிலையில் சொல்லியது:

"இவ்வளவு பெரியவர்கள் உதவி தானேவந்து தொடரும் என நினைக்க வேயில்லை. முயன்று பூர்த்தி செய்தேன். கூடிவந்தது".

- அகில இந்திய திட்டம் என்றறியாது குக் கிராமத்தில் ஆரம்பித்து, நாடெங்கும் வெற்றிகர மாகப் பரவிய திட்டத்தைப் பற்றி அகில இந்திய ஸ்தாபனத் தலைவர் சொன்னது,

"ஸ்டண்ட் (Stunt) என நினைத்தேன். பெரிய வெற்றி கிடைத்தது".

- வேலை கிடைக்கவில்லை என்பவருக்கு தொழில் அமைந்தது. அவர் அனுபவம்:

"என்னை உட்காரவைத்து எல்லாரும் செய்தனர். செய்யப் பிரியப்பட்டனர்.

- நாட்டில் முதன்மையான ஸ்தாபனத்தில் 10 நிலைக்குக் கீழுள்ளவர் தலைவராக்கப் பட்ட பொழுது,

"இதெல்லாம் நான் நினைக்கவே யில்லை. எப்படியோ ஆரம்பித்தது. நான் பிடித்துக் கொண்டேன். சிரமமில்லாமல் முடிந்தது".

- ஆயிரம் ரூபாய் சம்பளத்திலிருந்து 500 கோடி வியாபாரத்திற்கு வந்தவர் நிலை,

"நான் இன்றும் கனவிலும் நினைக்க முடியாதது. இப்படிப்பட்ட உதவிகள் வரும் என நினைக்கவில்லை. இந்த உச்சிக்குப் போகும் என்றும் நினைக்க வில்லை" என்றார்.

- சர்வதேசப் புகழை எட்டும் வரை உயர்ந் தவர் தன் முன்னாள் நிலையை நினைத்துச் சொல்வது,

"என்ன நடந்தது, என்று இன்றுவரை தெரியவில்லை. தொடர்ந்து மேலே போய்க் கொண்டிருக்கிறேன்".

கலப்பற்ற நல்லெண்ணம் மட்டுமுள்ள வர்க்கு நடந்தவை இவை. நல்லெண்ணத்துடன் பேராசை, நன்றி மறத்தல் கலந்திருந்தால், பொதுவாக நல்ல ஆரம்பம், தடை, சிரமப்பட்டு நகர்ந்து முடியும். எல்லாரும் கண்டது "பிர மாதமாக ஆரம்பித்து, ஒரு நிலைமைக்குப் பிறகு தடைவந்து நின்றுவிடுகிறது" என்பதே. நாம் அவசரப்பட்டால், அதிகாரம் செய் தால், பேராசைப்பட்டால், தடை எழும். தடை யற்ற முடிவு அரிதான நல்லவர்க்குண்டு. அதன் சுருக்கம், "வேலையை அமைதியாக அன்னையை நினைத்து, சந்தோஷமாக, ஆர வாரமின்றிச் செய்தால், வானைப் பிளந்து கொண்டு கொட்டும்".

நாம் இறைவனை நினைந்து தியானம் செய்கிறோம். இறைவனை வேலையில் ஒரு நிலைப்படுத்துவது ஆன்மிக உழைப்பு.

அதுவே பூரண யோகதத்துவம். நம் உடலுழைப்புக்கும், ஆன்மிக உழைப்புக்கும் இடையேயுள்ளவை, 4,5 கட்டங்கள். ஆன்மிக உழைப்பே முடிவான நிலை என்பதால் பலன் உலகில் இன்றில்லாத உச்ச கட்டமாகும்.



இறைவனின் திருமைந்தர் இயேசு கிறிஸ்து

உலக வரலாற்றில் ஆன்மிக நெறியை வளப்படுத்திய பலருள் இறைமைந்தர் எனப் போற்றப்படும் இயேசு கிறிஸ்து குறிப்பிடத் தகுந்தவர் ஆவார். இறைமனிதத் தொடர்பு வாழ்க்கைக்கு அடிப்படையானது. இன்றியமையாதது என்பதை அவர் தம்முடைய வாழ்க்கை, பணி மற்றும் மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இறைவன் இறைவனே; மனிதன் மனிதனே என்றாலும் இறைவன் இருப்பது மனிதனுக்காக; மனிதன் வாழ்வது இறைவனுக்காக என்ற பேருண்மை அவருடைய திருப்பணியிலும் அருளுரைகளிலும் பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

இறைவன் தாம் படைத்த மாந்தரின் பேரில் எந்த அளவுக்கு அன்பும் அக்கறையும் கொண்டவர் என்பதையே இயேசு கிறிஸதுவின் உலக வருகை எடுத்தோதுகின்றது என்று இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியிருக்கும் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நற்செய்தி நூலாசிரியர்களும் ஒரு முகமாக எடுத்துச் சொல்லுகிறார்கள். இறைவன் தம்முடைய ஒப்பற்ற திருமைந்தராகிய இயேசுவை உலகிற்குப் பெருங்கொடையாக வழங்கியதன் மூலம் தம்முடைய அன்பின் பெருக்கத்தை வெளிக்காட்டியுள்ளார் என்கிறார் யோவான் (யோவான் 3:16) இயேசுவின் உலக வருகை அனைத்துலகிற்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருவது என்பதே அவர் பிறப்பின்போது வானத் தூதுவர் வழங்கிய செய்தி என்கிறார் லூக்கா.

வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில பாலஸ்தீனர் எனப்பட்டு வந்த இன்றைய இஸ்ரேல் நாட்டின் யூதேயா மாநிலத்தில் பெத்லகேம் என்னும் சிற்றூரில் இயேசு பிறந்தார் என்றாலும் அவர் உலக மக்கள் அனைவருக்கும் உரியவர்; அவர் அருளும் நலன்களும் ஆசிகளும் வாழ்வும் வளமும் யாவருக்கும் எக்காலத்துக்கும் உரியவை ஆகும். இது அவருடைய வாழ்க்கையிலும் பணியிலும் விரவிக் கிடக்கின்ற உண்மையாகும்.

இயேசு தம்முடைய முப்பதாவது ஆண்டிலிருந்து ஏறத்தாழ மூன்றாண்டு காலம் பாலஸ்தீன நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று ஆற்றிய பணி நிகழ்ச்சிகளிலும் வழங்கிய உபதேசங்களிலும் அவர் இறைவனின் ஆட்சியைப் பற்றியும், அதைத் தான் கொணர்ந்திருப்பதைப் பற்றியும் மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். இறையரசு என்னும் அருளாட்சியில் இறைமனிதத் தொடர்பும், மாந்தருக்கிடையே நிலவவேண்டிய அன்புறவும் இவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றன:

இறைவன் கொடுங்கோல் மன்னனைப் போன்றவர் அல்லர். அவர் தம்முடைய குடிமக்கள் அனைவருக்கும் தந்தையாக இருப்பவர். அவருடைய அன்புக்கும் ஆட்சிக்கும் அரவணைப்புக்கும் உட்படாதவர்கள் எவரும் இலர். அவருடைய திருச்சித்தத்தை அறிந்து கொண்டு அதற்கு அடங்கி நடப்பவர்கள் அனைத்துப் பேரும் அவருடைய அடியார்கள். அவர்கள் இயேசுவின் முகத்தில் இறைவனைக் காண்கிறார்கள்.

இறைவன் மலரச் செய்துள்ள இறை ஆட்சியில் இயேசுவின் மூலம் அவருடைய அன்பின் திறமும் மீட்பின் மாண்பும் வெளிப்படுகின்றன. தன்னலம் கருதாது பிறர் நலத்தையே கருதி வாழும் வாழ்க்கையே இறையாட்சிக்கு உட்படுகிறவர்களின் வாழ்க்கை. யாவரையும் நேசிக்க வேண்டும் என்பது இறைவனின் பொதுவான கட்டளை என்றாலும் சிறப்பாகப் பகைவரிடம் அன்பு காட்ட வேண்டும்; துன்பம் இழைப்பவர்களின் நலனுக்காக இறைவனிடம் வேண்டுதல் செய்ய வேண்டும். நம் உடைமைகளைப் பறித்துக் கொள்ள விரும்புவோருக்கும் இணங்க வேண்டும். சிறு உதவிகளை நாடி வருவோர்க்குப் பேருதவிகளைச் செய்யத் தயங்கக் கூடாது.

இவற்றை அண்ணல் இயேசு தம் மலைப் பொழிவிலும் (மத்தேயு 5,6,7) பிற உரைகளிலும் கூறியதோடு நில்லாமல் கொடியவர்கள் பகைவர்கள் எனத் தகுந்தவர்கள் வாயிலாகச் சொல்லொணாத் துன்புறுத்தல்களுக்கு அவர் ஆளாகிய போதும் சிலுவை மரணத்தைத் தழுவி ஏற்றுக்கொண்ட போதும் அதைத் தம் வாழ்க்கையின் நடைமுறை உண்மையாக்கி விட்டார்.

ஒரு மலை உச்சியிலிருந்து விறகுவெட்டிச் சுமைகளைத் தலை மீது வைத்துக் கொடிய கடும்

அருள்திரு. டாக்டர்
தி. தயானந்தன்
பிரான்சிஸ்

வெயிலில் இறங்கி வருவோர் களைப்படையும்போது, அவர்களுக் கென்று சில இடங்களிலாவது சுமைதாங்கிகள் அமைப்பது நலம் பயக்கும் செயலாக அமையும். இவ்வாறு சுமைதாங்கிகளை அமைக்க விரும்பிய ஒருவர் அவற்றை எந்த எந்த இடத்தில் நிறுவுவது என்பதைப் பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வரலானார். அந்த முடிவின்படி அவர் மலையுச்சிக்குச் சென்று தம் தலையின் மீது ஒரு விறகுச் சுமையைச் சுமந்து கொண்டு கொடிய வெயில் நேரத்தில் கரடு முரடான பாதை வழியே இறங்கி வந்தபோது எப்போதெல்லாம் அவருக்கு மிகுந்த களைப்பு ஏற்பட்டதோ அப்போதெல்லாம் சுமையைத் தரையில் ஊன்ற வைத்து அந்த இடங்களைக் குறித்துக் கொண்டு மலையி லிருந்து இறங்கிய பின்னர் அந்த இடங்களில் சுமைதாங்கிகளை அமைப்பதற்கு ஒழுங்கு செய்தார். இவ்வாறு மனித வாழ்க்கையில் எதிர்ப்படும் துன்ப துயரங்களை யும் கொடுமைகளையும் வேதனை களையும் மனித நிலையிலிருந்தே அனுபவித்துக் கண்டவராகிய இயேசு தம்மைப்போல் துன்பங் களுக்கும் சோதனைகளுக்கும் ஆளாகிறவர்களின் களைப்பையும் துன்பங்களையும் தகுந்த கட்டங் களில் தீர்க்க வல்லவராக - சிறந்த சுமைதாங்கியாக - விளங்கினார். வருந்தி உழைத்துப் பாரஞ் சுமப்ப வர்களைத் தம்மிடம் வந்து இளைப்பாறுதல் பெற்றுக் கொள்ளுமாறு மக்களுக்குத் தம் அழைப்பை விடுக்கின்றார்.

தனி மனிதர்கள் படும் துன் பங்கள் மீது மட்டும் கவனம் செலுத்தாமல், சமுதாயத்தில் ஒட்டு மொத்தமாக ஒடுக்கப் படுகின்ற - ஒதுக்கப்படுகின்ற மக்களின் நலத்தில் மிகுந்த அக் கறை காட்டி அவர்களோடு ஒன்றி வாழ்ந்து அவர்களின் நலனுக்காகப் போராடியவர் இயேசு. அவர் காலத்து மதத் தலைவர்களையும் மத வெறியர்களையும் அவர் கடிந்து கொள்ளத் தவறவில்லை. அவர்களின் போலி வேடங்களை யும் பொய்யான உபதேசங்களை யும் அவர் அம்பலப்படுத்தினார். தமக்கு முன்பு வாழ்ந்த யூதத் தீர்க்கதரிசிகள் எனப்படும் இறை யுரையாளர்கள் ஏசாயா, ஆமோஸ் மீகா போன்றவர்களின் தீர்க்க தரிசன உரைகளைச் சார்ந்து தம் முடைய அருளுரைகளை வழங்கி உண்மையான உள்ளார்ந்த இறை யுறவு நெறிக்கு ஒவ்வாத முறைமை களையும், வழக்கங்களையும் அவர் எதிர்த்தார். இதன் காரணமாகவே மதத் தலைவர்கள் அவரை ரோம அரசனின் ஆளுநரிடம் ஒப் படைத்துச் சிலுவை மரணத்திற் கான தீர்ப்பு வழங்கச் செய் தார்கள்.

இயேசுவின் சிலுவை மரணத் தால் அவரை அழிக்க முடியாமல் போய்விட்டது. உயிருற்று எழுந் தவராக இறைவாழ்வை யாருக்கும் வழங்குபவராக - என்றென்றும் மாறாதவராக - அவர் திகழ்கிறார். இயேசுவை இறை மைந்தராக, இறையுரையாளராக, இறையாசி யைக் கொணர்ந்தவராக மட்டு மல்லாமல் உலகில் புதுமைகளை யும் புன்ரமைப்புகளையும் புரட்சி வெளிப்பாடுகளையும் காண முற் படுவோருக்கு உந்துதலும் உற்சாக மும் தருகின்றவராகவும் விளங்கு கிறார்.

✦ ✦ ✦

இயேசு கிறிஸ்து அறிமுகப் படுத்தி வாழ்ந்து காட்டிய நெறியைக் கிறிஸ்து நெறி என்று கூறலாம். அது கிறிஸ்தவ நெறியை விடப் பரந்துபட்டதாகும். அது உலக மாந்தர் அனைவருக்கும் உரியதொரு நெறி எனலாம். எல்லாச் சமயங்களும் ஏற்கும் நெறி என்றும் அதை விளக்க லாம். இறைநேயம், இறை உறவு, ஆன்மநேயம், அருளறம், மனித நேயம், மக்கள் நலம் ஆகிய வற்றையே அது சிறப்பிக்கிறது என்று சுருங்கக் கூறலாம். இந் நெறியின் மாண்பை உணர்ந்து கொண்டவர்கள் கிறிஸ்துவின் அன் புக்கு ஆட்படுவோர் ஆகின்றார்கள்.

நாடு, மொழி, சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து கிறிஸ்து நெறி வாயிலாகக் கிறிஸ்துறவு நிலையை அடைய முடிகின்றது. இந்த அனுபவத்தைக் கிறிஸ்துவின் அடியார்கள் பல வகையிலும் விளக்கிக் கூறுகிறார்கள். பவுலடி யார் தம்முடைய வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் - கிறிஸ்துவோடு - கிறிஸ்துவுக்காக என்றே அமைந்து விட்டதாகக் கூறுகின்றார். "எனக்கு வாழ்க்கை என்றாலே கிறிஸ்து என்றுதான் பொருள்" என்பது அவர் வாசகம்.

நம் நாட்டுச் சமயப் பேரறிஞர் களும், கவிஞர் பெருமக்களும் கிறிஸ்து நெறியை வியந்து போற்றி வரவேற்றுள்ளார்கள். குறிப்பாகத் தமிழ்க் கவிஞர்கள் இறைவனின் திருமைந்தரான இயேசு கிறிஸ்து வுக்கும், அவர் நிறுவியுள்ள கிறிஸ்து நெறிக்கும் தலை வணங்கும் வகையில் எழுதியுள்ள கவிதை வரிகளும் பாடல்களும் நம் உள்ளத்தைத் தொடுபவையாகும்.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் 1927ஆம் ஆண்டில் வெளியிட்ட சுவாமி சுத்தானந்த பாரதியாரின் இயேசுநாதர் சரிதை என்னும் நூலில் கவிஞர் இவ்வாறு இயேசுவை விளித்துப் பாடு கின்றார்.

மரணத்தை வென்றவனே!
மன்னவனே! அன்புருவே!
தரணியுய்யப் பிறந்தவனே!
தாவீ தரசன் குலக் கொழுந்தே!
கருணையுட னவதரித்தாய்!
காத்திடவே மெய்யறத்தை
அரணெமக்குன் திருவருளே
அறிவெல்லா மமர்ந்தவனே!

இயேசு என்றென்றும் உலக மக்களுக்கு ஈடேற்றம் அருளத் தோன்றியவர்; மெய் அறத்தைப் பாதுகாத்துக் கொள்ள அடைக் கலம் அருள்பவர்; மற்றும் யாவ ரின் மனத்திலும் வீற்றிருப்பவர் என்னும் உண்மைகளை இக் கவிதை வரிகளில் கவிஞர் கோடிட்டுக் காட்டுகிறார்.

தமிழ்ப் பெரியார் திரு.வி.க. 1945ஆம் ஆண்டில் எழுதி வெளி யிட்ட கிறிஸ்துவின் அருள்வேட்டல் என்னும் நூலில் இயேசுவின் பெருமையைப் பலவாறு புகழ்ந்து விளக்கும்போது,

"இயேசு கிறிஸ்து பெருமானே
எந்த உயிர்க்கும் அருள்வோனே.

கிறிஸ்து கிறிஸ்து என்போமே
கிட்டிய பாவம் பின்போமே.



அன்பை அளிக்க வந்தோனே
ஆருயிர் உலகுயத் தந்தோனே.

★ ★ ★

இயேசுவே என்றதும் நெஞ்சுருகும்
எல்லாப் பாவமும் இரிந்தருகும்.

சிலுவையில் நின்ற செழுங்கோலம்
சிந்தையில் படிந்திடின் நறுஞ்சீலம்.

மரித்தும் எழுந்த சத்தியமே
மரணம் இன்மையின் தத்துவமே."

என்று உளம் உருகிப் பாடுகின்றார்.

கிறிஸ்தவக் கம்பன் எனப் போற்றப்படுகின்ற இரட்சண்ய யாத்திரிக ஆசிரியர் கவிஞர் எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை இயேசுவின் சிலுவைக் கோலத்தைத் தம் கண்முன் நிறுத்திப் பார்க்கும் போது, அங்கு சித்திரவதைக்குள்ளாகிச் செந்நீர் சொரிந்து நிற்கும் இயேசுவை,

"காயொளியிற் கதிர்பரப்புங்
களங்கமில் நீதியின் சுடரை
பாயொளிகொள் பசும்பொன்னைப்
பணிக்கருஞ் சிந்தாமணியைத்
தூயொளிகொள் நித்திலத்தைத்
தூண்டாத சுடர்விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச்
சிலுவைமிசைக் கண்டேனே!

* * *

உள்ளமுவப் புறுதேனை
உயிர்க்குயிரை உலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச்
சிலுவை மிசைக் கண்டேனே."

என்று தம் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார். திருத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருக்கோலச் சிறப்பினை நம் நாட்டுப் பக்திக் கவிஞர்கள் விளித்துப் பாடியுள்ள பாங்கினைத் தழுவி அமைந்திருக்கும் இவ்வரிகள் நம் நெஞ்சை உருக்கவல்லவை.

சைவ சமயப் பெரியார்களின் நமச்சிவாயப் பதிகத்தைத் தழுவிக் கிருஷ்ணப்பிள்ளை உளமுருகிப் பாடியிருக்கும் திருநாமப்பதிகத்தில் இவ்வாறு இயேசுவின் மகிமையைக் கூறி மகிழ்கிறார் :

"மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்
இந்நிலத் திலும்பிறி திலையென் றேமறை
பன்னியேத் தெடுப்பது பாவ ஜீவருக்கு
இன்னமு தாயது இயேசு நாமமே".

கிறிஸ்து நெறியைப் போற்றிப் பேணுகின்றவர்கள் கிறிஸ்துவின் மாண்பினையும், கண்டுணர்ந்து மகிழ்கிறார்கள்.

அந்த சிவப்புப் பெண்



ஆர். இராமமூர்த்தி

சென்னை சென்ட்ரலில் ரிசர் வேஷன் சார்ட்டை ஒரு நோட்டம் விட்டதில் தனக்கு நடு பர்த்தும், கட்டாக்கில் இறங்கப் போகும் ஒரு தமிழ்க் குடும்பத்திற்கு ஐந்து பர்த்தும் என்று புரிந்து கொண்டான், ராஜன். வழக்கம்போல் அவனை வழியனுப்ப அவன் பெரியப்பாவும் பெரியம்மாவும் வந்திருந்தார்கள். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி. திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்கள். நினைவெல்லாம் புவனேச்வருக்குப் போய் விட்டது! சமீபத்தில் அவன் எழுதியிருந்த அலுவலகப் பரீட்சையில் என்ன 'ரிசல்ட்' வருமோ என்ற கவலை அவனுக்கு!

வண்டி நகர்ந்த பிறகுதான் அவன் கம்பார்ட்மெண்டில் இருந்தவர்களை தீர்க்கமாக நோக்கினான்.

வயதான ஒரு தம்பதி. இளம் பெண்கள் இருவர். ஒரு வாலிபன். இரு பெண்களில் ஒருத்தி அந்த வயதான பெண்மணியின் ஜாடையிலேயே இருந்தாள். அதிலிருந்து அவள் அந்த அம்மாளின் மகள் என்று தெரிந்தது. மற்றவளை எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. உருண்டை முகம், நல்ல சிவப்பு. 'பளிச்'சென்று இருந்தாள். 'காட் பிளஸ் யூ பார் யுவர் பியூட்டி.' என்று அவனையறியாமல் முணுமுணுத்தான், ராஜன்.

காலையில் விஜயவாடாவில் காபி சாப்பிட்டான். அந்த சிவப்புப் பெண், அவர்கள் சம்பாஷணையில் அவனையும் கலந்து கொள்ளச் செய்ய எவ்வளவோ முயற்சி செய்தும் தோற்றுவிட்டது! ஏனோ எல்லாவற்றிற்கும் அவனிடமிருந்து, "யெஸ்!" "நோ!" என்ற பதில்களே வெளி வந்து கொண்டிருந்தன.

சற்று நேரம் கழித்து அவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த இட்லியைச் சாப்பிடத் தொடங்கினார்கள். அந்த சிவப்புப் பெண் நாலு இட்லிகளைத் தையல் இலையில் வைத்து அவனிடம் நீட்டினாள். அதிர்ந்து போனான், ராஜன்! "தாங்க்யூ!" என்று சொல்லித் திருப்பி விட்டான்!

ராஜமந்திரியில் வண்டியை விட்டு காலைச் சிற்றுண்டிக்காக இறங்கினான். வெளியே வந்தவன் திடீரென்று 'கம்பார்ட்மெண்ட் நம்பரை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று தோன்றியதால், திரும்பியவன், அந்த வயதான அம்மாவின் பேச்சைக் கேட்டு நின்றான்.




"உனக்கேம்மா அத்தனை காரிசனம்? அந்தப் பையனுக்கு ஏன் இட்லி கொடுத்துவிட்டு அவன் வேண்டாம் என்றபின் அதைத் திரும்பப் போட முடியாமல் நீயே சாப்பிடுகிறாய்?

"இல்லை, மாமி! ஏதோ தோணித்து! நம்ப கூடவே உக்காந்து இருக்கிறாரேன்னு! நீங்க உங்க வீட்லே எப்படி உபசாரம் பண்றீங்க! நிச்சயம் அந்த மாதிரியே இந்தப் பையனுக்கும் நீங்க இட்லி கொடுக்கச் சொல்வீங்கன்னுதான் நான் நினைச்சேன்! இன்னிக்கு அப்புறம் அவன் யாரோ, நம்ப யாரோ!"

சிற்றுண்டி சாப்பிட்டுத் திரும்பிய ராஜன் அந்தப் பெண் கம்பார்ட்மெண்ட் வாஷிங் பேஸினில் காரியரை அலம்பிக் கொண்டிருந்ததைக் கண்டான். ராஜனைப் பார்த்து அந்தப் பெண், "டிபன் சாப்பிட்டீங்களா?" என்று விசாரிக்கவே, அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

"ஓ! யெஸ்! தாங்க்யூ!" என்று வழிந்துவிட்டு தன் இருக்கையில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

இனி வால்டேர் ஸ்டேஷன் வரும் வரை எல்லாரும் ஒரு தூக்கம் போடுவார்கள். ராஜனுக்குத் தூக்கமே வரவில்லை. இத்தனை அழகாக இருக்கும் இந்தப் பெண் தன்னிடம் எப்படி வலிய வலியப் பேசினாள் என்றே அவனுக்குப் புரிய



வில்லை! 'கானன் டாயில்' எழுதிய கதைகளை நிறையப் படித்திருக்கிறானாதலால், அரைத் தூக்கத்தில் இருக்கும் அவர்களை 'கானன் டாயில்' வழியில் ஒரு கணிப்பு செய்தால் என்ன என்று தோன்றிற்று.

பெரியவர் இன்னும் வேலையிலிருந்து ரிடையர் ஆகவில்லை, ஏனெனில் டிப்டாப்பாக இருக்கிறார்; அவருடைய மனைவி உடம்பு ஊதி இருந்தாள்; டீயில் சர்க்கரை போட்டுக் கொள்ளவில்லை; நிச்சயம் 'டையபடீஸ்' கேஸ். அவர்களுடைய பெண் நிறைய ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருந்தாலும், இன்னும் காலேஜ் படிப்பை முடித்துவிட்டாளா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பெண்ணின் அண்ணன் நிறையப் படித்திருக்க வேண்டும்; 'பிஸினஸ் ஸ்டாண்டர்ட்' பத்திரிகை வாங்கினான்; "வாக்மேன்" வைத்துக்கொண்டு சதா கேட்டுக் கொண்டிருந்தான்.

அந்தச் சிவப்புப் பெண் யார்? அவர்களுக்கு என்ன உறவு? ஒன்றும் புரியவில்லை, அவனுக்கு. மிக எளிமையான தோற்றம் தந்து கொண்டிருந்தவள் யாராயிருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தான் ராஜன்.

வால்டேரில் இறங்கி மதிய உணவை முடித்துக் கொண்டான். இதற்குள் அவன் மனதில் அந்தச் சிவப்புப் பெண் நிறைந்திருந்தாள். இதுதான் காதல் என்பார்களோ! அவனுக்குப் புரியவில்லை.

நல்ல வேளையாக வால்டேரில் வண்டி கிளம்பத் தாமதமாயிற்று. "ரிசர்வேஷன் சார்ட்" இன்னமும் ஒட்டியிருந்தது. அதிலிருந்து 'அந்த சிவப்புப் பெண் கிருஷ்ணசாமி என்பவருடன் வருகிறாள். பெயர் கோகிலா, வயது 20' என்று தெரிந்தது. ஆனால் அவள் முகவரியை அறிந்து கொள்ள வாய்ப்பில்லை.

இரவு பத்து மணிக்கு மேல் வண்டி புவனேச்வரை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் அரை மணியில் அவர்களும் இறங்க வேண்டியதால் அதற்குத் தயாராக உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது திடீரென்று கிருஷ்ணசாமியைப் பார்த்து "ஸார்! கட்டாக்கில் எங்கே வேலை பார்க்கறீங்க? நான் இங்கே ஏ.ஜி.ஸ். ஆபீஸ்!" என்றான், ராஜன்.

"எங்களுக்கு இன்னும் பிரயாணம் முடியவில்லை. நான் கோல் மைன்ஸில் வேலை செய்கிறேன். கம்பெனி கார் வந்தால் போவேன்! இல்லைன்னா, மறுபடி ரயிலோ, பஸ்ஸோதான்!"

"இதென்ன? அதிகம் பேசாமல் எப்போது பார்த்தாலும் மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டு படுத்துக் கிடக்கிறான்?" என்று ஆச்சரியப்பட்டனர், அவன் பெற்றோர். "ஐ ஆம் இன் லவ்" என்று வாயை விட்டே கூவி விட்டான், ஒரு சமயம். இதை ராஜனின் தாயார் கேட்டு விட்டாள்.

ஆபீஸ் பரீட்சை முடிவுகள் தெரிந்தன. அதில் தேறியிருந்தான். உடனே பிரமோஷனும் ஆகி விட்டது. அவனுக்குத் திருமணம் செய்துவிட வேண்டும் என்று பேச்சை எடுத்தாலே, 'ஒண்ணும் வேண்டாம்' என்று வெறுமையுடன் கத்தினான், ராஜன்.

ராஜனின் நெருங்கிய நண்பன் மிஸ்ரா. இருவரும் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள். இருவரும் சேர்ந்துதான் பரீட்சை எழுதினார்களே தவிர மிஸ்ரா பாஸ் செய்யவில்லை. ஒவ்வொரு பரீட்சைக்கும் ராஜனின் வீட்டுக்கு வந்து படிப்பான். ராஜனின் வீட்டில் வெகு சுதந்திரமாக இருப்பான்.

"ஏம்பா மிஸ்ரா! ராஜனுக்கு என்ன ஆச்சு? ஏன் எப்போது பார்த்தாலும் இப்படி உத்திரத்தையே பார்த்துண்டு படுத்திருக்கான்?"

"அங்கிள், அது வந்து..."

"என்னப்பா, வந்து, போயி? அவன் எதையும் உனக்குக்கூட சொல்லலைன்னா நீ என்ன இன்டிமேட் ஃபிரண்டு?"

"இல்லை அங்கிள்! எங்கிட்ட அவன் எல்லாம் சொல்லி விட்டான்".

"இதோ பார் மிஸ்ரா! எங்கிட்டே அவன் ஒண்ணும் சொல்ல மாட்டேன் என்கிறான். உங்கிட்டே நம்பிக்கை வைச்சு சொல்லியிருக்கான்னா, நீதான் அவனோட பிரச்னையைத் தீர்த்து வைக்கணும்".

"அங்கிள்! அது வந்து அவனுக்கு ஒரு பெண் மேலே 'லவ்' வந்துடுத்து! உங்க ஊர், உங்க ஜாதிதான்! ஆனால் அவள் கட்டாக்கிலே இறங்கிப் போகும் ஏதோ 'கோல் மைன்ஸ்' 'ஏரியா'விலே இருக்காள். அவளை எங்கே தேடுவது?"

"இவ்வளவுதானா? அநேகமாக "தால்சேர் கோல் மைன்ஸ்" ஆகத்தான் இருக்கும். உன் தாத்தா தான் அங்கு ஹோட்டல் வச்சிருக்கிறாரே! அவர் மூலம் கண்டு பிடிக்க முடியாதா?"

"நாங்க இரண்டு பேரும் இந்த சனிக்கிழமை தால்சேர் போறோம். அவளைப் பத்தி தெரிஞ்சிண்டப்புறம் உங்ககிட்ட சொல்லலாம்னு ராஜன் இருந்தான். என்னை நீங்க கட்டாயப்படுத்தி விஷயத்தை வரவழைச்சிட்டீங்க!"

"போயிட்டு வாங்க! உனக்கு அடுத்த வருஷம் நிச்சயம் பரீட்சை பாஸ் ஆயிடும்!"

தென்னிந்தியர்களுக்கு வெண்ணெய் சப்ளை செய்யும் ஒரு தமிழர் மூலம் கிருஷ்ணசாமியைப் பற்றிய விவரம் தெரிந்தது.

அவர் வீட்டில் இருக்கும் இரு பெண்களில் ஒருத்தி 'கோல் மைன்ஸில்' அலுவலகத்தில் வேலை பார்ப்பதாகவும், கிருஷ்ணசாமி 'கோல் மைன்'ஸில் வேலை பார்ப்பதாகவும் தெரிந்து கொண்டார்கள். மறுநாள் நேராக அந்த அலுவலகத்துக்குச் சென்றார்கள்.

"மேடம்! என் பேர் மிஸ்ரா! இந்த ஊர்க்காரன்தான். என் தாத்தா இங்கு ஹோட்டல் வைத்திருக்கிறார். இவர் ராஜன்! என்னுடைய நெருங்கிய நண்பர். உங்க ஊர்க்காரர். உங்க கிராமத்திலிருந்து வந்திருக்கிறார். உங்கள் பெற்றோர் கிட்டேயிருந்து உங்களுக்கு ஏதோ சமாசாரம் கொண்டு வந்திருக்கிறார். உங்கள் பாஷையில் தனியே நீங்கள் இருவரும் வெளியே போய் பேசிக் கொள்ளுங்கள்" என்றான் மிஸ்ரா.

அந்தப் பெண் ராஜனைப் பார்த்து ஒரு புன்னகையை வீசினாள். இருவரும் வெளியே சென்றார்கள்.

"உங்க பெயர் என்ன?"

"என் பெயர் ராஜன்".

"என் பெயர் கோகிலா! உங்க பெயர் ராஜன்னு எனக்கு முன்ன மேயே தெரியும்! எப்படீன்னா ரயில் பிரயாணத்தின்போது நீங்க வாங்கிய பத்திரிகையிலே உங்க பேரை எழுதித் தேதி குறிச்சீங்க. ரயில்லே நான் படிச்சேனே!"

"உங்களை அன்னிக்கு ரயில்லே பார்த்த பிறகு மறுபடியும் உங் களைப் பார்த்துப் பேசணும் என்று ரொம்ப ஆவலாக இருந்தது. உங்களைப் பத்தி நல்லாத் தெரிஞ் சுக்கணும்னும் விரும்பினேன். எப் படியோ மிஸ்ரா மூலம் விசா ரித்துக் கொண்டு வந்துட்டேன்".

"ரொம்ப தாங்க்ஸ்! எனக்கும் உங்களை மறுபடி பார்க்கிறதிலே ரொம்ப சந்தோஷம்".

"உங்களைப் பத்தி இன்னும் தெரிஞ்சுக்கணும்னா யாரைப் பார்க்கணும்னு சொல்லுங்க. உங்கள் வீட்டு விலாசம் கொடுங்க! அவங்களையும் எங்க வீட்டுக்கு வரச்சொல்லுங்க! அதுக்கப்புறம் என் பெற்றோர் வந்து பார்ப் பாங்க!"

"தாங்க்யூ ஸார்! அதுக்கெல் லாம் இப்போதைக்கு எங்களாலே யோசிக்கவே முடியாது!"

"என்ன அப்படி சொல்லிட் டீங்க? உங்களுக்கு முன்னாலே யாராவது 'சிஸ்டர்' கல்யாணத் துக்கு இருக்காங்களா?"

"இல்லை, சார்! அப்படி இல்லை! என் வீட்டுக்கு நான்தான் ஒரே பெண்! எனக்கு அடுத்த படியா ஒரு தம்பி இருக்கிறான். இந்த வருடம் எஸ்.எஸ்.எல்.சி. எழுதியிருக்கிறான். எங்கள் குடும் பம் நன்றாக வாழ்ந்த குடும்பம். இப்போது நொடித்துப் போய் விட்டது. என் தம்பி படிப்பை முடித்து ஒரு நிலைக்கு வரணும். என் தாயாரைக் காப்பாத்தும் பொறுப்பு எடுத்துக்கணும். அதன் பிறகுதான் எனக்குத் திருமண மெல்லாம்".

"நான் ஆபீஸ் பரீட்சையிலெல் லாம் தேறி பிரமோஷனும் வாங்கி விட்டேன். அடுத்த ஸ்டெப்புக்காக என் பெற்றோர் என்னை ரொம்பத் துரிதப்படுத்தறாங்க!"

"கங்கிராஜுலேஷன்ஸ்! அந்த அதிர்ஷ்டசாலியாக இருக்க எனக்குக் கொடுப்பினை இல்லை!"

"நீங்கள் சரி என்று சொல் லுங்க! நான் காத்திருக்கிறேன்".

"இதெல்லாம் நடைமுறைக்கு ஒத்து வராது சார்! நீங்கள் தயார்! உங்கள் பெற்றோர் தயார். எங்க வீட்டிலே எப்போ கடல் அலை ஒயுமோ? எப்போ நாங்க கடலைத் தாண்டுவோமோ? நீங்கள் எனக் காகக் காத்திருக்க வேண்டாம்! ப்ளீஸ்! கோ அஹெட்!

"கோகிலா! என்னால் உங் களை மறக்கவே முடியாது! இதோ என் விலாசம்! உங்க வீட்டு விலாசத்தைக் கொடுங்கள்! மிஸ்ரா வாரா வாரம் இங்கே அவன் தாத்தா வீட்டுக்கு வரு வான். அவனிடம் உங்களுடைய க்ஷேம லாபங்களைச் சொல்லுங்க! நீங்க விருப்பப்பட்டால் நானும் அவனுடன் வருகிறேன்!"

"மிஸ்டர், ராஜன்! என்னைப் பற்றிய சில உண்மைகளை உங்க ளுக்குச் சொல்லி விடுகிறேன். நான் ஏற்கெனவே சொல்லியபடி, எங்கள் குடும்பம் நல்ல நிலையி லிருந்து விட்டு நொடித்துப் போன குடும்பம். அப்பா தவறிப்போய் இரண்டு வருஷம் ஆகிறது. இந்தக் கிருஷ்ணசாமியின் மனைவி நிரந்தர நோயாளி. அவர் பெண் ஐ.ஏ.எஸ் ஸுக்குப் படிக்கிறா. வீட்டில் வேலை செய்ய ஆள் கிடையாது. பையன் அமெரிக்காவுக்குப் போக இருக்கிறான். விசாவுக்காகக் காத் திருக்கிறான். 'நான் இங்கு இவர்கள் வீட்டில் எங்கம்மா 'பொசிஷன்'தான்! படித்திருக் கிறேன். டைப்பிங் ஷார்ட் ஹாண்ட் எல்லாம் தெரியும். ஏதானும் வேலை வாங்கிக் கொடுக்கிறேன் என்று கிருஷ்ணசாமி என்னை அழைத்து வந்தார். அதே மாதிரி இந்த வேலையும் வாங்கிக் கொடுத்திருக்கிறார். வேர்விட்டா யிடுச்சு! இனிமே எங்க குடும்பம் தழைக்கணும்! அதுக்கப்புறம் தான் மொக்கு விட்டு பூ பூக்கணும்! இப்போ என்ன சொல்றீங்க?"

ராஜனுக்கு ஒரு நிமிஷம் பேச்சடைத்துவிட்டது. மெதுவாகச் சொன்னான்... "உங்கம்மாவை விட்டு என் பெற்றொருக்கு லெட்டர் போடச் சொல்லுங்க! ஜாதகம் அனுப்பச் சொல்லுங்க! என்று இழுத்தான்.

"வாங்க! உள்ளே போகலாம். உங்க நண்பர் மிஸ்ரா 'டீ'யுடன் தயாராகக் காத்துகிட்டு இருக்கார்!"

"மறுபடி உங்களை எப்போ பார்ப்பது?"

"நீங்க சொன்னபடி பர்ஸ்ட் ஸ்டெப் எடுத்தபின் பார்க்கலாம்".

மிஸ்ரா இருவரையும் கூர்ந்து கவனித்தான். எந்தப் பெண்ணுக் கும் தன்னை ஒரு வாலிபன் நேசிக்கிறான், அதுவும் தனக்குப் பிடித்தவன் என்றால் இன்னும் அதிக சந்தோஷமாக இருப்பாள்; கோகிலா இதற்கு விலக்கில்லை. அவள் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்திருந்தது. ஏற்கெனவே அவனும் ஒரு பெங்காலிப் பெண்ணைக் காதலித்திருந்ததால் அவனுக்கும் இதில் அனுபவம் உண்டு. ராஜனோ ஏதோ சிந்தனையில் ஆழ்ந்த மாதிரி இருந்தான்.

ராஜனின் பெற்றோருக்கு இந்த சம்பந்தம் சிறிதும் பிடிக்க வில்லை.

"ஏண்டா! போயும் போயும் ஒரு சமையல்காரி பெண்தான் கிடைத்தாளா?"

"நீ அந்தப் பெண்ணைப் பார்க்கணும் அப்பா! எவ்வளவு அடக்கம். எவ்வளவு பொறுப்பு உள்ளவளா இருக்கா தெரியுமா? அவளும் நல்ல வசதியான குடும் பத்திலிருந்து வந்தவள்தானாம்! இப்போது அவர்கள் நொடித்துப் போய்விட்டார்கள். அதனா லென்ன? மறுபடியும் அந்தக் குடும்பமும் தழைத்துவிடும்! எனக்கு அந்தப் பெண்ணைத்தான் பிடிச்சிருக்கு!"

"அப்படீன்னா அவங்க ஒரு நல்ல நிலைமைக்கு வரும்வரை நீ காத்திருக்கப் போறியா?"

ராஜனிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. உடனே 'இப் போதைக்கு கொஞ்ச நாள் பொறுத்துப் பார்க்கலாம் அப்பா!' என்றான், மெதுவாக.

கோகிலாவின் தாயாரிடமிருந்து கடிதம் வந்தது. 'கோகிலா சொல்லியிருந்த விவரங்களை யெல்லாம்தான் அவளும் எழுதி

யிருந்தாள். கல்யாணம் என்று நிச்சயம் ஆனால் கொஞ்சம் அவகாசம் கொடுக்கணும் என்று எழுதியிருந்தாள். ராஜனின் அப்பா ஜாதகங்களை ஒப்பிட்டுப் பார்த்தார். நன்கு பொருந்தியிருந்தன. ராஜன் எவ்வளவோ சொல்லியும் அவன் தந்தை ஒரு பதிலும் எழுதாமல் இருந்துவிட்டார்.

கிருஷ்ணசாமி வீட்டில் வழக்கம் போல் இரவு சமையல் வேலையை முடித்துவிட்டு எல்லாரும் சாப்பிட்ட பிறகு தானும் சாப்பிட்டுவிட்டு படுக்கப் போனாள் கோகிலா. கிருஷ்ணசாமியின் மகள் சுசீலா பரீட்சை எழுத கட்டாக் போயிருந்ததால் அவள் மட்டும் தனியாகப் படுத்திருந்தாள். தலைவலிக்கு ஏதேனும் மாத்திரை கேட்டதில் கிருஷ்ணசாமியின் மகன் ரமேஷ் அவளுக்கு ஒரு மாத்திரை கொடுத்தான். அதை விழுங்கிவிட்டுப் படுத்தவள் தான், நன்றாகத் தூங்கிவிட்டாள். ஏனெனில் தூக்க மாத்திரை அது. திடீரென்று விழிப்பு வந்தவள், தன் பக்கத்தில் யாரோ படுத்துக் கொண்டு அவளை அணைத்ததைக் கண்டு திடுக்கிட்டாள். கத்துவதற்கு முன் அவள் வாயைப் பொத்தினான், ரமேஷ்.

"பேசாமல் இரு! நான் அமெரிக்கா போனாலும் நீ என்னுடையவள்தான்! இந்த சான்ஸுக்காக எவ்வளவு நாள் காத்திருந்தேன் தெரியுமா?" என்றான் அவளை அணைத்தபடியே.

அவனைத் தள்ளிவிட்டுக் கட்டிலின் மறுபக்கத்திலிருந்து எழுந்தாள், கோகிலா.

"என்னை என்ன நினைச்சிண்டிருக்கீங்க! உங்கள் வீட்டு சமையல்காரின்னா, உங்கள் படுக்கைக்கும் பங்குதாரியா?" என்று கத்தினாள். இருட்டில் 'ஸ்விச்'சும் தெரியவில்லை. கதவும் தெரியவில்லை.

சட்டென்று ரமேஷ் அவள் வாயைப் பொத்தினான். "ஷ்! பேசாம இரு! அம்மா முழுச்சுண்டு விடுவாள்! இவையெல்லாம் அமெரிக்காவிலே ரொம்ப சகஜம். இதனாலே ஒண்ணும் ஆயிடாது! நான்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேனே!" என்று மறுபடியும் அவளை நெருங்கினான்.

சுவர்களைத் துழாவிக் கொண்டிருந்தவளுக்கு திடீரென்று கதவுத் தாழ்ப்பாள் கிடைத்தது. திறந்து கொண்டு வெளியே ஓடினாள்.

ரமேஷின் அம்மாவுக்கு என்றைக்குமே தூக்கம் சரியாக வராது. சத்தம் கேட்டவுடனேயே எழுந்து விட்டாள். அதற்குள் தன் ஆடைகளைச் சரிசெய்து கொண்ட கோகிலா, ஓடிச் சென்று ரமேஷின் தாயாரைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"மாமி! எனக்கு மட்டும் தாழ்ப்பாள் கைக்குக் கிடைச்சிருக்கல்லைன்னா இந்நேரம் இவர் என்னை என்ன செய்திருப்பாரோ? நான் உங்ககிட்டே படுத்துக்கிறேன், இனிமேல்" என்றாள் விசித்துக் கொண்டே.

ரமேஷ் தன் தாயாரைப் பார்த்துத் தலைகுனிந்தான்.

"ஏண்டா! இப்படி ஓர் அக்கிரமம் பண்ண உனக்கு என்ன தைரியம்? இது பாவமில்லையா? நல்லவேளை, தப்பிச்சாள்!"

"ஸாரிம்மா! ஏதோ வேகத்தில் அவள் 'ரூ'முக்குப் போனேன். இப்போ ஒண்ணும் ஆகலை. நாளைக்கே நான் அமெரிக்காவுக்கு கிளம்பறேன்". என்றான் ரமேஷ், தலைகுனிந்து கொண்டே.

ரமேஷின் தங்கை சுசீலா ஐ.ஏ.எஸ். பிரிவில் பாஸ் செய்து விட்டதால் பைனலுக்குப் படிப்பதற்கு சென்னைக்குத் தன் மாமா வீட்டுக்குப் போய்விட்டாள். அங்கே தான் 'ஸ்டடி ஸர்க்கிள்' இருக்கிறது என்று. வீட்டில் கிருஷ்ணசாமி தம்பதியும் கோகிலாவும்தான்.

கிருஷ்ணசாமி கோகிலாவைப் பார்த்து வழிந்தார்.

கிருஷ்ணசாமிக்கு என்றுமே கொஞ்சம் சபல புத்தியுண்டு என்று அவளுக்குத் தெரியும். கோகிலாவும் செய்வதறியாது தவிக்கிறாள் என்று புரிந்து கொண்டாள்.

'கோகிலா! நீ திருச்சிக்குப் போய்விடு! புவனேச்வருக்கு வேலைக்கு 'ஆர்டர்' வந்த பிறகு அங்கு நேரே போகலாம். நான் எப்படியோ உள்ளூரிலேயே யாராவது வேலைக்காரியை வைத்துக் கொண்டு சமாளிக்கிறேன். உன்னை ஓர் ஆபத்தும் இல்லாமல் உங்கம்மாவிடம் சேர்த்து விடுகிறேன் இப்போ?" என்றாள்.

மிஸ்ராவின் தாத்தா வீடு பக்கத்துத் தெருவில்தான் இருந்தது. திடீரென்று மிஸ்ராவின் பாட்டிக்கு சீரியஸ் என்றவுடன் மிஸ்ரா தன் பெற்றோருடன் தால்சேர் வந்திருந்தான். மிஸ்ராவின் அம்மாவுக்கோ புவனேச்வரில் குழந்தைகளின் பரீட்சை சமயம் முன்னிட்டு தால்சேரில் இருக்க முடியாத நிலை. இந்தக் குழப்பத்தில்தான் கோகிலாவை வழக்கம்போல் பார்க்க வந்தான் மிஸ்ரா.

"மேடம்! என் பாட்டி ரொம்ப சீரியஸாக இருக்காங்க! எங்க அம்மா இங்கு இருக்க முடியாது. தாத்தாவுக்கு ஹோட்டலை விட்டு வரமுடியாது. மேலும் இந்த மாதிரி நிலைமையிலே 'லேடீஸ்' தான் இருக்கணும். என்ன பண்றதுன்னு புரியலை. சரி! இதை விடுங்க! ராஜனுக்கு ஏதேனும் நியூஸ் உண்டா? எங்க அப்பா, அம்மாகூட வந்ததால் அவன் வரல்லை" என்றான் மிஸ்ரா.

"வெரி ஸாரி! உங்க பாட்டிக்கு உடம்பு அவ்வளவு சீரியஸா? நான் உடனே பார்க்க வருகிறேன். அங்கேயே தங்க வேண்டுமானாலும் சரி! எனக்கு ஒரு சிரமமும் இல்லை. மிஸஸ் கிருஷ்ணசாமியிடம் கேட்கச் சொல்லுங்கள். அவங்க நிச்சயம் சம்மதிப்பாங்க. நான் உடனே வந்துடறேன்!'

கிருஷ்ணசாமி எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். மிஸஸ் கிருஷ்ணசாமியின் திடமான முடிவுக்கு முன்னால் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. கோகிலா மிஸ்ராவின் தாத்தா வீட்டில் தங்கலானாள்.

ஒரு மாதம் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டதில் பாட்டியின் போன உயிர் திரும்பி வந்துவிட்டது.

மெதுவாக மிஸஸ் கிருஷ்ணசாமியிடம் சொல்லிவிட்டு மிஸ்ராவின் தாத்தா வீட்டிலேயே ஒரு ரூமை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கேயே இருக்கத் தொடங்கி விட்டாள் கோகிலா.

கோகிலாவுக்கு 'சௌந்தர்ய லஹரி', 'ஸ்யாமளா அஷ்டகம்', 'பகவத் கீதை' எல்லாம் மனப் பாடம். தினமும் சுவாமியின் முன்னால் உட்கார்ந்து அவற்றைப் பாடுவாள். மிஸ்ராவின் பாட்டி மெய்ம்மறந்து போய் அங்கே உட்காருவாள். மிஸ்ராவின் தாத்தா நன்றாக சம்ஸ்கிருதம் கற்றவர். ஹோட்டலை விட்டு அந்த நேரத்துக்கு வீட்டுக்கு வந்துவிடுவார்! பெண் குழந்தை இல்லாத அவருக்கு, கோகிலாவை ரொம்பப் பிடித்திருந்தது. எப்போதுமே அவர் உபயோகிக்கும் போதைப் பொருளான அபினைக்கூட விட்டுவிட்டார்.

வீட்டிலே புழங்கும்போது அங்கங்கே பழைய பாத்திரங்களில் நாணயங்களும் சில்லறைகளும் இருந்தன. பழைய கரன்ஸி நோட்டுகளும் கிடைத்தன. வங்கியில் செலுத்தாமல் அப்படியே கட்டிக் காக்கும் வழக்கம் அங்கு கிராமங்களில் சர்வ சாதாரணம். தாத்தாவை வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் சேகரித்து வங்கியில் செலுத்த வைத்தாள். சேவிங்ஸ் பாக்கில் தேவைப்படாத ரகத்தை நீண்ட கால டெபாசிட்டாக மாற்ற வைத்தாள். இதன் மூலம் வட்டி வருமானம் கணிசமாக வரத் தொடங்கிற்று. இப்போதெல்லாம் தாத்தாவின் கடை விவகாரம், பொருளாதார நிலவரம் எல்லாம் கோகிலாவுக்கு அத்துபடி. மிஸ்ராவின் பெற்றோர் இதையெல்லாம் பார்த்து பிரமித்துப் போனார்கள். 'எங்கிருந்தோ வந்தவளுக்கு இத்தனை சாமர்த்தியமா' என்று. இதையெல்லாம் வழக்கம் போல் மிஸ்ரா அப்படியே ராஜனிடம் ஒப்புவிப்பான்.

மிஸ்ராவின் பாட்டிதான் ஒரு நாள் திடீரென்று தாத்தாவிடம் இந்தக் கோகிலாவை நமது சுபாஷுக்கு (அதுதான் மிஸ்ராவின் முதல் பெயர்) கல்யாணம் செய்து கொள்ளலாமே!" என்றாள். தாத்தா, மிஸ்ராவின் பெற்றோர் எல்லாருக்கும் இந்த யோசனை மிகவும் பிடித்திருந்தது.

அடிக்கடி கோகிலாவை வந்து பார்க்கும் மிஸ்ராவுக்கு, கோகிலாவிடம் அளவு கடந்த பாசத்தை ஏற்படுத்தியிருந்தது. அவனுக்கும் கோகிலாவைக் கல்யாணம் செய்து கொள்ள அளவில்லாத ஆசைதான் என்று அப்பட்டமாகத் தெரிந்தது. ஆனால் அவன் சொன்னதென்னவோ, "ராஜனுக்கு கல்யாணம் ஆகும் வரை இப்படிப் பேசுவதுகூடத் தவறு!" என்றுதான்.

வாராவாரம் மிஸ்ராவைப் பார்த்துக் கொண்டிருந்த கோகிலாவுக்கு அவளையறியாமல் அவனிடம் ஒரு காதலும் அன்பும் ஏற்பட்டிருந்தது. பாட்டி தன் விருப்பத்தை ஒருநாள் கோகிலாவிடம் வெளியிட்டாள்.

"எங்க அம்மாவைக் கேளுங்கள்! இதெல்லாம் பெரியவர்கள் பேசவேண்டிய விஷயம்".

"நீதான் எழுதணும்! நான் எந்த பாஷையிலே எழுத முடியும்? கல்யாணம் உங்க சம்பிரதாயத்திலும் இருக்கட்டும்! எங்க சம்பிரதாயத்திலும் இருக்கட்டும்! தாலியும் கட்டிக்கோ! கங்கணமும் போட்டுக்கோ! உன் தாயாரும் உன் தம்பியும் இங்கே உன் கூடவே இருக்கட்டும்! உன் தம்பிக்கு இங்கே ஒரு ஹோட்டல் வைத்துக் கொடுப்பார், தாத்தா. அல்லது உங்க ஊர்ப் பையன்

மும்தாஜின் காதலன்!

ஷாஜஹான் தன் மனைவி மும்தாஜின் பேரிலுள்ள அளவற்ற அன்பின் நினைவாக ஒப்பற்ற கலைப் பொக்கிஷமான அழகிய தாஜ்மஹாலை நிர்மாணித்தான் என்று படித்திருக்கிறோம். ஆனால் அந்த மும்தாஜ் ஷாஜஹானின் மனைவியல்லள். அவள் முன்னர் வேறொருவனைக் காதலித்து மணந்து கொண்டிருந்தாளாம். ஆனால் அவனிடமிருந்து பிரித்து அழைத்து வந்துதான் அவளை ஷாஜஹான் மணந்து கொண்டானாம். பின்பு, 38 ஆம் வயதில் மும்தாஜ் இறந்த பொழுது, அவளது நினைவாக ஷாஜஹான் தாஜ்மஹாலை நிர்மாணித்த நேரத்தில், அவளது முன்னாள் காதலனான சிற்பியும் தானே முன்வந்து இந்த அழகிய கலைப் பொக்கிஷத்தைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. — ஞ.சு.



தான் உனக்கு வேணும்னா அப்படியே செய். நான் நிர்ப்பந்திக்க மாட்டேன். எனது ஆசையைச் சொன்னேன்!"

கோகிலா தன் அம்மாவுக்கு எல்லா விவரங்களையும் எழுதினாள். ராஜனா, மிஸ்ராவா என்று தானே குழம்பியிருப்பதாகவும் எழுதியிருந்தாள்.

இந்தச் சமயம் ராஜனின் பெரியப்பா ராஜனின் தந்தைக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தார்.

"நேத்து திருச்சிக்கு ஒரு விசேஷத்துக்காகப் போயிருந்தேன். அங்கு ராஜகோபாலனின் சம்சாரத்தைப் பார்த்தேன். அவர்களை உனக்குத் தெரியாது. நான் திருச்சியில் வாரச் சாப்பாடு சாப்பிட்டுப் படித்தவன் என்று உனக்குத் தெரியும்! அப்போது இந்த ராஜகோபாலனின் அப்பா மளிகைக்கடை வைத்திருந்தார். நல்ல வியாபாரம். அவர்கள் வீட்டிற்கு வாரத்துக்கு இரண்டு நாள் சாப்பிடப் போவேன். எடுபிடி வேலைகள் எல்லாம் செய்வேன்.

ராஜகோபாலனுக்கு மளிகைக் கடையில் ஈடுபாடு இல்லை! சங்கீதக் கச்சேரிகளுக்குப் போய் விடுவான். கூட இருந்த செட்டியாரிடம் எல்லாம் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுப் போய் விடுவான். வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு, கடன்களை அடைக்க வீட்டை விற்க வேண்டி வந்தது. படுத்த படுக்கையாக இருந்து இந்த உலகத்தை விட்டே போய்விட்டான், ராஜகோபாலன்.

இதெல்லாம் எதற்கு எழுதுகிறேன் என்றால் அவனுடைய பெண் கோகிலா என்பவள் இங்கு ஒரிசாவில்தான் தால்சேர் என்ற இடத்தில் வேலை பார்க்கிறாளாம். மிஸஸ் ராஜகோபாலன் கண் கலங்கியபடி என்னிடம் சொன்னாள். இந்தப் பெண்ணை எப்படியாவது ஒருத்தனிடம் பிடித்துக் கொடுத்துவிட்டால் அவள் தன் பிள்ளையுடன் எப்படியாவது பிழைத்துக் கொள்வாள் என்று.

உன் விலாசத்தைச் சொன்னவுடனே உனக்கு ஜாதகம் அனுப்பியிருந்ததாகவும் பதில் ஒண்ணும் வரவில்லையென்றும் சொன்னாள். அவர்கள் வீட்டு உப்பைத் தின்றவன் நான். ரொம்ப நல்ல குடும்பம். ஜாதகம் சரியாக இருந்தால் நம்ப ராஜனுக்கு இந்தப் பெண்ணை முடிக்கலாம். உடனே ஆவன செய்!"

இதற்குள் கோகிலாவின் கடிதம் பார்த்து அவள் தாயார் திருச்சியிலிருந்து கிளம்பினாள். மிஸ்ராவும் கோகிலாவும் கட்டாக் போய் அழைத்து வந்தார்கள்.

கிருஷ்ணசாமி வீட்டில் வைத்து ராஜனுக்குப் பெண் பார்க்கும் படலம் ஆயிற்று. மிஸ்ராவின் பாட்டிக்கு கோகிலாவின் தாயாரிடம் எப்படிப் பேசுவது என்று புரியவில்லை. இருவரது பாஷையும் வேறாதலால் அது ஒரு முட்டுக்கட்டை! கடவுள் விட்ட வழி என்று இருந்துவிட்டாள்.

ராஜனுக்குப் பெண் ஏற்கெனவே பிடித்தவள். கோகிலாவுக்கும் பிடித்திருக்கிறது என்று எல்லாரும் அவர்களே தீர்மானித்து விட்டார்கள்.

உடனே தையில் முகூர்த்தம் வைக்க வேண்டும்; என்ன செய்ய முடியும் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிவிடவேண்டும். திருச்சியிலோ சென்னையிலோ சுமாராகவாவது கல்யாணத்தை நடத்திக் கொடுக்க வேண்டும் என்றார்கள், ராஜனின் பெற்றோர். கோகிலா, ராஜனுடன் தனியே பேசவேண்டும் என்றாள்.

"உடனே கல்யாணம்னா பணத்துக்கு எங்கே போவது? என் தாயார், தம்பி எங்கே போவார்கள்? இது பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?"

"இது உன் பிரச்னையா அல்லது என் பிரச்னையா?"

"நான் கல்யாணத்துக்கு சரி என்றால் இது 'நம்' பிரச்னையாகாதா?"

"நீ சரின்னா நான் செலவில் பாதிப் பணம் தருகிறேன். என் பெற்றோருக்குத் தெரிய வேண்டாம். உன் தம்பியும் வேணும்னா நம்பகூட இருக்கட்டும். இங்கே ஏதாவது வேலை பார்க்கட்டும். உங்க அம்மா அதுவரை திருச்சியில் இருக்கட்டும். உன் தம்பி கொஞ்சம் கால் ஊன்றிக் கொண்ட பிறகு உங்கம்மா அவனுடன் இருக்கட்டும்! இதைவிட "ரீஸனபிளாக" இருக்க என்னிடம் என்ன எதிர்பார்க்கிறாய்?"

"நீங்க சொல்றது ரொம்ப ரீஸனபிளாகப்படுகிறது. ஆனால் எங்கள் தரப்புச் செலவைப் பத்தி நான் அம்மாவுடன் கலந்துதான் ஆலோசிக்கணும். எங்களுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்க".

"என்ன இது? பாக்கு வெத்திலை மாத்திக்கலாம்னு வந்திருக்கோம். இவங்க அப்புறம் சொல்கிறோம் என்கிறார்களே! நாம என்ன பிள்ளை வீட்டுக்காரங்களா, பெண் வீட்டுக்காரங்களா?" என்று கத்தினார், ராஜனின் தந்தை.

கோகிலாவின் தாயார் ஊருக்குப் போய் கோகிலாவைக் கலந்தாலோசித்து விட்டு அவர்களுடைய எதிர்பார்ப்புக்கும் அவசரத்துக்கும் ஈடுகொடுக்கத் தற்போதைக்கு சக்தியில்லை என்று கடிதம் எழுதி விட்டாள்.

கோகிலாவுக்கு புவனேச்வரிலேயே ராஜனின் ஆபீஸிலேயே வேலை கிடைத்து விட்டது. "ஸ்டாப் செலக்ஷன்" பரீட்சையில் 'பாஸ்' செய்ததால். தினமும் ராஜனையும் பார்ப்பாள்! மிஸ்ராவையும் பார்ப்பாள்.

தால்சேரில் அவள் தம்பிக்கு ஒரு ஹோட்டல் வைத்துக் கொடுத்து விட்டார் மிஸ்ராவின் தாத்தா. கோகிலாவின் தாயாரும் இப்போது பிள்ளைகூட தால்சேர் வந்துவிட்டாள்.

ஒருநாள் ராஜன், கோகிலாவிடம் வந்தான்.

"கோகிலா! என்னுடைய பொறுமை எல்லை கடந்து விட்டது. எப்போதுதான் நம் கல்யாணத்துக்கு 'யெஸ்' சொல்லப் போகிறாய்?"

"மிஸ்டர் ராஜன்! நானும் இது பற்றித்தான் ரொம்ப யோசிச்சுண்டு இருக்கேன். எங்கம்மா இப்போ தால்சேரில் இருக்காள். தம்பிக்கு மிஸ்ராவின் தாத்தா ஹோட்டல் வைத்துக் கொடுத்துட்டார். அவனுக்கு ஒரு வழி பிறந்துடுத்துன்னே வச்சுக்கலாம்".

"வெரிகுட்! பின்னே என்ன? இப்போ உனக்கு ஒரு சிக்கலும் இல்லைன்னு வச்சுக்கலாம் இல்லையா?"

"ஸார்! இதை எப்படிச் சொல்றதுன்னு தெரியலை! இந்த ஒரு வருஷமா, வாரா வாரம் மிஸ்ராவை நான் பாத்துண்டு இருக்கேன்! அவர்கள் குடும்பத்தில் நான் ஒருத்தியாக ஐக்கியமாகி விட்டேன்!"

"ஆமா! நீ செய்த சேவையைப் பற்றியெல்லாம் மிஸ்ரா எங்கிட்ட கதை கதையாச் சொன்னான்! அதுக்கென்ன?"

"மிஸ்ரா குடும்பத்தாருக்கு என்னைக் கண்டா ரொம்பப் பிடிச்சிருக்கு. என் தம்பிக்கும் அவங்கதான் ஒரு வழி பண்ணிக் கொடுத்திருக்காங்க! உங்க குடும்பத்துக்கு நான் என்னிக்கும் சமையல்காரிப் பெண்தான்!"

"அப்படீன்னா?"

"என்னையும் அறியாமே எனக்கு மிஸ்ராகிட்டே ஒரு பரிவு ஏற்பட்டுவிட்டது!"

"அடிப்பாவி! உனக்குத் தெரியுமா? அவன் ஒரு பெங்காலிப் பெண்ணோடே ரொம்ப நெருக்கமாக இருந்தான்னு?"

"எல்லாம் என்கிட்ட சொல்லிட்டார்! அந்தப் பொண்ணு இப்போ ஒரு பெங்காலியைக் கல்யாணம் செய்து கொண்டு கல்கத்தாவில் இருக்கா".

"அப்போ நீயும் அவனும் இத்தனை நாளா எனக்குத் தெரியாமல் காதல் லீலை பண்ணிண்டா இருந்தீங்க?"


"நோ! நோ! அப்படிச் சொன்னால் அது பெரிய அபாண்டமாகும்! அவர் திட்டவட்டமாகச் சொல்லிட்டார், நீங்கள் வேறு யாராவது பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட பிறகுதான் என்னைப் பற்றி அவர் யோசிக்க முடியும்னு".

"நீ இப்படிச் செய்வேன்னு நான் துளியும் எதிர்பார்க்கல்லை! கேட்பதற்கே அசிங்கமாக இருக்கு. என்னை வேண்டாம்னு சொன்னப்புறம் நான் உன்னிடம் கெஞ்ச அப்படி தன்மானம் கெட்டவனில்லை. நான் வரேன்!"

"ராஜன்! நீங்க கோபப்படறதிலே அர்த்தமே இல்லை. மிஸ்ரா உங்களுக்காக ஒரு வருடம் என்னிடம் தூது வந்து கொண்டிருந்தார். எல்லா விஷயமும் சொல்வார். ஒருநாள்கூட என்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னதில்லை. அவ்வளவு உண்மையானவர். அதனாலே என் மனசிலே அவர் ரொம்பவும் உயர்ந்து விட்டார்".

மிஸ்ராவுக்கும் கோகிலாவுக்கும் திருமணம் நடந்தது. ராஜன் டில்லிக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய்விட்டான். அங்கு டில்லியிலேயே ஒரு பெண்ணையும் கல்யாணம் செய்து கொண்டான்.

இன்றைய வசதிகள் எம்மாத்திரம்?



இன்றைக்குத் திரையுலக முன்னணி நடிகர், நடிகைகள் சிலர் படத்திற்கு 50 லட்சம், 60 லட்சம் ரூபாய் என்று வாங்குவது பெருமையாகவும் பிரமிப்பாகவும் பேசப்படுகிறது. ஆனால் முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே, இன்றைய நட்சத்திரங்கள் அனுபவிக்காத அளவுக்கு ஆடம்பரமாக வாழ்ந்திருக்கிறார்கள் சில நட்சத்திரங்கள் என்று கேள்விப்படும்போது இன்றைய வசதிகள் எல்லாம் எம்மாத்திரம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. அத்தகைய நடிகர்கள் பற்றிய சில ருசிகரத் தகவல்கள் :

● 'ஏழிசை மன்னர்' என்று அந்நாளில் மிகப் பிரபலமாகப் புகழப்பட்ட எம்.கே.தியாகராஜ பாகவதர் எப்பொழுதும் 110 பவுன் எடையுள்ள தங்கத் தட்டில்தான் உணவு உண்ணுவாராம்.

● 'நடிக மன்னன்' என்று அந்நாளில் மிகப் பிரபலமாகத் திகழ்ந்த நடிகர் பி.யு. சின்னப்பா, அந்தக் காலத்திலேயே ரூ. 42,000 விலை மதிப்புள்ள வைர மோதிரத்தை எப்போதும் தன் கைவிரலில் அணிந்திருப்பாராம்.

அடேயப்பா!

— கு.ச.

தனிமரத் தோப்பு

ராஜேந்திரகுமார்

9

"என்ன இது? என் வீட்டில் எனக்கு இடமில்லையா? முன்பின் தெரியாத அந்நியர் மாதிரி நானும் காட்டேஜில் தங்க வேணுமா? என்ன கொடுமை இது?" கத்தினாள். "அம்மாவைக் கூப்பிடுங்க. நான் பேசறேன். அவங்க வயத்தில குடியிருந்த எனக்கு இந்த வீட்டில இடமில்லாமலா போயிடும்? கூப்பிடுங்க" என்றவள் -

"என்ன இங்கே கூச்சல்?" என்ற அதட்டலுக்குத் திரும்பி அண்ணாந்து பார்த்தாள்.

மாடி வராண்டா கைப்பிடியைப் பிடித்து கம்பீரமாக நின்று கொண்டிருந்தாள், அனாமிகா. "ஏய், என்ன இது விடிய விடிய வந்து, ரகளை பண்ணறே? போ, போய் காட்டேஜில் தங்கிக்க. மானேஜர்! அவளுக்கு ஒரு காட்டேஜை ஒதுக்குங்க!"

"அம்மா! என்னை உனக்குத் தெரியல்லையா?"

"நல்லாவே தெரிகிறது. நான் பெத்த மகள். ஆனால் அதில் ஆச்சர்யம் வருகிறது. இத்தனை நாளில்லாத அம்மா பாசம் ஏம்மா இப்ப திடீர்னு பொத்துக்கிட்டு வருகிறது? இந்த பங்களா என் ஆளுகைக்கு உட்பட்ட இடம். யாரை அனுமதிக்கணும்; யாரை அனுமதிக்கக் கூடாதுன்னு எனக்குத் தெரியும்".

"அம்மா! நான் உன்னோட பேசத்தான் வந்திருக்கேன்".

"பேசலாமே. மானேஜர்! அவளுக்கோர் அப்பாயிண்ட்மெண்ட் கொடுங்க. ராத்திரி பூராவும் தூக்கத்தைத் தொலைத்தவள், நான். இப்ப மாத்திரை போட்டுக்கிட்டுத் தூங்கப் போறேன். எழுந்திருக்க எப்படியும் பதினொரு மணி ஆயிடும். பன்னிரண்டு மணிக்கு நேரம் ஒதுக்குங்க. முறைப்படி முன் பணம் வாங்கிக்குங்க. எந்தச் சலுகையும் தரத் தேவையில்லை".

"அம்மா!"

"ஷட் அப்! அந்த உறவு எல்லாம் மறந்து பதினாறு வருஷத்துக்கு மேலாச்சு!"

"அப்பா இருந்திருந்தா இப்படிப் பேசுவியா?"

"உன் துரதிர்ஷ்டம். அவர் எப்பவோ போயிட்டார். எந்த உரிமையிலே அம்மான்னு கூப்பிடறே? பெத்தவள்னு பாசமா ஒரு நாளாவது பழகினியா? அல்லது அப்பா செத்தப்ப ஆறுதல் சொல்லத்தான் வந்தியா? இங்கு என்ன உரிமையிருக்கு உனக்கு? எப்பவும் அந்நியமாக நடந்துகிட்ட மாதிரியே இப்பவும் தள்ளி நின்று பார்த்து விட்டுப் போ. ஒரு நட்பு முறையிலே. உரிமை கொண்டாடாதே. கொண்டாடவும் விடமாட்டேன்".

விருட்டென்று திரும்பி உள்ளே போய் விட்டாள்.

ஏதோ முயன்று பேச முடியாமல் வாயைத் திறந்து திறந்து மூடினாள் வினிதா.

படுக்கை மாதிரி லெட்ஜர் ஒன்றைத் திருப்பினார் மானேஜர். "விவரம் எழுதுங்க. ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் தரணும்".

இரண்டாயிரமாகத் தூக்கிப் போட்டாள், "இரண்டு காட்டேஜை ஒதுக்குங்க. ஒண்ணு எனக்கு. இன்னொண்ணு..." காரைச் சுட்டிக் காட்டினாள், "அவருக்கு"

காரிலிருந்து எட்டிப் பார்த்த அந்தப் பாண்டியனின் முகத்தில் இருந்து இறங்கிய அறுப்புக்கு வியந்தார். "மேடத்தோட மகள்னு சொல்றீங்க. உங்க கார்ல இப்படியொரு பயங்கர ஆளா?"

"உங்க வேலையைப் பாருங்க. சாவியைக் கொடுங்க" என்றவள் - அவர் சாவியை எடுக்கத் திரும்பியபோது கவனித்தாள் அந்தக் கவரை.

'திருமதி அனாமிகாவின் நேரடிப் பார்வைக்கு' என்று எழுதப்பட்டிருந்தது. கைப்பையை அதன்மீது வைத்து சாவிக்காகக் கை நீட்டினாள்.

"இருங்க. ஆள் அனுப்பறேன்".

சாவியைப் பிடுங்கிக் கொண்டாள். "பயணக் களைப்பு. நானும் தூங்கப் போகிறேன். மதியம் இரண்டு மணிக்கு அப்பாயிண்ட்மெண்ட்டை மாற்றுங்க" என்றவள் கைப்பையோடு அந்தக் கவரையும் கவர்ந்து கொண்டு நடந்தாள்.

"இடப் பக்கம் நேரே போனால் கடைசியில் இருக்கு" என்ற மானேஜரை அலட்சியப் படுத்திவிட்டுப் போனாள்.

காரைக் கிளப்பும் முன்னால் நினைத்துக் கொண்டாள் -

'என் அம்மாவா இது? எனக்கே இருபத் தைஞ்சு வயசாகிறது. எனக்கு அம்மா - இன் னும் இத்தனை இளமையாகவா இருக்கிறார்?'

மாடி வராண்டாவில் நடந்த அனாமிகா அறைக் கதவைத் திறந்து போனபோது - ஃபோன் ஒலித்துக் கொண்டிருந்தது. போய் எடுத்தாள்.

"யாரு?"

"அம்மா. நான் மதுரையிலேர்ந்து பேசறேன். சிவராமன். உங்க மகனோட பல தடவை உங்க வீட்டுக்கு வந்திருக்கேன்".

"உன்னை எனக்குப் புரியுது. சொல்லு".

"உங்க மகேஷ் குடும்பத்தோட கிளம்பி இந்தியா வரான். நாளைக்குக் காலையிலே உங்க வீட்டில் இருப்பாங்க".

"மருமகளும் வருகிறாளா?"

"பேரக் குழந்தைகளும் வராங்க".

"அப்படியா?" உற்சாகம் பெருக்கெடுத்தது அனாமிகாவுக்கு. "ரொம்பவும் சந்தோஷமான செய்தி சொன்னே, நன்றி!"

"கூடவே ஒரு பயங்கர செய்தியும் சொல்லப் போகிறேன். மன்னிக்கவும்".

"என்ன... சொல்லு?"

"அவன் வருகிறதுக்கு முன்னாலே அவன் தங்கச்சி வினிதா அங்கே வரலாம்னு நினைக்கிறாள். அவள் நல்ல எண்ணத்தோட அங்கே வரல்லே. கொஞ்சம் எச்சரிக்கை யாகவே இருக்கச் சொன்னான்".

"பயப்படாதே. அவள் என்னை எதுவும் செய்துட முடியாது. தவிர, அவளை எப்படி சந்திக்கணும்? எந்த நிலையிலே நிறுத்தணும்னு எனக்குத் தெரியும்".

"அவள் எந்த நேரமும் அங்கே வரலாம். அவள் வருகிற காரணத்தை உங்களுக்குச் சொல்லச் சொன்னான்..." என்று தொடங்கி யவன் சொல்லி முடியும் வரை அமைதியாகக் கேட்டுச் சொன்னாள்,

"அவள் இனிமே வரமாட்டாள். ஏற்கெனவே வந்துவிட்டாள்".

"அம்மா!"

"கவலைப்படாதே! சிவராமா! எப்படியும் திருவனந்தபுரம் விமானத்திலே இறங்கின தும் நிச்சயம் மகேஷ் உனக்கு ஃபோன் பண்ணுவான். அவள் வந்துட்டதைச் சொல்லி - அவனை உடனே..."

"நானே கூட்டிட்டு வரேம்மா".

"சந்தோஷம். செய்..." ஒயர்லெஸ்ஸின் ஆண்டெனாவை அழுத்தி அடக்கி விட்டு கன்னத்தைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந் தாள். உட்கார்ந்து கொண்டேயிருந்தாள். எவ் வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ?

நினைவுக்கு வந்து மாடி வராண்டாவுக்கு வந்து மரத்தால் ஆன வராண்டாவில் நடந்தவள் கண்ணில் பட்டது, அந்தக் காட்சி.

சஞ்சீவி!

குட்டை நிஜார் அணிந்து பனியனும் ஜெர்கின்ஸும் போட்டுக் கொண்டு காலை நடை நடப்பது லேசான காலை ஒளியில் தெரிந்ததும் -

கிறங்கிப் போனாள். நைட்டியும், தலை முடியும் பின்னோக்கிப் பறக்க நடந்து வரும் அவளைக் கண்டதும் நின்று கேட்டார் -

"சொல்லிட்டியா?"

"நெருங்கி வந்து கண்களை மட்டும் உயர்த்திப் பார்த்தாள், அனாமிகா - "எதை?"

"நம் பழைய காதலை!"

"யாரிடம்?"

"என் மகள் இனியாவிடம்"

"ஏன்? நீ இன்னமும் சொல்லவில்லையா?"

"மறைச்சேன்".

"ஏன்?"

"என் பழங்கதையை நினைச்சுப் பார்க்க எனக்கே அருவருப்பா இருக்கு. காதலிக்கிற துக்கு முன்னமே என் தகுதியைப் பற்றி யோசிச் சிருக்கணும். அந்தஸ்துத் தராசை சீர்தூக்கிப் பார்த்திருக்கணும். ஏமாந்துட்டேன்".

"நீ?" விரலால் சுட்டிக் காட்டினாள், "நீ ஏமாந்தியா? பாவி. நான் சமையலறைக்குப் போய்க் காப்பி கொண்டு வருகிறதுக்குள்ளே பேரமும் பேசி என் காதலை விலைக்கு வித்து, பிளாங்க் செக் வாங்கி - சொல்லிக்கற நாகரிகம்கூட இல்லாம ஓடிப் போன நீ, ஏமாந்தியா? இதை என்னை நம்பச் சொல்

றியா? என் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டு காலேஜுக்கும் வராமல் ஓடிப்போனியே. இப்ப என்னவாயிருக்கே?"

பேசிக் கொண்டே நடந்தார்கள்.


"முதல்லே மிலிடெரியிலே சேர்ந்து சர்வீஸுக்குப் போனேன். சரிப்பட்டு வரலை. திரும்பி வந்து அப்பாவோட சின்ன ஹோட்டலை எடுத்து நடத்தினேன். படிப்படியாக உயர்ந்து - இப்ப பம்பாய், பெங்களூர், டில்லி, மெட்ராஸுன்னு ஐந்து நட்சத்திர சங்கிலித் தொடர் ஹோட்டல்களை நடத்தறேன்".

"டாக்டராகப் போகிறதா சொன்னதாய் ஞாபகம்".

"ஆயிருப்பேன். உன் காதல் இல்லேன்னு ஆனப்புறம் படிப்பைப் பாதியிலேயே விட்டுட்டேன். கோபமான உன் அப்பாவின் ஆவேசத்தைச் சமாளிக்க முடியாமத்தான் இராணுவத்திலே சேர்ந்தேன்".

"ஏன்? எங்கப்பா உனக்குக் கொடுத்த பிளாங்க் செக்கை நிரப்பி விட்டதாச் சொன்னாயே?"

"நிரப்பினது உண்மை. ஆனா பாங்க்ல திருப்பிக் கொடுத்து விட்டாங்க. வெற்றிகரமாத் திரும்பி வந்துடுச்சு".



"நம்பலை. நான் நம்ப மாட்டேன். எங்கப்பா பணம் கோடிக் கணக்கில இருந்தது. அதையும் மீறின அளவுக்கா தொகை எழுதினே?"

"இல்லே, சின்ன விஷயம்தான். அதை அவங்களாலே தர முடியாதுன்னுட்டாங்க".

"இல்லே. நான் நம்ப மாட்டேன். நீ பொய் சொல்றே. என்னை ஏமாத்தப் பாக்கிறே. இன்னைக்கு நீ அனுபவிக்கிற பணத்துக்கு நீ போட்ட விதையே என் அப்பாவோட பணம் தான்".

"இல்லே".

"பொய், நம்பமாட்டேன்".

"நம்பாதே. என்ன இப்ப? உண்மை எனக்குப் பின்னால் இருக்கிறவரை நான் பொய்க்குப் பின்னால் ஒளியத் தேவையில்லே. நீ உன் மானேஜரைப் பார்க்கவேயில்லையா?"

"பார்த்தேன்".

"அவர் எதுவும் சொல்லலையா? தரலையா?"

"சொன்னார். உங்கிட்ட முன்பணம் வாங்க லாமானு கேட்டார். வேண்டாம்னுட்டேன்".

"ஏன்?"

"சுத்திவளைச்சுப் பார்த்தால் உன்கிட்டே இருக்கிறது என் பணம். என் பணத்தையே நானே வாங்கணுமா? அதனாலேதான் உன் பெயரால நானே முன் பணம் கொடுத்துட்டேன்".

"சரி. நன்றி. வரேன்".

"என்ன கிளம்பிட்டே?"

"பேச்சை மாற்ற விரும்பறேன். வேற ஏதாவது பேசலாமே" என்று சொல்லும்போது - தயாரிப்பாளரம்மா எதிரே வந்தார்.

சஞ்சீவியைக் கண்டதும் தயங்கித் தள்ளியே நின்றார்.

"அம்மா" என்றாள் அனாமிகா பிரியமாக. "என்ன நின்னுட்டீங்க? வாங்க, அதென்ன அவ்வளவு அவசரமா வர்றீங்க? அப்பா வரலையா?"

"தூங்கறார். அவசரமா மெட்ராஸுக்கு ஒரு ட்ரங்க்கால் பண்ணணும். காட்டேஜில ஃபோன் வேலை செய்யலை. அதான் வரவேற்பறைக்கே போய்ப் பேசலாம்னு போயிட்டிருக்கேன்".

"செய்யுங்க. மானேஜர் இருப்பார். அப்படியே இல்லேன்னாலும் காவல் ஆளை விட்டு எழுப்பச் சொல்லிப் பேசுங்க. அவசரக் கால்ன்னு கேட்கச் சொல்லுங்க. இந்த நேரத்துக்கு சுலபமாக் கிடைக்கும். இல்லேன்னா ரொம்பவும் நேரமாயிடும்".

"சரி மகளே" என்றவர் நகர முயன்று நின்று மீண்டும் சஞ்சீவியைப் பார்த்தார்.

"சொல்லுங்கம்மா! இவர் இருந்தால் பரவாயில்லை".

"கொஞ்சம் முன்னாலே இங்கே ஓர் ஆளைப் பார்த்தேன். அவன் எப்படி இங்கே வந்தான்?"

"யாரைச் சொல்றீங்க?"

"ஆறடி உயரத்துக்கு பயங்கரமான அறுப்பு களோட ஒருத்தன். அவனை எனக்குத் தெரியும். பயங்கரக் கொலைகாரன். சென்னை போலீஸ் அவனை வலை வீசித் தேடிட்டிருக்கு. அவனுக்கெல்லாம் இங்கே ஏன் இடம் தர்றீங்க? ஆபத்தான ஆளாச்சே?"

"தெரியலை. நான் விசாரிக்கிறேன். இவர் மிஸ்டர் சஞ்சீவி. மெட்ராஸ்தான். சங்கிலித் தொடர் ஹோட்டல் வைச்சிருக்கார்".

"கேள்விப்பட்டிருக்கேன்" வணங்கி விட்டுக் கிளம்பினார். "வரேன்".

"இவங்களா உங்கம்மா?"

மெல்லத் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள், "ஆமாம்".

"பொய். எனக்குத் தெரியும் உங்கம்மா பெயர் வசந்த மாளவிகா. பிரபலமான பாட்கி. எம்.எஸ்ஸுக்கு அப்புறம் அவங்கதான் என்கிற அளவுக்குப் பெயர் இருந்தது. ஒரு சின்ன தொண்டை ஆபரேஷனினால பாட்டுப் பாடவே லாயக்கில்லாமல் போயிட்டாங்க. அந்த வேதனையினாலேயே யாரையும் பார்க்காமல் பேசாமல் மனசுக்குள் வெந்து வெந்து செத்துப் போயிட்டாங்க. உறவு சொல்ல நிறையப் பேர் இருந்தும் யாருமே இல்லாத மாதிரி தனி மரமா இருந்து செத்தாங்க. கல்லூரி நாளில் நீ அவங்க சமாதிக்கு மலர் வைச்சதைக் கண்ணால பார்த்தவன் நான்".

"அந்த கதி எனக்கு வரக்கூடாது என்றுதான் இப்ப இப்படி இரவல் உறவுகளுக்காக அலையறேன். ஏன், பெத்தால்தான் அம்மாவா? பிள்ளைகளைத்தான் தத்து எடுக்கணுமா? ஏன் அம்மாவை எடுக்கக்கூடாதா? அம்மா - அப்பா மட்டுமில்லே; தம்பி - தங்கை - நிறையக் குழந்தைங்க எல்லாம் எனக்குக் கிடைக்கிறாங்க. இங்க தங்கறவங்களையெல்லாம் வயசுக் கேற்ப உறவு கொண்டாடறேன்".

மரத்தடியில் இருந்த மர பெஞ்ச் ஒன்றில் சாிந்து அமர்ந்து கொண்டாள். முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள்.

"தாங்க முடியலை. என்னால தாங்கிக்க முடியலை. தனிமை என்னைக் கொல்லுது.

அதனாலதான் என்னைச் சுற்றி தினம் ஒரு தோப்பு உருவாக்கிக்கிறேன்" சிரித்தாள், "தெரிஞ்சு வைச்சாரோ; தெரியாம வைச்சாரோ எங்கப்பா. அனாமிகா. அதுக்கு சம்ஸ்கிருத அர்த்தம் தெரியுமா உனக்கு?"

"பெயரே இல்லாதவள்".

"பெயரில்லாதவள் மட்டுமில்லே; எதுவுமே இல்லாதவள்; முகமில்லாதவள். பாலைவனத் திலே தப்பி வளர்ந்த ஒரு மரம். தனி மரம். பாசத்துக்கும் அன்புக்கும் ஏங்குகிற ஒரு பிச்சைக்காரி".

"ஏன்? உனக்குத்தான் கல்யாணமாகி. விட்டதாகக் கேள்விப்பட்டேனே".

"ஊம். ஆச்சு. கல்யாணமுமாச்சு. இரண்டு பிள்ளைகளும் பிறந்து, என்னை விதவை யாக்கிட்டு அவரும் போயாச்சு. என்ன எழுந் துட்டே?"

"பொய் சொல்கிறவங்களையும் ஏமாற்றப் பார்க்கிறவங்களையும் எனக்குப் பிடிக்காது".

"பொய்யா? சொன்னேனா? நானா? ஏமாத்தினேனா? நீ என்ன சொல்றே?"

"ஆமாம். நீ, நீதான். என்னைக் காதலிச்சே. இன்னொருத்தனைக் கைப்பிடிச்சே. வாழ்ந்தே. இரண்டு பிள்ளைகளைப் பெத்து வளர்த் திருக்கே".

"ஆமாம். மறுக்கலை".

"அப்புறம் ஏன் தனிமரம்னு கதை விடறியே. கேவலமாயில்லையா?"

"போதும் நிறுத்து. ரொம்ப அதிகம் பேசறே" சீறி எழுந்தாள். "நான் காதல் வசப்பட்டேன். அதுக்குக் காரணம் நீ. விருப்பமில்லாத ஏன், ஆர்வமே இல்லாத ஒருத்தருக்கு வாழ்க்கைப் பட்டேன். அதுக்கும் காரணம் நீ".

"நானா?"

"ஆமாம். நீதான்" அவன் நெஞ்சுக்கு நேராக விரலை நீட்டினாள். "நீ - நீதான் காரணம். என் மானசீகக் காதலுக்கு விலை பேசி, பணம் கிடைச்சதும் கேவலம் சொல்லிட்டுப் போகிற நாகரிகம்கூடத் தெரியாமல் அன்றைக்கு ஓடிப் போனியே... அப்ப வந்த ஆத்திரத்திலே அப்பா கிட்டே அவர் சொல்கிற மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டறதாகச் சத்தியம் பண்ணிட் டேன். உடைஞ்சு போனேன். என் அப்பாவும்

மலர்

பி.வி.பி.

மலரே! நீ
மணமக்கள் தோள்களில்
மாலையாகிறாய்!

தெய்வத்தின்
திருமுடியிலும்
வீற்றிருக்கிறாய்!

இடுகாட்டில்
இடும் சவத்தின் மீதும்
இன்பம் காண்கிறாய்!

இவ்வுலகின்
இணையிலாத
சமதர்மவாதி
நீதான்!

வீட்டோட இருப்பார் என்கிற நம்பிக்கையிலே பணக்கார டாக்டருக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டார். அவருக்குத் தேவை நான் இல்லே. ஆராய்ச்சிக்குத் தொல்லை தராத அளவு அமைதியான இந்த பங்களான்னு தெரிஞ்சு நொந்து போனேன்".

முகத்தை மூடிக் கதறினாள்.

"காதலிச்ச உன்னோட வாழ ஆசைப்பட்டேன். ஏமாற்றம். கல்யாணமாகி கணவனோடு குடும்பம் நடத்த ஆசைப்பட்டேன். ஏமாற்றம். பெற்ற குழந்தைகளைக் கொஞ்சியாவது சந்தோஷப்படலாம்னு எதிர்பார்த்தேன். அதிலும் ஏமாற்றம். அவங்களை ஊட்டி, கொடைக்கானல்னு அனுப்பிப் படிக்க வைச்சார். அவங்க பாசம் எனக்குக் கிடைக்கவே இல்லை".

எழுந்து நடந்தாள்.

"நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் கடல்லே ஒரு தனித் தீவு மாதிரி. அன்றைக்கும் சரி; இப்பவும் சரி. நான் தனியாகத்தான் இருக்கேன். இது என் பிரம்ம லிபி. விதி எழுதிய தீர்ப்பு. தப்ப முடியாது".

அவள் போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

"ஒரு நிமிஷம் அனாமிகா! உன் மானேஜர் கிட்ட ஒரு கவர் உன் பெயருக்குக் கொடுத்திருக்கேன். வாங்கிக்க" என்ற சஞ்சீவி, அவள் போகும் திசைக்கு நேர் எதிர்ப்பக்கமாக நடந்தவர் - எதிரே வந்த இனியாவைக் கண்டதும் நின்றார்.

இந்த இனியா ஜீன்ஸ் அணிந்து குட்டைச் சட்டையை வயிற்றின் மேல் பகுதியில் முடிச்சுப் போட்டிருந்தாள். குளித்து மணமாக இருந்தாள். தலையைப் பின்னலிடாமல் காற்றில் பறக்கவிட்டு நடந்தவள் நிற்காமல் சொன்னாள் : "நீங்க போய் 'சூடு ஆறுகிறதுக்கு முந்தி காப்பி சாப்பிடுங்கப்பா. நான் போய் அம்மாவைப் பார்த்துட்டு வரேன்".

"அம்... வந்திருக்கிறாளா என்ன?"

"இல்லே. திடீர்னு இரவல் அம்மா. மேடம் அனாமிகாவைச் சொல்றேன். மானசீகமாக மகளா ஏத்துகிட்டிருக்காங்க" அழுத்தமாகச் சொன்னாள், "சொன்னாங்களே, காலம் அனுமதிச்சிருந்தா நான் அவங்க மகளாயிருந்திருப்பேன்னு".

"தவறு. எந்த நிலையிலேயும் நீ அவங்க மகளாகப் பிறந்திருக்க முடியாது" என்று சொல்லிவிட்டு நடந்தார்.

அவர் போவதைக் கொஞ்ச நேரம் புரியாமல் பார்த்துவிட்டு - திரும்பி - காற்றினால் முகத்தில் வழிந்த முடியை இரண்டு கைகளாலும் ஸ்டைலாகப் பின்னுக்குத் தள்ளிவிட்டு நடந்து முன்னேறி பங்களாவுக்குள் போனாள்.

"அம்மா...!"

சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்த அனாமிகா நிமிர்ந்து புன்னகையுடன் - "வா, கொஞ்சம் காப்பி சாப்பிடு".

"இப்பதான் சாப்பிட்டேன்".

"பரவாயில்லை. இன்னும் கொஞ்சம் சாப்பிடு வா. மானேஜர்!"

"மேடம்..."

"இவங்கப்பா எங்கிட்டக் கொடுக்கச் சொல்லி ஒரு கவர் கொடுத்தாராமே..."

"ஆமாம் மேடம்!"

"அது ஏன் என்னை வந்து சேரலை?"

"ஸாரிம்மா... மறந்துட்டேன்".

"கொண்டு வாங்க... இப்ப, இந்த நிமிஷமே".

"சரி மேடம்" என்றவர் வரவேற்பறை மேடையைப் பார்த்தார். பேப்பர் வெயிட் மட்டும் இருந்தது. மேஜை முழுவதும் தேடினார். பறந்து விழுந்திருக்குமோ என்று கீழே தரையில் தேடினார். வெளிப்பக்கமாக எட்டிப் பார்த்தவர் தரையை ஆராய்ந்தார்.

"சீக்கிரம். என்ன தேடுறீங்க, அங்கே?"

"அந்தக் கவர்..." கலவரமாகப் பார்த்தார், "அந்தக் கவர் காணவில்லை மேடம்!"

—தொடரும்

சங்கப்பலகை

கடலம்மா

(ஆசிரியர் – ராஜகுமாரன் (லதா). வெளியீடு – பூவழகி பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை – 14. பக்கங்கள் – 104. விலை – ரூ. 14.00).

சமூகப் பிரக்ஞையோடும், மானுட நேயக் கருத்துகளோடும் எழுதப்பட்டுள்ள இந்நூலில் எட்டு சிறுகதைகள் உள்ளன. வட்டார மொழியில் அழகாக எழுதப்பட்டுள்ளன. சுயமாகச் சிந்தித்து வாசகர்களைத் தம் கருத்து வலைக்குள் வளைக்கும் ஆற்றல்மிகு எழுத்தாளர் ராஜகுமாரன் என்பதற்கு இந்நூல் ஓர் அத்தாட்சி.

இனிமை, இன்பம், இறைவன்

(ஆசிரியர் – ஆர்.எஸ். வித்யா சாகர். வெளியீடு – கலைவாணி புத்தகாலயம், ராஜாபாதர் தெரு, சென்னை – 17. பக்கங்கள் – 152. விலை – ரூ. 24.00).

"அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே, நம்மைச் சூழும் அனந்த கோடி ஜீவராசிகளாக நின்று காக்கிறது. இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து. தன்னிடத்தில் உலகையும், உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன்" என்பார் பாரதியார்.

இப்படிப்பட்ட ஏராளமான சிந்தனைகள் இதில் அடக்கம்.

ஒளியைத்தேடி

(ஆசிரியர் – சந்தக் கவிமாமணி தமிழழகன். வெளியீடு – கவிதாலயம், 5, திருவள்ளுவர் தெரு, பாலகிருஷ்ணா நகர், திருவொற்றியூர், சென்னை – 19. விலை – ரூ. 16.00).

மதிப்பீடு: பின்னலூர் மு.விவேகானந்தன்

"அற்புதத்தின் சொற்பதத்தில்
அந்தரங்க சந்தம் பொங்க
ஆடுவேன் – கவி பாடுவேன்"

என்று அறிமுகமாகும் இக்கவிஞர்,

"முனியாய்க் கிடந்த என்
மொழும்கல் மனத்தினைக்
காளியாய்ப் படைத்தொளி
காட்டிய தரிசனம்"

என்று மெய்ஞானக் கவிதைகூறி,

"புதிய யுகத்தின் விடிவென்று
புகையும் அகத்தின் முடிவென்று
எதிலும் துணிச்சல் வரப்பெற்றேன்
இதோ இதோ நான்
புறப்பட்டேன்".

என்று ஒளியைத் தேடி நடக்கின்றார்.

மனநிறைவைத் தரக்கூடிய மரபுக் கவிதைத் தொகுப்பு நூல். தரமான கவிதைகள் தமிழழகன் கவிதைகள்.

நிலவைப் பிடித்த மக்கள்

(ஆசிரியர் – ஜே. பால் பாஸ்கர். வெளியீடு – அமைதி அறக்கட்டளை, திண்டுக்கல். விலை – ரூ. 50.00).

முகமற்றுப் போன எண்ணற்ற இந்தியக் குழந்தைத் தொழிலாளர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட இந்நூலில் 72 மழலைப் பாடல்களும், 19 மழலைக் கதைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. மிகைப் படுத்தப்படாத வார்த்தைகளால் நெருப்பு மூட்டலாம் என்று நிரூபித்துள்ளார்கள் குழந்தை இலக்கியப் படைப்பாளிகள். ஜீவனுள்ள ஒரு கவிதை – கதைத் தொகுப்பு.

நலமான தாய்மை குழந்தைநல முன்னேற்றப் புரட்சி

(ஆசிரியர் – டாக்டர் பா. சந்திரா. வெளியீடு – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை – 98. விலை – ரூ. 49.00).

தாய் சேய் நலத்தை மேம்படுத்துவதற்காக எழுதப்பட்டுள்ள இந்நூல் மருத்துவ ஊழியர்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் மட்டுமல்லாமல் எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக எழுதப்பட்டுள்ளது. குழந்தை வளர்ப்பில் தாய்மார்களின் பங்கு, கடமை போன்றவை வலியுறுத்தப்பட்டுள்ளன. டாக்டர் பா. சந்திரா அவர்களின் பயிற்சியும், அனுபவமும் கலந்துள்ள இந்நூல் பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய நல்ல நூல்.

காந்திதேசம்

(ஆசிரியர் – திருவாரூர் பாபு. வெளியீடு – கங்கை புத்தக நிலையம், தீனதயாளு தெரு, சென்னை – 17. பக்கங்கள் – 108. விலை – ரூ. 14.00).

"இவைகள் என்னைப் பொறுத்த வரைக்கும் சிறுகதைகள் அல்ல. வீரிய விதைகள். இன்னும் சொல்லப் போனால் சூரிய விதைகள்" என்ற, எழுத்தாளர் ராஜேஷ்குமார் அவர்களின் அணிந்துரையே இச்சிறுகதைகளுக்கு நல்ல தோரணவாயிலாக அமைந்துள்ளது. பதினான்கு சிறுகதைகளைக் கொண்ட இந்நூல், அன்றாட நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது, சிறப்பாகவுள்ளது.

மாணவர்களுக்கான கட்டுரைகளும் பயிற்சி முறைகளும்

(ஆசிரியர் – பி.சி. கணேசன். வெளியீடு – கங்கை புத்தக நிலையம், சென்னை – 17. விலை – ரூ. 14.00).

மாணவர்கள் எழுதும் கட்டுரைகள் எப்படி அமைய வேண்டும். அதில் என்னென்ன அம்சங்கள் இடம்பெற வேண்டும், தகவல்களைச் சேகரித்து, தொகுத்து வடிவம் கொடுப்பது, எப்படி என்பன பற்றி விளக்கமாக எழுதப்பட்டுள்ள இந்நூல், மாணவர்களுக்குப் பெரிதும் பயன் படக்கூடிய நூல்.

அனுமனைப் போற்றுவோம்

(ஆசிரியர் – என்.எஸ். முத்து கிருஷ்ணராஜா. வெளியீடு – கம்பன் கழகம், இராஜபாளையம் – 626 117. பக்கங்கள் – 125. விலை – ரூ. 30.00).

"இப்பிறப்பு என்பது ஒன்றும்
இரும்பொறை என்பது ஒன்றும்
கற்பு எனும் பெயரது ஒன்றும்
களிநடம் புரியக் கண்டேன்"

என அனுமனின் சொல்வன்மையையும்,

"இசைசுமந்து எழுந்த தோளான்" என்று வீரத்தையும், "அரியணை அனுமன் தாங்க" என்று அனுமனது அடக்கத்தையும் காட்டி,

"அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்" என்று பெருமைப்படுத்திக் காட்டும் இந்நூல், அனுமனைப் பற்றி நிறைய அறிந்து கொள்ள உதவுகிறது.

சங்கப்பலகை

மதிப்பீடு: நீலவன்

அப்பா, அன்புள்ள அப்பா!

(ஆசிரியர் - சுஜாதா. வெளியீடு - விசா பப்ளிகேஷன்ஸ், 55, வெங்கட் நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 600 017. பக்கங்கள் - 98. விலை - ரூ. 13.00)

ஓர் இதழ்த் தயாரிப்பில் நேர்ந்த அனுபவம், அறிவு ஜீவியான தந்தையின் மரணப் படுக்கைச் சித்திரங்கள், 'குமுதம்' ஆசிரியர், 'விகடன்' ஆசிரியர், சாவியில் சொன்ன கேள்வி பதில், கம்ப்யூட்டர்களைப் பற்றிய செய்திகள் - போன்ற வித்தியாசமான, சுவாரசியமான கட்டுரைகளுடன் கர்நாடக மாநில நாட்டுப்புறப் பாடல்களை அறிமுகப் படுத்தியிருக்கிறார் ஆசிரியர். நூலின் அட்டையும்கூட அசத்துகிறது.

அருள் சுரக்கிறது அவர் வடிவிலே

(ஆசிரியர் - பி.சி. கணேசன். வெளியீடு - திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணாரோடு, தி. நகர், சென்னை - 600 017. பக்கங்கள் - 175. விலை - ரூ. 22.00)

பாபாவிடம் ஈடுபாடு கொண்ட டாக்டர் பானர்ஜி தன் பன்னிரண்டு வயது மகனை நண்பர்களோடு காரில் ராமேஸ்வரம் அனுப்பினார். புயலில் பாம்பன் பாலம் தகர்ந்தது. ரயில் நொறுங்கியது. நீரில் நிறையப் பேர் இறந்தனர். செய்தியறிந்த பானர்ஜி, பாபாவிடம் முறையிடுகிறார். "உங்கள் மகன் தீபக்கிற்கு ஒரு பயமுமில்லை..." பாபா சாதாரணமான தொனியில் திருவாய் மொழிகிறார்... "அவர்கள் தங்கியிருந்த விடுதி வெள்ளத்தில் போய் விட்டதாம்" என்று பானர்ஜி சொல்லி முடிக்குமுன்பே, "தீபக் தங்கியுள்ள விடுதிக்கு ஒன்றும் ஆகவில்லை... நாளை தகவல் வரும் பத்திரமாய் இருப்பதாய்" என்கிறார் பாபா. மறுநாள் தீபக்கிடமிருந்து செய்தி வருகிறது. இதுபோன்ற பாபாவின் பல மகிமைகள், அவரது வரலாறு அடங்கிய அருள் சுரக்கும் அரிய நூல்.

கரையெல்லாம் செண்பகப்பூ

(ஆசிரியர் - சுஜாதா. வெளியீடு - விசா பப்ளிகேஷன்ஸ், 55, வெங்கட் நாராயண சாலை, தி. நகர், சென்னை - 17. பக்கங்கள் - 224. விலை - ரூ. 30.00)

பத்திரிகையில் வெளிவந்த தொடர்கதை நூலாகி, மீண்டும் படிக்கையில் ஏற்கனவே படித்தது என்ற உணர்வை உண்டாக்காத ஒன்றாய் வாசிப்போரைத் தன்னில் ஐக்கியமாக்கிக் கொள்கிற வகை. சரக்கென்று மனத்தைச் சென்றடையும் சத்தான கதை, பாத்திரங்கள், சம்பவப் பின்னல்களை அடக்கியது. நாட்டுப்புறப் பாடல்கள் நிறைய இடம் பெற்றுள்ளன. மருதமுத்து, வெள்ளி கல்யாணராமன், சிநேகலதா போன்றோர் வாசிப்போரின் மனக் கரையில் 'மணந்து' கொண்டேயிருப்பார்கள்.

பி.சி.கே. கவிதைகள்

(ஆசிரியர் - பி.சி. குழந்தைவேலு. வெளியீடு - சேலம் தமிழ் இலக்கிய மன்றம், 12, பிரட்ஸ் ரோடு, சேலம் - 1. தமிழ் நாடு - 636 001. பக்கங்கள் - 62. விலை - ரூ. 8.00)

அரசியல்வாதியை நார் நாராய்க் கிழிக்கும் கவிஞர், அரசியல் கட்சியான தான் சார்ந்த காங்கிரஸை மக்களின் கடவுள் என்று பாடியிருப்பது எங்கேயோ ஒரு சிறு நெருடலை ஏற்படுத்துகிறது. தேசியத் தலைவர்களைப் பற்றியும், கவியரசு பற்றியும் பாடிய கவிதைகள் மீண்டும் படிக்கத் தூண்டுகின்றன. கருத்துள்ள கவிதைத் தொகுப்பு.

நீதிநூல் களஞ்சியம்

(ஆசிரியர்-திருமதி. சு.சண்பகம். வெளியீடு - திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணா ரோடு, தி. நகர், சென்னை - 600 017. பக்கங்கள் - 190. விலை - ரூ. 26.00)

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலக நீதி, வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி போன்ற ஏழு நீதி நூல்களுக்கும், பதவுரை, கருத்துரை எளிய நடையில் சொல்லப்பட்டுள்ளன. மாணவர்க்கு மட்டுமல்ல, மற்றோர்க்கும் ஏராளமானவற்றை தாராளமாய் எடுத்துச் சொல்லும் ஏற்றமிகு தொகுப்பு.

ஒரு மரத்தின் தோழர்கள்

(ஆசிரியர் - பூதலூர் முத்து. வெளியீடு - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017. பக்கங்கள் - 84. விலை - ரூ. 10.00)

ஒன்றாய்ப் படிக்கும் மாணாக்காரிடையே அன்பும், பாசமும், கடமையும், தோழமையும் நிலவுதலே எதிர்காலத்திற்குச் சரியான படிக்கற்கள் என்பதையும், உழைப்பும், உண்மையும், விழிப்புணர்வும் என்றும் எங்கும் எல்லாவற்றையும் பெற்றுத்தரும் அமுதசுரபிகள் என்றும் எடுத்துக் கூறும் ஒன்பது கதைகளடங்கிய சிறுவர்க்கேற்ற சீரிய தொகுப்பு.

ஆரோக்ய வாழ்வுக்கு அவசியமான உடற்பயிற்சிகள்

(ஆசிரியர் - ஜனார்தன். வெளியீடு - ஸ்ரீராகவேந்திர நிலையம், 8, கங்கையம்மன் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பக்கங்கள் - 80. விலை - ரூ. 11.00)

மனதிற்கும் உடலுக்கும் ஆரோக்கியத்தை விளைவிப்பன உடற்பயிற்சிகள். அதனாலேயே சிறு பிராயத்திலிருந்து உடற்பயிற்சியின் மேன்மைகளைப் பள்ளிகளில் அறிமுகம் செய்விக்கின்றனர். இச்சிறு நூலில் தண்டால், பஸ்கி, சூரிய நமஸ்காரம், ஆசனப் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகள் தக்க படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

கண்ணோட்டம்

(ஆசிரியர் - ம.நாராயணன். வெளியீடு - நிறைவாணன் பதிப்பகம், 3, பெரியார் வீதி, பாவேந்தர் நகர், வேலூர் - 9. வ.ஆ.அ.மா. பக்கங்கள் - 128. விலை - ரூ. 25.00)

இசுலாமியக் காப்பியமான இராஜநாயகம் எனும் நூலும், அதன் மேன்மையும் சிறு கட்டுரையாய், இந்நூலில் இடம்பெற்றுள்ள பன்னிரண்டு கட்டுரைகளில் தலையானதாய் அமைந்துள்ளது. ஆறுமுக நாவலர், கம்பதாசன், பதின்கவனகர் பெ. இராமையா, செய்குதம்பி, தா. காசிம், சுரதா, புலவர் குழந்தை, ஞா. தேவநேயப் பாவாணர் போன்ற தமிழுக்குப் பெருமை கூட்டிய அறிஞர்கள் பற்றிய தகவல்கள், படைப்புகளைப் பற்றிய மதிப்பீடுகள் நிறைந்துள்ளன.

தமிழிலக்கியக் கடலுக்குக் கிடைத்த முத்துகளில் இதுவும் ஒன்று. ஒளி வீசுகிறது.

வங்கிகளில் சேமித்து வளமான தொழில் செய்வது எப்படி?

(ஆசிரியர் – எம். இராமச் சந்திரன். வெளியீடு – வசந்த் பதிப்பகம், முத்துக்குமாரசாமி நகர், எஸ்.எஸ். காலனி, மதுரை – 625016. விலை – ரூ. 12/-)

சேமிப்பின் அவசியத்தையும், அதற்கான வழிவகைகளையும் இந் நூலில் ஆசிரியர் தெளிவாக விளக்கியிருப்பதோடு, வங்கிகளின் பிரிவுகள் பற்றியும், பணிகள் பற்றியும் பாங்குடன் பகர்ந் துள்ளார். சிறுதொழிலில் ஈடுபடக் கடன் பெறுவதற்கான விளக்கங் களும், சுயவேலை வாய்ப்புக்காக, வங்கிகள் புரியும் உதவி பற்றி யும் இந்நூல் ஆசிரியர் பலரும் படித்துப் பயன்பெறும் வண்ணம் படைத்துள்ளார்.

சொந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது எப்படி?

(ஆசிரியர் – வாசன். வெளியீடு – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098. விலை – ரூ. 12.00)

வாழ்க்கை என்பது மலர்ப் படுக்கை அல்ல. மனிதன் பிறந் ததிலிருந்தே எண்ணற்ற இடை யூறுகளும் தோன்றிவிடுகின்றன. சிறிய பிரச்னைகளும் சிலருக்கு இமயமலை போன்று தோன்றும். 'நாம் அன்றாடம் யதார்த்த வாழ் வில் எதிர்நோக்கும் பிரச்னைகளை அலசி ஆராய்ந்து அவற்றிலிருந்து தீர்வு காண நாம் மேற்கொள்ள

மதிப்பீடு: தேனி, தேன்மொழி

வேண்டிய அணுகுமுறைகளை உளவியல் நோக்கில் தெளிவாக விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

ஒவ்வொரு துளியிலும்

(தொகுப்பாசிரியர்கள் – 'உதயம்' ராம், எஸ்.வி.ராஜசேகர். வெளி யீடு – 'உரத்த சிந்தனை' வாசக எழுத்தாளர் சங்கம், 5, அருணா சல ஆச்சாரி வீதி, சேப்பாக்கம், சென்னை – 600 005. விலை – ரூ. 15.00)

இந்தியன் ஆயில் கார்ப்ப ரேஷன் ஆதரவுடன் 'உரத்த சிந்தனை' வாசக எழுத்தாளர்கள் சங்கம் தொகுத்து வழங்கும் எரிபொருள் சிக்கனம் பற்றிய கவிதைத் தொகுதியே இந்நூல். இந்தக் கவிதை நூல் வீட்டுக்கும், நாட்டுக்கும் பயன் தருகிற தகவல் களைத் தந்திருக்கிற கருத்துப் புதையல். எரிபொருட் சிக்க னத்தை எழுத்துச் சிக்கனத்தால் இயம்ப முனைந்ததே இந்த இலக்கியப் படைப்பு. நமக்கு அறிவுரை பகர்வது போன்று எளிய நடையில் படைக்கப்பட் டுள்ள சிறந்த தொகுப்பாகும்.

விபரீதம் இல்லாத வேஷங்கள்!

(ஆசிரியர் – பரிக்கல் என். சந்திரன். வெளியீடு – பல்கலைப் பதிப்பகம், 36, தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024. விலை – ரூ. 20.00)

இலக்கியம் காலத்தின் கண் ணாடியாக என்றென்றும் விளங்கி பரிணதியில் இந்த 'விபரீதம் இல்லாத வேஷங்கள்' சிறுகதைத் தொகுப்பு ஒரு மைல்கல்! சொல்ல வந்த செய்தியையும் கதையையும் வெடுக்கெனக் கேட் கும் வேகமான காலம் இது. அந்த வேகத்திற்கு இந்தத் தொகுப்பு ஈடுகொடுக்கிறது. போற்றத்தகுந்த பண்பாடு, கலாச்சாரம், ஒழுக்கம் என்ற சமூகப் பெருமைகளுக்கெல்லாம் மூல ஆதாரமாக விளங்குபவை எழுத்தாளனது படைப்புகளே. அந்தப் பொறுப்புணர்வை இந்த எழுத்தாளரிடம் பார்க்க முடி கிறது. எளிய வார்த்தைகளால் மக்கள் மேம்பாட்டுக்கான கருத்து களை வெளிப்படுத்தியுள்ளார்.

..... என்பதாய் இருக்கிறது

(ஆசிரியர் – இலக்குமிகுமாரன், ஞான திரவியம். வெளியீடு – சிந்து பதிப்பகம், 213, மகாவீர் காம்ப் ளக்ஸ், இராயப்பேட்டை நெடுஞ் சாலை, சென்னை – 600 014. விலை – ரூ. 20.00)

இன்றைய இளைய தலை முறைக் கவிஞர்களில், மனித நேயத்தையும், யதார்த்தத்தையும் அப்பட்டமாகச் சித்திரித்துக் கவிதை வடிப்பவர் இலக்குமி குமாரன் ஞான திரவியம்.

தன் வருங்கால வாரிசுக்காக கணவனை, சுகப்படுவதைக் கூட உதறிவிட்டு, தூரதேசம் போய்ச் சோம்பலின்றிச் சொத்துச் சேர்க்க மனைவி தூண்டுவதாய்ப் படைத் திருக்கிறார். "குளிர்ந்த நீர் வேண்டு மானால் பொன்குடத்தில் வைக் காதே, மண் குடத்தில் வை' என்று எளிமைக்கு எழிலூட்டிப் படைத்து இருக்கும் இக் கவிதைக் கருத்து களைப் படித்து இன்புறுவோம்.

மனித உடற் கூறுபாடு (HUMAN ANATOMY)

(ஆசிரியர் – டாக்டர் S. சிதம்பரம் தாணு பிள்ளை. வெளியிட்டு, விற் பனை செய்வோர் – சித்த மருத் துவ நூல் ஆராய்ச்சி நிலையம், த.பெ.எண் 7162, E 32 அண்ணா நகர் (கிழக்கு) சென்னை – 600 102. பக்கங்கள் – 195 விலை – ரூ. 100.)

தமிழ் மருத்துவத்தில் நூல் பூர்வமாகவும் தற்போதைய அறிவு அடிப்படைக்குத் தக்கவாறும் மனித உடலின் கூறுபாடுகளை விளக்கும் நூல் இருப்பதாகத் தெரியவில்லை. உடற்கூறு பற்றி ஆங்கிலத்தில் தெரிந்து கொள்ள இயலாத பொதுமக்கள், மாண வர்கள், எல்லா முறை மருத்து வர்கள் முதலியோருக்கு நிறை அறிவு பெற இந்த நூல் பயன் படும் என்று நூல் ஆசிரியர் இயம்பியுள்ளார். அதற்கேற்ப எலும்புப் படலத்தில் ஆரம் பித்து மார்புக்குழிப்படலம் வரை ஒன்பது படலங்களில் மனித உடற் கூற்றை, கேள்வி பதில் உருவில் தந்துள்ளார். அதற் கேற்ப படலங்களுக்குத் தேவை யான படங்களும் தரப்பட்டுள்ளன. இளம் பெண்களுக்கு சாமியாட்டம் வருவதேன், தேர்வுக்கு எப்படி படித்தால் மாணவர் தேர்வுற லாம், காமம் தங்கியுள்ள இடம் எது, சர்மத்தில் போடப்படும் பற்று எவ்வாறு உடலில் சேரு கிறது என்பன போன்ற பயனுள்ள பல விவரங்களை நூலில் அறிய லாம்.

—அறந்தாங்கி

டாக்டர் சுப. சதாசிவம்

ஆளில்லாத கேட்

அந்த ஆளில்லாத கேட் அருகே ஒரு பெரிய அரசமரம். மரத்தை ஒட்டி ஒரு சுமைதாங்கி. இரு உள்ளங்கைகளையும் கல்லின்மீது அழுந்தவைத்து ஓர் எம்பு எம்பி ஏறி அமர்ந்து கொண்டான் நல்லமுத்து.

அவன் அங்கே வருவதற்குச் சற்று முன்புதான் தெற்கே செல்லும் பாசஞ்சர் வண்டி அந்த ஆளில்லாத கேட்டைக் கடந்து போயிற்று. அடுத்து பத்துமணி சுமாருக்கு ஓர் எக்ஸ்பிரஸ் ரயில் வடக்கு நோக்கிச் செல்லும்.

வயிற்றைப் பிசையும் பசியோடும், நெஞ்சைப் பிசையும் சோகத்தோடும் அமர்ந்திருந்த நல்லமுத்து அந்த எக்ஸ்பிரஸ் ரயிலுக்காகக் காத்திருந்தான். தற்கொலை செய்துகொள்வது என்கிற முடிவுக்கு நேற்று இரவே அவன் வந்துவிட்டிருந்தான்.

சென்ற ஆண்டுதான் அவனுக்கும் பொன்னுமணிக்கும் திருமணம் நடந்தது. பொன்னுமணி வரும் வேளை வீட்டில் பொன்னும் மணியுமாய்ப் பூத்துக் குலுங்கப் போகிறது என்று உச்சிவெயில் வேளையிலும் அவன் சொப்பனம் கண்டான்.

அந்தக் கனவுகளுக்கெல்லாம் பொருளில்லை என்பதுபோல் அடுக்கடுக்காய்த் தொடர்ந்து வந்த சோதனைகள் அவனைத் துன்புறுத்தியதோடல்லாமல் அச்சுறுத்தவும் செய்தன.

“உங்களுக்கு வர்ற சம்பளத்துல கொஞ்சம் கொஞ்சமா மிச்சம் பிடிச்சு ஒரு டெலிவிஷன் பெட்டி வாங்கணுமுங்க...” என்று ஒருநாள் பொன்னுமணி சொன்னபோது அவளுடைய அந்த ஆசையைச் செவிமடுத்தவன் மெலிதாக ஒரு சிரிப்பைப் பதிலாகத் தந்தான்.

தொடர்ந்து வந்த நாள்களில் அவள் தன் விருப்பப்பட்டியலில் மேலும் மேலும் எதையெதையோ சேர்த்துக்கொண்டு போனபோது அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், “எனக்குப் பதிலா நீ இந்த ஊரு மைனரைக் கண்ணாலம் கட்டிக்கிட்டிருந்தியானா இந்நேரம் நீ கேட்டதெல்லாம் தங்கு தடை இல்லாம உனக்குக் கிடைச்சிருக்கும்...” என்று ஒருநாள் தான் சொன்ன பதில் அவளை நிலைகுலையச் செய்துவிட்டதை இப்போது எண்ணிப் பார்க்கிறபொழுதும் அவனுக்குச் சங்கடமாக இருந்தது. அப்படிப் பேசியிருக்கக் கூடாதுதான். அவன் அப்படிப் பேசியதில் அவள் முற்றிலும் சரிந்து விழுந்து கண்ணீர் விட்டு அழுதது நினைவில் வந்து அவனைப் பாடாய்ப் படுத்தியது.

அதற்குப் பிறகு அவள் மௌனியாகிப் போனாள். ஓர் எந்திர வாழ்க்கைக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளத் தொடங்கி விட்டாள்.

நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரத்தில் வடக்கே செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் வந்துவிடும்.

சுமைதாங்கிக் கல்லில் அமர்ந்திருந்த நல்லமுத்து கீழிறங்கி அந்த ஆளில்லாத கேட்டை நோக்கி நடந்தான். சற்றுத் தொலைவில் தண்டவாளத்திற்கிடையே இரண்டு ஆடுகள் படுத்திருந்தன. ஒரு சிறு கல்லை எடுத்து அவற்றை நோக்கி எறிந்தான். அந்தக் கல்லெறியை அலட்சியம் செய்கிறாற்போல் அவை அசையாமல் இன்னமும் அங்கேயே படுத்துக்கிடந்தன.

அந்த ஆடுகள் என்றில்லை; மனிதர்களும் தன்னை உதாசீனப் படுத்துவதாக அவன் தன்னுள் ஓர் அபிப்ராயத்தை உருவாக்கிக் கொண்டு வந்தான்.

அவனுடைய முதலாளி ஒருநாள் இறந்து போனதும், அவருடைய பிள்ளைகளிடையே சொத்தைப் பங்கிட்டுக் கொள்வதில் எழுந்த வாதப் பிரதிவாதங்கள் முற்றி, அவன் வேலை செய்து வந்த கடை இழுத்து மூடப்பட்டதும் அவனை மேலும் தாக்குதலுக்கு உள்ளாக்கின.

கையிருப்பு சிறிது சிறிதாகக் கரைந்து, ஏதோ ஓர் அசட்டு நம்பிக்கையில் அவன் வெளியில் வாங்கிய கடன்கள் கழுத்துக்கு நேராய்க் கத்தியை இறக்குவதாய் அவன் உணரத் தலைப்பட்டான்.

“ஏன் இப்படி வேதனைப் பட்டுத் தவிக்கறீங்க? தொடர்ந்து முயற்சி செய்தீங்கன்னா ஒரு வேலை உங்களுக்குக் கிடைக்காமலா போயிடும்?”


பொன்னுமணியின் ஆறுதல் வார்த்தைகள் மனதிற்கு இதமாய் இருந்தபோதிலும் நிலைமை அதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. எவரும் அவனுக்காகப் பரிதாபப்படவில்லை.

அந்த நிதர்சனத்தின் முன் தலைகவிழ்ந்து போனவன் மனைவியை ஊருக்கு அனுப்பி வைத்தான். ஏதாவது வேலை கிடைத்ததும் திரும்ப அழைத்துக் கொள்வதாக அவன் சொன்னதில் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளும் மனோபாவம் ஏதும் இல்லை என்பது அவளுக்குப் புரிந்துதான் இருந்தது. வயிற்றுப் பாட்டுக்கு வழியில்லை என்கிற போது அந்த அவஸ்தைக்கு அவளையும் உள்ளாக்க அவன் விரும்பவில்லை. சுயநலக் கலப்பில்லாத உள்நோக்கம் அது.

தன் விருப்பத்தை ஏற்று அவள் ஓர் எதிர்கால நம்பிக்கையை மனதில் விதைத்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டுச் சென்றது அவனை நிம்மதிப் பெருமூச்சு விடவைத்தது.

கஷ்டங்களும் சோதனைகளும் தொடரத் தொடர அவன் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து கொண்டிருந்தான். வளமான சிந்தனையும், அழுத்தமான நம்பிக்கையும் பட்டுப்போய், தற்கொலை என்கிற முடிவுக்கு அவன் இறங்கி வந்தது உறக்கம் வராத நேற்றைய பின்னிரவில் தான்.

வினோதானந்த்



படுத்திருந்த அந்த ஆடுகள் இரண்டும் இப்போது சாவதான மாக எழுந்து தண்டவாளத்தைக் கடந்து கிழக்குச் சரிவில் இறங்கிக் கொண்டிருந்தன.

கதவு பூட்டப்பட்டிருந்ததைப் பார்த்த பொன்னுமணி, 'இந்தக் காலை நேரத்துல எங்கே பொறப் பட்டுப் போயிருக்காருன்னு தெரியலையே!...' என்று கூறிய படி பையையும், சிறு பெட்டியை யும் திண்ணையில் வைத்தாள்.

"இங்கேதான் எங்கேயாவது தேநீர் குடிக்கவோ, நாஸ்தா வுக்கோ போயிருப்பார். உன்கிட்ட ஒரு சாவி இருக்கில்ல...?" என்றார் அவளுடன் வந்திருந்த அவள் தந்தை செல்லத்துரை.

"இருக்குப்பா..."

தன் தந்தைக்குப் பதிலளித்த படியே பையைத் துழாவி சாவிக் கொத்தை எடுத்துப் பூட்டைத் திறந்தாள்.

ஒரு பரிபூரண அமைதி வீட்டி னுள் நிலவியது.

அந்தக் காலை நேரத்திலேயே சூரிய வெப்பம் தன் ஆளுமையைக் காட்டத் தொடங்கியிருந்தது.

"முதல்ல குடிக்கத் தண்ணி எடுத்தாம்மா. தாகம் நெஞ்சை வறட்டுது..."

பொன்னுமணி ஒரு செம்பில் நீர் மொண்டு வந்தாள்.

சில்லென்ற நீர் நெஞ்சுக் குழியில் இறங்கியதும் உடல் சற்றுப் புத்துணர்வு பெறுவதாய் உணர்ந்தார் செல்லத்துரை.

மேல்துண்டால் முகத்தில் அரும்பியிருந்த வியர்வையை ஒற்றி எடுத்தபடி தரையில் அமர்ந்தவர், "பொன்னு! உன் புருசன் வந்தா கவலைப்பட்டு உடலை வருத்திக்க வேண்டா மின்னு சொல்லு. எப்படியும் உன் சித்தப்பன் ஆடி மாசம் முடிஞ் சதும் மகனோட தங்கியிருக்கப் பட்டணம் போயிடுவான். கடையை யாருக்கும் விட்டுடாதேன்னு சொல் லிட்டேன். நானே கொஞ்சம் முதல் போட்டு வேண்டியதை வாங்கிப் போட்டுடறேன். ஆவணி பொறந் ததும் நீயும் உன் புருசனும் தட்டு முட்டுச் சாமானையெல்லாம் அள்ளிப்போட்டுக்கிட்டு ஊருக்கு வந்திடுங்க. இங்கே இருந்தா என்ன, அங்கே இருந்தா என்ன? பிழைப்புக்கு ஒரு வழி வேணும், அவ்வளவுதானே? உன் புருசன் சாமர்த்தியமா நடந்துக்கிட்டா ரெண்டே வருசத்துல நல்ல பணம் பார்த்திடலாம். என்ன சொல்றே?"

"அதெல்லாம் பார்த்துக்குவார். இப்ப ஏதோ கிரகம் பிடிச்சு வாட்டியெடுக்குது. என்ன செய்ய..?"

உன்னைப் பற்றி...

வெ. இறையன்பு

உன்னைப் பற்றி
ஒரு கவிதை கேட்டாய்.
என்னிலிருந்து நீயே
கவிதையாக வெளிப்படுகின்றாயே!

அர்ப்பணிப்பு என்பது உனக்குத்
தனியாய்த் தேவையில்லை

என் எல்லாக் கவிதைகளிலும்
நீயே
அமிழ்ந்திருக்கும்போது

அச்சுதா! அவதாரம் எடு!

எஸ். குமாரகிருஷ்ணன்

● திரைப்படப் பேரைச் சொல்லி
மறைப்பிடக் காட்சி காட்டும்
துச்சாதனர் வேஷம் கலைய
அச்சுதா! நீ ஓர் அவதாரமெடு!

● பிரிவினைப் பேச்சைத் தூண்டி
தீவினை செய்யத் துடித்து
நாட்டுக்கு நாசங்கள் உண்டாக்கும்
நவீன நரகாசுரர்களை நசுக்கிவிடு!

● அரக்கக் குணமே கொண்டு
இரக்கம் சிறிதும் இன்றி
பிறக்கும் பெண்சிசு அழிக்கும்
நரபலிக் கம்சன்களைத் திருத்திவிடு!

● துன்பம் மண்ணில் மறைந்திட
அன்பும் அறமும் பெருகிட
இராவண எண்ணம் ஒழிந்திட
அச்சுதா! நீ ஓர் அவதாரமெடு!

"இனிமே நல்லகாலம்தான். கவலையை விடு..." என்றவர், "பொன்னு! இந்தா பணம். ஏதாவது வாங்கிட்டு வந்து நல்ல சமையலாச் செஞ்சு வை. பாவம், இவ்வளவு நாளும் உன் புருசன் என்ன சாப்பிட்டாரோ, எப்படிக் கஷ்டப்பட்டாரோ...? வாய்க்கு ருசியா ஏதாவது செய்யும்மா. வயிறாரச் சாப்பிடட்டும்..." என மருமகன்மேல் பாசப் பொழிவோடு பேசியபோது பொன்னுமணிக்குத் தன் தந்தையின் பெரிய மனதை நினைத்துப் பெருமையாக இருந்தது.

பொன்னுமணி கடைக்குப் புறப்பட்டுப் போனாள். செல்லத்துரை சுவரோரம் சாத்தி வைக்கப்பட்டிருந்த விசிறியைக் கையிலெடுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

தூரத்தில் இரண்டு நாய்கள் காரணத்தோடோ, காரணமின்றியோ சண்டையிட்டுக் கொண்டிருந்தன. லாரி ஒன்று கருப்பங் கழிகளை ஏற்றிக்கொண்டு புழுதியைக் கிளப்பியபடி விரைவாகச் சென்றது. சற்றைக்கெல்லாம் வடக்கே செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் அந்த ஆளில்லாத கேட்டை, தடக் தடக் என்கிற பெருத்த ஓசையோடு கடந்து செல்வது தெளிவாகக் கேட்டது.

புருஷனுக்குப் பிடிக்குமே என்று, தந்தை கொடுத்த பணத்தில் கறியும், மீனும் வாங்கிவந்த பொன்னுமணி, அவன் இன்னும் வீடு திரும்பாதது கண்டு தவித்தாள். நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

"இன்னும் அவரைக் காணலையே...!"

மனதில் பதற்றத்தோடு கேட்ட மகளைப் பரிவோடு நோக்கிய செல்லத்துரை, "வீணா ஏம்மா கவலைப்படறே...?" நீ சமையலை முடிக்கறதுக்குள்ள வந்திடுவார்..." என ஆருடம் போல் கூறினார்.

அரை மணிக்குப் பிறகு "யக்கோவ்!..." என்று அழைத்துக் கொண்டு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடிவந்த மேலத்தெரு சின்னராசு, "நம்ம ஊரு கணக்குப்பிள்ளை ஐயாவோட மக பத்துமணி ரயிலுக்கு முன்னாடி பாய்ஞ்சு உசிரை விடப் பார்த்திச்சு. அதைக் கண்டுப்பிட்டு நம்ம அண்ணன்தான் அது தலை முடியைப் பிடிச்சு இழுத்துக் காப்பாத்தியிருக்காரு. ஊரு மொத்தம் அந்த ஆளில்லாக் கேட்டாண்ட கூடியிருக்குது...!" என்று அவசரமாக ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு அதே அவசரத்துடன் ஓடிப் போனான்.

நல்லது ஒன்றைச் செய்துவிட்டு ஊராரின் பாராட்டுகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு நிற்பதைக் காணவும், தன் தந்தை கூறிய நல்ல திட்டத்தைத் தெரிவிக்கவும், தன் நாயகனை நோக்கி ஆசை அலைமோதும் உள்ளத்துடன், புயல் வேகத்தில் · புறப்பட்டு ஓடினாள், பொன்னுமணி.

புன்னகையும் பெருமூச்சும் கை குலுக்குகின்றன !

தங்க சிவராசன்

"மணி அஞ்சாயிட்டுதில்லே?"

சித்தப்பாவின் கேள்வி இறுக்கமாய் வந்தது. மனதுக்குள் நெளிந்த அச்சம், மூக்குக் கண்ணாடிக்குள் இருந்த கண்களில் வெளிச்சமாய் மின்னியது.

"ம்... மேலேயே அஞ்சு நிமிஷமாவுது!"

எனது சொற்களும் வழுக்குகின்றன.

"நாலு மணிக்கு வர்றேன்னாங்க... இன்னும் காணோமே! சுத்த மோசமான ஆளுங்க போலிருக்கே!"

சித்தி அச்சத்தில் எரிச்சலைத் தோய்த்தாள்.

ஜானகி சித்தி எப்பவுமே அப்படித்தான்! உணவுப் பண்டங்களில் நெய்யும், எண்ணெயும் சொதசொதக்கும்! சிறு சந்தோஷமோ, சங்கடமோ உச்சத்தில் கொடி கட்டும்.

"எல்லாம் வருவாங்க!"

எளிதில் எரிச்சலைத் தழுவும் சித்தப்பாவின் மனதில் சித்தியின் அதிகப்படியான தவிப்பு அனலை வார்த்தது.

"பெண், வீட்டுக்காரங்கன்னா அவ்வளவு எளப்பம்! சொன்ன நேரத்துக்கு வரக்கூடாதுன்னு நெனைப்பு! பிளடி கஸ்டம்ஸ்!"

சித்தப்பாவின் "லோ பிரஷ்" கோபித்தது.

"அப்படியெல்லாம் இருக்காது சித்தப்பா!... கல்யாண நாளாச்சே! செங்கல்பட்டிலே இருந்து... வர வேணாமா?"

இழுத்து, இழுத்துச் சொன்னேன்.

'ஒரு வேளை வராமல் போய் விடுவார்களா?' அவ்வளவுதான்! சுருண்டு விடுவார்களே!'

"பின்னே... என்ன ராஜா! சாதாரணமாவே டென்ஷனா இருக்கு... இதிலே 'லேட்' பண்ணா என்னென்னவோ நெனைக்கச் சொல்லுதே..."

ஆற்றாமை, வார்த்தைகளை விழுங்குவது தெரிகிறது... சற்று கலைத்தால் போதும்! அழுது விடுவார் போலிருந்தது.

"ம்... அதெல்லாம் ஒண்ணும் இருக்காது. இன்னும் அஞ்சு நிமிஷத்திலே வந்துவிடுவாங்க. அன்னைக்கு சொன்னாப்லே ஒரு முடிவோடதான் - நல்ல முடிவோடதான் -போவாங்க!"

கேசரி மணக்கும் கையோடு வந்த அம்மா சொற்களைத் தேடித் தேடிப் பார்த்துப் பேசினாள். சித்தப்பாவின் இயல்பு நம் சொற்களில் சிறு பிசிறு தட்டினாலும்—

"பார்த்திங்களா... ஒங்களுக்கே இப்படீன்னா... வர்றவங்க என்ன நெனைப்பாங்க?" என்று உடைந்து போவார்.

"ஆமாம் அக்கா! மத்தவங்களைப் போல இல்லையே நாம்! இப்படி ஒரு பொண்ணு வைச்சிட்டு...! பாத்திட்டுப் போறானுங்க..."

முடிக்க முடியாமல் முன்றானைத் தலைப்பில் சித்தி குலுங்குவாள்.

"இன்னும் இந்த சமுதாயம் முன்னேறல்லையே! ஆண் துணை ஒரு பெண்ணுக்குக் கட்டாயம் தேவைன்னு நெனைக்குதே... இல்லாட்டா என் பொண்ணை ராசாத்தியாட்டம் வேலையிலே சேர்த்து விட்டு நிம்மதியா இருந்துட்டுப் போம்மான்னு சொல்வேனே..."

தேவையில்லாமல் ஏதேதோ பேசிக் குமைந்து போவார்.

இது எங்களுக்குப் புதிதல்ல! கடந்த இரண்டு வருடங்களாக அடிக்கடி நிகழ்கிற ஓர் அவதி! அம்மாதிரி நேரங்களில் அவர்களைவிட நான் அதிகமாய்த் துடித்துப் போவேன்! அம்மா புலம்புவாள்.

"ஆஞ்சநேயா... அந்தப் பெண்ணுக்கு ஒரு நல்வழி காட்டேம்பா..."

என் மனைவி பிரார்த்தித்து நிற்பாள். சோதிடக்காரர்கள்? "அதிர்ஷ்ட ஜாதகம்! அம்சமான இடம் அமையும்" என்று ஆசை காட்டுவார்கள். பிள்ளை வீட்டார் வந்ததும் சித்தப்பா வேலையில், படிப்பில் மகிழ்ந்து போவார்கள். வழிய, வழிய உபசரிக்கும் சித்தியின் அன்பில் சிலிர்த்துப் போவார்கள். ஆனால் வனஜா வந்து நின்று வணங்கியதும் வாடிப் போவார்கள். அதுவரை இயற்கையாய், நெருக்கமாய் இருந்த பேச்சில் ஓர் இறுக்கம், செயற்கை, ஒட்டுறவின்மை ஊடுருவும்.

"அப்ப கௌம்புவோமா?"

அவசர, அவசரமாய்க் கிளம்பி, "போய்ச் சொல்லி அனுப்பறோம்!" "லெட்டர் போடறோம்" என்று ஓடிப்போவார்கள். அதையடுத்த நாள்கள் கனத்துப் போகும்; தபால்காரன் வருவான்; அவர்களிடம் இருந்து கடிதம் வராது; கல்யாண புரோக்கர் வருவான் -- "அவுங்களைப் பார்க்க முடியல்லே. அதைவிட அருமையான இடம் வந்திருக்கு" என்று அர்த்த புஷ்டியாய்ப் பேசுவான்.

ஆனால் இவர்கள் முதன் முதலாய், "எங்களுக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்கு! அடுத்த புதன் கிழமை நாள் நல்லா இருக்கு! தம்பியை அழைச்சிட்டு வர்றோம்! பாத்ததும் உடனே ஒரு நல்ல முடிவு எடுத்திடுவோம்!" என்று தேன் வார்த்தார்கள்.

சித்திக்கு மயிர்க்கால்கள் குத்திட்டன. சித்தப்பா இலேசாகிப் போனார். அம்மா, "மாரியாத்தா...

பால் வார்த்தேம்மா!" என்று பரவசப்பட்டாள். என் மனதில் இவர்கள் சந்தோஷப்படுவதைவிட, வாடியே இருந்த வனஜாவின் முகத்தில் ஒளிக்கீற்று பெருமையாய்ப் படர்வது கண்டு நெகிழ்ந்து போனது! 'ஓ! இந்த இரண்டு வருடத்தில் அந்த உள்ளத்தில் எத்தனை எரிமலை மௌனமாய் வெடித்ததோ?'

"அப்பா... அவுங்க வர்றாங்க!"

என் மகன் கூக்குரலிட்டான். கூடவே சைக்கிள் ரிக்ஷா வந்து நிற்கும் ஓசை.

துள்ளி எழுந்த சித்தப்பா பனியனில் இருந்து சட்டைக்குப் புகுந்தார். சித்தி சிரித்தபடி, "மீனா... வனஜாவை ரெடி பண்ணிட்டியா?" என்று உள்ளுக்குள் ஓடினாள்.

"எல்லாரும் உள்ளே ஓடினா எப்படி? அவுங்களை வான்னு கூப்பிட வாணாமா? ராஜா... நீ போய்க் கூப்பிடுடா!"

அம்மாவும் பரபரத்தாள். வாசலுக்கு ஓடினேன்.

"வாங்க... வாங்க! வணக்கம்!"

"வணக்கம் தம்பி!"

"வணக்கங்க!"

பழக்கமாகிப் போயிருந்த மாப்பிள்ளையின் தாயும், தந்தையும் வாய் நிறைய வணக்கம் சொல்லி அமர்ந்தார்கள். மாப்பிள்ளை கூச்சத்துடன் வணங்கி லேசாய் முறுவலித்தார்.

ஹாலுக்குள் நுழைகிறோம்.

"வாங்க..."

"வாங்க..."

சித்தியும், சித்தப்பாவும் கல்லையும் உருக்கும் குரலில் வரவேற்கிறார்கள். அம்மா புடைவைத் தலைப்பில் உடலை இறுக்கி அழைக்கிறாள். என் மனைவி "வாங்கம்மா!" என்று அந்தம்மாவின் கையைப் பற்றிக் கொள்கிறாள்.

எல்லாரும் உட்காருகிறோம். ஒரு நிமிட மௌனம். அதைப் பயன்படுத்தி சித்தப்பா 'மாப்பிள்ளையோடு பேசு' என்று கண்ணால் சைகை காட்டினாள். அவர் முகம் பயத்தால் வெளிறுவது உணர முடிந்தது. உடல் லேசாக நடுங்குவதை, தூரத்தில்




இருந்து என்னால் காண முடிகிறது.

"பஸ்சைத் தவற விட்டுட்டோம்! அதான் லேட்டாயிட்டுது..."

மாப்பிள்ளையின் தகப்பனார் பேச்சைத் தொடங்கினார்.

"பரவாயில்லே..." இவ்வளவு நேரம் கத்திய சித்தப்பா, "இதெல்லாம் இயற்கைதானே?" வேணும்னா செய்யப் போறோம்?"

சமாதானம் சொல்வதாய் உளறினார்.

"ஆனா... நாங்க... என்னமோ, ஏதோன்னு பயந்துட்டோங்க..."

வழக்கம்போல் சித்தி பரபரக்க, சித்தப்பா முறைக்க அடங்கிப் போனாள்.

"மீனா... டிபன் வைம்மா!"

சித்தப்பா குரல் கொடுக்க –

"இதோ....!" அம்மா, சித்தி, மீனா எல்லாரும் பாய்ந்து, பாய்ந்து ஓடி, உபசரித்தார்கள். கை கழுவும் இடத்தில் எல்லாருக்கும் என் மகன் துண்டு கொடுத்தான். அவன் முகத்தில் ஒரே பூரிப்பு. எங்கள் மனதில் இழையோடும் செயற்கையான கலகலப்பு சற்றும் அவனிடத்தில் ஒட்டாமல், எங்களை அவன் வேடிக்கை பார்த்து, பார்த்து துள்ளினான்.

"அப்பா! இவர்தான் மாப்பிள்ளையா?"

"அப்பா! அம்மா, எனக்கு கேசரி இன்னும் கொஞ்சம் வைக்க மாட்டேங்கறாங்க" என்றும் அடிக்கடி காதில் கிசுகிசுத்து தர்ம சங்கடத்துக்கு உள்ளாக்கினான்.

ஆயிற்று. 'மாப்பிள்ளையின் தாயார் உரிமையோடு, "மீனா... பாப்பாவைக் கூட்டிட்டு வாம்மா... நல்ல நேரம் போயிடப் போவுது!"

என் மனைவியிடம் சொல்ல,

"ஆகட்டும்மா..." மீனா ஓடினாள்.

இதுவரை இயல்பாய் இயங்கிக் கொண்டிருந்த இதயம் திடீரென்று ஓசை எழுப்பியது. சித்தப்பா என்னை வெறித்துப் பார்த்தார். சித்தி, மாப்பிள்ளையின் அம்மா சுவாரசியமாய்க் கேட்கும் கேள்விக்குத் தன்னிச்சையாய்த் தலையாட்டினாள். அம்மா ஏதோ மௌனமாய்ப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். மீனா வனஜாவை அழைத்துக் கொண்டு வந்தாள். பிடித்துக் கொண்டு வரும் அவள் விரல்கள் நடுங்குவதைக் கண்டு எனக்கு வியர்த்தது.

விழுந்து வணங்கும் வனஜா எழுந்திருக்கும்போது வாங்கும் மூச்சு என் காதுக்குக் கேட்டது. உட்காரச் சொன்னதும் மிகவும் சிரமப்பட்டு உட்கார்ந்தாள்.




விழுந்து எழுந்ததன் தாக்கம் இன்னும் ஓயவில்லை. வனஜாவின் உடல், அளவுக்கு அதிகமாகவே பூரிப்பானது!

"நல்லாப் பாத்துக்கடா... அப்புறம் பாக்கலேன்னு சொல்லாதேடா" மாப்பிள்ளையின் தந்தை 'ஜோக்' அடித்தார்.

நாங்கள் பேருக்குச் சிரித்தோம். மாப்பிள்ளை நெளிந்தார். நான் அவர் முகத்தையே பார்த்தேன். சம்மதமா, மறுப்புணர்வா கண்டுபிடிக்க முடியவில்லை.

"பொண்ணைப் பிடிச்சிருக்காடா...?"

வெகு எளிதாய்க் கேட்டு விட்டார் அந்த அம்மாள். நிலவிய அமைதி நெஞ்சைத் தின்றது.

"ஒண்ணும் அவசரமில்லே..."

மென்று விழுங்கினார் சித்தப்பா. அவருடைய பயம் எனக்குப் புரிந்தது.

"அதுக்கில்லே... இந்த மாதிரி இழுத்துகிட்டு இருக்கறது எனக்குப் பிடிக்காது... நாள் நல்லா இருக்கு! பேசி முடிவு எடுத்திடலாம்..."

முடிக்கவில்லை.

"ஏங்க... தம்பி... வெளியே கூப்பிடறான்... இங்கே சொல்ல வெட்கப்படறான் போல இருக்கு!"

அம்மாள் எழுந்து விட்டாள்.

"வெளியே வாணாம்... நாங்கள் உள்கட்டிலே இருக்கோம்... நீங்க தம்பிகிட்டே பேசிட்டு, கூப்பிடுங்க".

"அதுவும் சரி..."

தகப்பனார் ஆமோதித்தார்.

நாங்கள் எழுந்து உள்ளே போனோம்.

"மாப்பிள்ளை கிட்டே பேச்சு கொடுத்தியா?" சித்தப்பா என்னிடம் பேசினாலும் பார்வை அங்கேயே இருந்தது.

"என்ன இருந்தாலும் மாப்பிள்ளை கறுப்பா... இருக்காரு!"

"கறுப்பா இருந்தா என்ன... சும்மா இருக்கியா?" சித்தியை அடக்கினார் சித்தப்பா.

இங்கிருந்து அவர்களைப் பார்த்தோம். மாப்பிள்ளையிடம் தாயும், தந்தையும் ஏதோ சொன்னார்கள். இந்த மௌன நாடகம் இருபது நிமிடங்களுக்கு மேலே நிகழ்ந்தது. அதற்குள்ளே அங்கே உணர்ச்சிப் பிரவாகம்!

நிகழ்வு

கவிஞர் குடந்தை புகழேந்தி



மல்லிகை வாசம் சூழ்ந் திட – பூமி
மன்மதத் தள மாச்சு! – ரதி
வந்திடும் இட மாச்சு!

மாலை மதியமும் தோன் றிடத் – தண்மை
மங்கையர் வச மாச்சு! – திரு
தங்கிடும் பொழு தாச்சு!

நகர்ந்திட நேரம் வானக – மெங்கும்
நட்சத் திர மாச்சு! – சுகம்
நாடி வர லாச்சு!

பகலும் மறைந் திட இருளும் – தன்னுடை
பாயை விரித் தாச்சு! – இன்பம்
பாய்ந்திடும் கண மாச்சு!

காதலன் காதலி கூடி டத் – தேனிசை
கானம் நிறைந் தாச்சு! – உயிர்
மானம் பெரி தாச்சு!

உள்ளம் இரண்டு சேர்ந் திட – உயிர்கள்
ஒன்றாய்ப் பிணைந் தாச்சு! – அன்பு
நன்றாய்க் கலந் தாச்சு!

செக்கச் சிவந்திட வானக மெங்கும் – ஓர்
செந்தூரப் பூவாச்சு! – செம்மண்
சிந்திடும் நீராச்சு!

"மீனா ... மீனா ..."

குரல் கொடுத்தாள் மாப்பிள்ளையின் அம்மாள்.

"இதோ வர்றேங்க..."

மூச்சைப் பிடித்து விரைந்தோம்.

"தம்பிக்கு... பிடிச்சிருக்காம்!"

மாப்பிள்ளையின் அப்பா சொல்லும்போது சித்தப்பா இங்கில்லை! சித்திக்கு வாயெல்லாம் பல்லாகியது. அம்மா கண் கலங்கியே விட்டாள்.

பேச்சு வார்த்தை நடந்தது. தையில் ஒரு நல்ல நாள் நிச்சயத்துக்கு உறுதியானது. மாப்பிள்ளையின் முகம் இறுகிப் போயிருந்தது. அதைப் பார்க்க எனக்கு என்னவோ போலிருந்தது. மகிழ்ச்சியுடன் விடைபெற்றார்கள்.

"சோ... கடைசியிலே நமக்குக் கடவுள் கருணை கெடைச்சிடுத்து... ராஜா!" என் தோளில் ஆனந்த மாய்ச் சரிந்தார் சித்தப்பா.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு!"

அந்த ஆனந்த வெள்ளத்தில் நானும் சங்கமித்தேன்.

"அப்பா! மாப்பிள்ளை முதல்லே ஒத்துக்கல்லே. அந்த ஆயாதான்... கண்ணா இது ஒரே பொண்ணு! நெறைய செய்வாங்க! ஒனக்குப் பின்னாலே இருக்க தங்கச்சிகளைக் கட்டிக் கொடுக்கணும்டான்னு கெஞ்சினாங்க... நீ இதுக்கு ஒத்துக்கல்லேன்னா பொண்ணு பார்க்கவே இனி வரமாட்டேன்னு தாத்தா கத்தினாரு! அப்புறம்..."

அவசர, அவசரமாய் என் மகன் வாயைப் பொத்தினாள், மீனா. இந்த வாண்டு அங்கேயே நின்றுகொண்டிருந்தானா? அஞ்சு வயது என்னமாய்க் கவனித்து இருக்கிறது!

நல்லவேளை! சித்தப்பாவும் சித்தியும், தம்மை மறந்து இருந்ததில் அவர்கள் காதில் இது விழவில்லை!

மாப்பிள்ளையின் இறுகிய முகம் மனதுக்குள் எட்டிப் பார்த்தது. வனஜாவைப் பார்த்தேன். அவள் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். அதில் மாப்பிள்ளை திணறுவது போல் என்னுள் ஒரு நினைப்பு! ஆம்! வனஜாவுக்கு ஒரு விடிவு வராதா என்று ஏங்கியவள் தான்! அதே நேரத்தில் ஓர் இளைஞனின் இளைய கனவுகள் எனக்குப் பழக்கமானவைதானே... குடும்பத்திற்காகத் தன் கனவுகளை அந்த இளைஞன் இழப்பது என்னை என்னவோ செய்தது. அது சரி –

இன்னும் எத்தனை நாளைக்குத் தான் திருமணம் என்னும் புனிதச்சடங்கு, இளைய நெஞ்சங்களின் கனவுகளுக்கு எதிரியாகவே இருக்கப் போகிறதோ? ஃ

எண்ணிப் ...ார்க்கலாம் ...பெண்ணே!

...ன்புச் சகோதரிகளே!

...ந்த நாலைந்து மாதத்தில் ...க போனாலும் ஒரே பர...ு. விழாவும், பண்டிகையும் ...க்களமாக இருக்கும். அது ...மில்லை. பிளாட்பாரக் கடை ...ிருந்து பெரிய ஷோரூம் வரை ...ா இடமும் வண்ணமயமாகக் ...ணைப் பறிக்கும்.

...ாமும் ஆசை தீர வித வித ...் குடும்பத்திற்கு எல்லாம் ...கிக் குவித்திருப்போம்.

...னால் இந்தச் செலவுகளுக் ...லாம் என்ன செய்திருப் ...ம். சுலபமாக செய்திருப் ...ா, அல்லது கழுத்தைப் ...திருக்குமா?

...ருடத் தொடக்கத்திலிருந்தே ... மாதிரிச் செலவுகளுக்கு ...கத் திட்டமிட்டு வந்தால் பல ...களில் உபயோகமாக ...கும்.

...ன் தோழி ஒருத்தி ஒவ்வொரு ...மும் மார்ச் மாதமும், ...ம்பர் மாதமும் பாங்கில் ...ring Deposit ஒரு வருடத் ...த் தொடங்குவாள்.

...கட்டால் அது முடிந்து வரும் ...ு குழந்தைகள் ஸ்கூல் செல ...ம், பண்டிகை பர்சேஸுக்கும் ...ம் என்பாள்.


...ழகான திட்டமிடல் இது. ...் தொடக்கத்தில் செலவைத் ...ங்குவதற்கு முன்பே ஒரு ...கையைச் சேமிக்கப் பழகிக் ...ள்ளலாம்.

...ங்கள் முதல் செலவு ...்பாக இருக்கட்டும்" - என்று ...நிறுவனம் விளம்பரம் செய் ...ரியான ஓர் அறிவிப்பு.

...நாவது ஒருவிதமான ...பு செய்யும் பழக்கத்தை ...டுத்திக் கொள்வது மிகவும் ...து.

...ழந்தைகளுக்கும் சிறு வயதி ...தே அந்த மாதிரி ஓர் எண்...

பாவையர் பக்கங்கள்



இம்மாதக் கோலம்

21 புள்ளி 1 வரிசை 1இல் நிற்க நேர் புள்ளி

இம்மாதப் பரிசுக்குரிய இந்தக் கோலத்தை வரைந்தனுப்பியவர் : லலிதா லட்சுமி, பெரம்பூர், சென்னை – 600 011.

...ணத்தைத் தோற்றுவிக்க வேண்டும். பத்து ரூபாய் செலவுக்குக் கொடுத்தால் பதினோரு ரூபாய் செலவழிக்கும் குணத்தை மாற்ற வேண்டும்.

சேமிக்கும்போது அது பெரிய தொகையாகத்தான் இருக்க வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. சின்னச் சின்னத் துளிகளாகக் கூடச் சேர்க்கலாம். "சே! இதை பாங்கில் போட்டு என்ன செய்யப் போகிறோம்?" என்று நினைத்துக் கொள்வதைவிட, என்ன கிடைத்தாலும் அதைச் சேமிக்கலாம் என்கிற தீர்மானத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

நம் "பாவையர் பக்கங்களை"ப் படிக்கும் பூவையர் அதிகமாகி வருகின்றனர். கட்டுரைகளையும், குறிப்புகளையும் அதிக அளவில் அனுப்புகின்றனர்.

இதுவரை பேனாவே பிடிக்காத பல வாசகிகள் ஆர்வமாக இந்தப் பகுதிக்கு எழுதத் தொடங்கியிருப்பது சந்தோஷமான விஷயம். நிறைய எழுதுங்கள். புதிது புதிதாக எழுதுங்கள். படிப்பவர்கள், "அட, இது நல்லா இருக்கே?" என்று கவனிக்கும்படி எழுதுங்கள்.

நீங்கள் எழுதும் எல்லா விஷயங்களும் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று நினைக்காதீர்கள். மேலும் மேலும் சிறப்பாக எழுதிக் கொண்டே இருங்கள்.

நட்புடன்,

கிரிஜா ராகவன்

திருமணச் சீர் கொலு வேண்டாமே, ப்ளீஸ்!



இப்போது திருமண சீசன் தொடங்கிவிட்டது. திருமணம் நிச்சயமானதிலிருந்து பெண்ணைப் பெற்றவர்களுக்கு பல கவலைகள். திருமண மண்டபத்தில் சௌகரியமே இல்லை, பந்தி உபசாரம் போதாது. இம்மாதிரி குறைகள் இல்லாமல் திருமணம் நல்லபடியாய் நடந்து சம்பந்திகள் சிரித்த முகத்துடன் விடைபெற்றுச் செல்ல வேண்டுமே என்று ஒரே டென்ஷன்தான் பெண்ணைப் பெற்றவர்களுக்கு.

காலஞ்சென்ற காஞ்சி மாமுனிவர் பரமாச்சாரியார் அவர்கள் "வரதட்சணை வாங்கிறவர்களும் கொடுக்கிறவர்களும் அப்படிப்பட்ட கல்யாணப் பத்திரிகைகளில் என் அனுக்கிரகத்தோடு நிச்சயிக்கப்பட்டிருப்பதாகப் போட வேண்டாம்" என்று கேட்டுக் கொண்ட பிறகும், வரதட்சணை வியாபாரம் அமோகமாக நடந்து வருகிறது. அதுவும் எப்படி? பகிரங்கமாக.

"இதோ பாருங்கோ. ஒங்க பொண்ணுக்குக் கொடுக்கற சீர் வகையறாக்களை, அதுதான் வெள்ளி, பித்தளை, எவர்சில்வர், அலுமினியம், அப்புறம் நீங்க என்னெல்லாம் கொடுக்கறேளோ எல்லாத்தையும் கொலுப்படி மாதிரி அழகா மண்டபத்திலே படிகட்டி பார்வையா வெச்சுடுங்கோ. ஒங்க பொறுப்பிலே பாதுகாத்து கல்யாணம் முடிஞ்சு நாங்க ஊருக்குப் போகும்போது எங்ககிட்டே லிஸ்ட்டோட ஒப்படைச்சுடுங்கோ" - மணமகன் வீட்டார் போடும் நூற்றுக்கணக்கான கண்டிஷன்களில் இதுவும் ஒன்று. "அப்பப்பா அவா பிள்ளைக்குத்தான் எவ்வளவு சீர் பண்ணியிருக்கா" என்று ஊரார் மெச்ச வேண்டுமாம்.

குறைந்த பட்சம் இரண்டு நாள்கள் பெண் வீட்டாரால் புதையல் காக்கும் பூதம் போல் கண் இமைக்காமல் சீர் கொலுவைப் பாதுகாப்பது நடக்கக்கூடிய காரியமா? ஏதாவது தொலைந்து போனால் நூற்றுக்கணக்கான பேர் கூடும் இடத்தில் யாரைப் போய்க் கேட்க முடியும்? சமீபத்தில் என் உறவினர் வீட்டில் நடந்த திருமணத்தில் இம்மாதிரி வைத்ததில் அரை கிலோ எடையுள்ள வெள்ளித்தட்டு தொலைந்து போய் விட்டது. மறுபடியும் 3500 ரூபாய் செலவழித்து வேறு தட்டு வாங்கும்படியானது மட்டுமல்ல, உறவினர்களின் விரோதமும் வந்துவிட்டது. ஆகையால் இம்மாதிரி நேர்ந்துவிட்டால் திருடனுக்குத் தேள் கொட்டியது போல் மூச்சுவிடாமல் இருந்து விடவேண்டும்.

விஷயம் இதோடு முடிந்தால் பரவாயில்லையே. வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற தினுசில் மனம் போனபடி எல்லாம் பேசுபவர்களுக்கு குறைச்சலே கிடையாது. "வெள்ளிக்குடமா இது! ஏதோ குங்குமச் சொப்பு மாதிரின்னா இருக்கு. கிட்டப் போய் யாரும் பெரிசா மூச்சு விடாதேங்கோ. வெள்ளித்தட்டு ஃபிளையிங் சாஸரா ஆகிடப் போறது. ஏதோ பேருக்கு அந்தந்த அயிட்டத்துக்கு ஒண்ணொண்ணு வெச்சு ஒப்பேத்தனுமேன்னு, பொன்னை வைக்கிற எடத்திலே பூவை வெச்சிருக்கா. என் நாத்தனார் பொண்ணுக்கு 10 கிலோ வெள்ளிப் பாத்திரம் சீர் தந்தா. ஒவ்வொண்ணும் கெழங்கு கெழங்கா, தூக்க 2 கை போதாது. (ஒரு கிலோ வெள்ளி விலை 7000 ரூபாய். பிறகு கூலி, சேதாரம். இந்த நிலைமையில் கிழங்கு கிழங்காக பாத்திரம் எப்படி வைக்க முடியும்? வெள்ளிக் குடத்தால் என்ன பயன்?)

சமீபத்தில் ஒரு திருமணத்தில் ஒரு பெண்மணி அடித்த கமெண்ட்: "இந்தக் காலத்திலே ஃபாஷன் ஃபாஷனா எவ்வளவு சாமான் கிடைக்கிறது? இவா என்னடான்னா 'ஓல்ட் ஈஸ் கோல்ட்'ங்கறாப்பல சீண்டுவாரில்லாம பரண் மேலே கெடந்த அவா கொள்ளுப்பாட்டி காலத்துப் பாத்திரத்தை வெச்சிருக்கா. இதுக்கு படி எதுக்கு? ஒரு மேஜையைப் போட்டு அது மேலே வெச்சாப் போதுமே. என் ஓர்ப்படி பெண் கல்யாணத்திலே அகல அகலமா எப்படி குண்டூசியிலேயிருந்து, டி.வி. வரைக்கும் சீர் வெச்சிருந்த அழகைப் பார்க்க 2 கண் போதாது. இவா பாவம், ஏதோ ஏழைக்கேத்த எள்ளுருண்டைன்னு வெச்சிருக்கா".

இம்மாதிரி விமரிசனங்களைக் கேட்கும் மணமகன் வீட்டார் மனதில் விஷவிதை அவர்களை அறியாமலேயே ஊன்றப்பட்டு விடுகிறது. இந்த விதை மணப்பெண், அவர்கள் வீட்டிற்குச் செல்வதற்குள் முளைத்து, செடியாகி, மரமாகவே ஆகிவிடுகிறது. பிறகென்ன? மாமியார் மருமகள் சண்டைதான்.

திருமணமும், சீர் வகையறாக்களும் சம்பந்தப்பட்ட பெண், பிள்ளை இருவீட்டார் விஷயம். இதை அம்பலப்படுத்தி மற்றவர்களின் விமரிசனத்திற்கு ஏன் ஆளாக வேண்டும்? பிள்ளையைப் பெற்றவர்கள் சற்று சிந்தித்தால் நன்றாக இருக்கும்.

– மீனாட்சி சங்கரன்

எனக்கென்ன இனிமேல்?



"எனக்கென்ன இனிமேல்? பெண்ணும் பிள்ளையும் மலையாய் வளர்ந்தாச்சு. பவுடரும் பொட்டும் வச்சு என்ன ஆகப்போறது?" - 40 வயதைக் கடந்த பெண்மணிகள் அடிக்கடி முணுமுணுக்கும் வார்த்தைகள் – பெரும்பாலும் குறிப்பாக வேலைக்கும் செல்லாமல் வெளி உலகத்தின் வேகத்தை அறியாமல் இருக்கும் தாய்மார்களின் சொல் இது. இதனால் எத்தனை குடும்பங்களில் சூறாவளி வீசியிருக்கும் தெரியுமா?

ஆம்! அலுத்துச் சலித்து அலுவலகத்தில் இருந்து வரும் கணவன் முன்பு, கலைந்த தலை, வியர்வை வழியும் முகம், கை துடைத்துப் பிசுக்கேறிய புடைவை – இப்படி ஒரு வரவேற்பு தேவையா? இந்தக் கோலத்தில் இருப்பதால் வசதிக்குறைவு எனக் கருதவேண்டாம். பீரோ நிறைய கணவன் (ஏதோ ஒரு காலத்தில்) ஆசை ஆசையாய் வாங்கித் தந்த புடைவைகள் இருக்கும். ஆனால் தன்மேல் உள்ள சுய பச்சாதாபம், அதிகமாக வேலை செய்வது போல் காட்டிக் கொள்ள இந்தக் கோலத்தில் அர்த்தமில்லாத சோகத்துடன் நிற்பது, தேவை தானா, இதெல்லாம்? ப்ளீஸ்! கொஞ்சம் யோசியுங்களேன். வீட்டில் இருக்கும் உங்களுக்கு சில பிரச்னைகள் என்றால் வெளியில் போய்வரும் ஆணுக்கு ஆயிரம் கவலைகள்.

இன்னும் சொல்லப்போனால் ஒவ்வோர் ஆணும் மனத்தளவில் ஒரு பெண்ணைச் சார்ந்திருக்கவே விரும்புகிறான். குழந்தைப்பருவத்தில் அம்மா என்றால் வாலிப வேளையில் மனைவி. ஆனால் இதை உணராது வாழ்க்கையே வெறுத்து விட்டதுபோல் ஏன் இந்த வேஷம்? ஒரு சாரார் இப்படி என்றால் இன்னும் சில பெண்கள், கஷ்டப்பட்டு நரையை மறைக்க தலைச்சாயம். இளமையாய்த் திகழ்வது போல் வயதுக்குப் பாந்தமில்லாமல், ஏன், கல்லூரிக்கோ அலுவலகத்திற்கோ செல்லும் பெண்ணின் புடைவை முதல் நைட்டி வரை அணிந்து எனக்கும் என் பெண்ணிற்கும் ஒரே அளவு என்று செயற்கையாய் நடந்து கொள்வது அவசியம்தானா? ப்ளீஸ்! இதுபோல் செய்து கொண்டால் உங்கள் பெண்ணே உங்களை மதிக்காமல் போகும் நிலை வரலாமே!

எனவே அழுதுவடியும் அலங்கோலத் தோற்றமும் வேண்டாம். வயதுக்குப் பொருந்தாத அலங்காரமும் வேண்டாம். மிடில் கிளாஸ் கஷ்டப்படுவது போல் மிடில் ஏஜ் ஒரு பிரச்னையே இல்லை. அந்த வயதுக்குரிய கம்பீரத்தோடு இடுப்பும் முதுகும் தெரியாமல் ஒரு காட்டன் சேலை கட்டுங்களேன். பிறகு பாருங்கள் உங்கள் மதிப்பை!

சந்திரா ஜானகிராமன்



செய்துப் பாருங்களேன்!

உப்பின் பயன்கள் : சில சமயம் எண்ணெயில் பலகாரம் பொரிக்கும்போது கைகளில் மற்றும் உடலில் எண்ணெய் தெறித்து விழும் வாய்ப்புண்டு. அப்பொழுது பொடி உப்பை எடுத்து சில சொட்டு தண்ணீர் சேர்த்து எண்ணெய் பட்ட இடத்தில் தேய்த்து விட்டால் கொப்புளிக்காது.

தோசை வார்க்கும்போது : சில சமயம் தோசை எளிதில் வராமல் சுண்டிப்போகும். அப்போது பெரிய வெங்காயத்தைக் குறுக்காக இரண்டாக வெட்டி சிறிது உப்பை கல்லில் போட்டு நன்றாகக் கல் முழுவதும் அழுத்தித் தேய்த்து விட்டுப் பிறகு வார்த்தால் சரியாகி விடும்.

ரசம் வைக்கும்போது : ரசம் வைக்கும்போது தக்காளிப் பழங்களை முழுதாக இரண்டு நிமிடம் கொதிக்கும் தண்ணீரில் போட்டு எடுத்து கையால் பிசைந்து ரசத் தண்ணீரில் கரைத்துவிட்டால் சாறு முழுவதும் ரசத்தில் இறங்கிவிடும்.

ஜீரா காய்ச்சும் போது : ஜீரா காய்ச்சும்போது கொதி வந்ததும் ஒரு கரண்டி பாலை அதில் விட்டால் ஜீராவில் உள்ள அழுக்கெல்லாம் திரண்டு மேலாக வந்து விடும். அதை எளிதாக அரித்து எடுத்து விடலாம்.

எலுமிச்சம்பழச் சாறு பிழியும் போது : எலுமிச்சம் பழத்தைச் சற்று நேரம் வெந்நீரில் போட்டு எடுத்து நறுக்கிப் பிழிந்தால் நிறையச் சாறு வரும். பிழிவதற்கும் சுலபமாக இருக்கும்.

— ஜி. பேபி
கடலூர் – 2



கூடி விளையாடுங்கள்!

கங்கா ராமமூர்த்தி

நாலு வயது அருண், அடம் பிடிக்கிறான். "அப்பா, முதுகில சவாரி செய்யணும்" என்று. "இத பார் அருண்! என்னால இதெல்லாம் செய்ய முடியாது" என்று அவனுடைய அப்பா அவனை அதட்டி உட்கார வைக்கிறார்.

"குழந்தை ஆசையாக் கேக்கறானே. அந்த 'ஷேர் பிஸினஸை' அப்புறம் படிக்கக் கூடாதா?" அருணின் அம்மா கெஞ்சிக் கேட்டுக் கொண்டதும் "ஓ.கே" என்று சம்மதிக்கிறார்.

முதுகில் அருணைச் சுமந்து, அப்பா நாலு காலில் நடக்க... குழந்தையின் குதூகலம் சொல்லி முடியாது! 'ஹை, ஹை' என்று விரட்டி அதிகாரம் செய்கிறான்! குழந்தையின் உற்சாகம் படிப்படியாக தாய்க்கும் தந்தைக்கும் தொற்றிக் கொள்ள வீடே மகிழ்ச்சியில் மிதக்கிறது.

கதவைத் திறந்து கொண்டு, தந்தையின் நண்பர் வந்ததும் - அருண் இறங்க மறுக்க, அவருடைய மகிழ்ச்சி சங்கடமாகிறது.

"என்ன, ராஜன்! குழந்தைக்குச் சரியாய் நீங்களும் விளையாடிட்டிருக்கீங்க..." என்று நண்பர் கேலி செய்கிறார். 'அதெல்லாம் ஒண்ணுமில்லே' என்று கூறியபடியே அருணைக் கீழே தள்ளாத குறையாய் இறக்கி வைக்கிறார் ராஜன்.

குழந்தைகளோடு, பெரியவர்கள் - குறிப்பாக பெற்றவர்கள் - விளையாட வேண்டும். தந்தை அலுவலக வேலையிலும், தாய் அடுப்பங்கரை வேலையிலும் மூழ்கி இருந்தால், குழந்தைகளின் மனத்தில் தனிமை ஏக்கம் ஏற்படும்.

பள்ளியிலும், வீட்டின் அருகிலுள்ள நண்பர்களோடும் விளையாடினாலும் பெற்றவர்களின் நெருக்கமும் தோழமையும் கிடைக்காவிட்டால் குழந்தைகள் வாடிய பயிர்களைப் போலச் சோர்ந்து போவார்கள்.

மனமகிழ்ச்சிதான் அவர்களுடைய மன ஆரோக்கியத்திற்கு ஆதாரமாக அமைகிறது. குழந்தைகளுடன் அடிக்கடி சேர்ந்து விளையாட வேண்டும். இதில் எந்தவிதத் தவறும் இல்லை.

குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தை, ஆரம்ப காலத்திலிருந்தே கவனமாகப் பார்க்கிறோம். குழந்தை மெலிந்தாலோ, ஜுரம் வந்து படுத்தாலோ, சாப்பிடவில்லை என்றாலோ, எவ்வளவு கவலைப்படுகிறோம்?

அவை தற்காலிகத் துன்பங்கள்தான். இவற்றைப் போக்கி விட முடியும். ஆனால் பெற்றோரின் அன்புத் தோழமை கிடைக்காத குழந்தைகள் மனநோயாளிகளாகின்றனர்.


வீம்பு, பிடிவாதம், பொறாமை, கடுகடுப்பு, வன்முறை இவை அவர்களின் இயல்பாகி விடுவதற்கு முதலும் மூலமுமான காரணம் பெற்றோர்தான்.

"என்னதான் செய்யணும்னு சொல்றீங்க? வேலைக்குப் போகிற அவசரம், வந்ததும் களைப்பு, வீட்டு வேலையால் ஏற்படும் அசதி. குழந்தையோடு விளையாடத்தான் இங்கே நேரம் இருக்கிறதாக்கும்!" என்று முணுமுணுக்கிறீர்கள். புரிகிறது.

நாள் முழுவதுமா விளையாடப் போகிறீர்கள்? அதிகபட்சமாக பத்து நிமிஷம் போதும். 5 முதல் 8 வயதுள்ள குழந்தைகள் எவ்வளவு நேரம்தான் படிப்பார்கள்? அலுவலகம் விட்டு வந்ததும், நேரம் இருந்தால் அருகிலுள்ள பூங்காவுக்கு அழைத்துச் சென்று அவர்களோடு ஓடி விளையாடுங்கள்.

அல்லது வீட்டிலேயே கண்களைக் கட்டிக் கொண்டு 'கண்ணாமூச்சி' ஆடலாம். ஒன்று கவனத்தில் இருக்கட்டும். பெரியவர்கள், விளையாடும் போது, தங்களுடைய சாமர்த்தியத்தை மூட்டைகட்டி வைத்து விடவேண்டும்.





"ஐய, எவ்வளவு கிட்டே இருந்தேன். அப்பாவுக்குத் தெரியவே இல்லையே!" என்று குழந்தைகள் கைகொட்டிச் சிரிக்க வேண்டும்.

"சரி, ஓடி விளையாட என்னால முடியாது" என்கிறீர்களா! சோபாவில் அமர்ந்து ஸ்க்ராபிள், செஸ் – ஆடலாம்.

வார முடிவில் அவர்களோடு பீச்சில் சென்று பந்து விளையாடலாம். சற்று வயதான பிள்ளைகளானால் ஷட்டில் காக், டென்னிஸ் விளையாடலாம். வேலை நேரத்தில்கூட குழந்தைகளுடன் சேர்ந்து இருக்க முடியும்.

"கண்ணா! பூரி செய்யப் போறேன்" என்றதும் ஆசையாக "நானும் பூரி இடறேம்மா" என்று குழந்தைகள் சொல்லத் தவறுவதில்லை. இதற்கு அனுமதியுங்கள் கோணல் மாணலாக வரும் பரவாயில்லை. இதையும் ஒரு வேடிக்கை விளையாட்டாக ரசிக்கக் கற்றுக் கொடுங்கள்.

இப்படி தினமும் குழந்தைகளுடன் விலகாமல் – ஒட்டி உறவாட – விளையாட்டுகள் வாய்ப்பளிக்கின்றன

குழந்தைகளுக்குச் சரிசமமாக பெற்றோர் விளையாடுவதின் மூலம் அவர்களை – குழந்தைகளை – மகிழ்விப்பது உறுதி. குழந்தைகளின் மனநலத்துக்கு உறுதுணை புரிவது இந்தத் தோழமையும், விளையாட்டுகளின் மூலம் பகிர்ந்து கொள்ளும் உணர்வுகளும்தான்.

வேடிக்கைகளும், விளையாட்டுகளும் உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் இடையேயுள்ள இடைவெளியற்ற உறவை வளர்க்கும். இனிமேல் குழந்தைகள் 'விளையாட வாங்க'ன்னு கூப்பிட்டால் 'ஓ.கே' என்று சொல்லுங்கள். ஃ

நூல் கோல் சுகியம்


தேவையானது:-

நூல்கோல் காய் – 4
வெள்ளைப் பூண்டு – 8 பல்
பச்சை மிளகாய் – 8
வெங்காயம் – 2
முந்திரிப் பருப்பு – 6
கடலை மாவு – 6 டேபிள் ஸ்பூன்
எண்ணெய் – கால்கிலோ
நெய் – 1 டேபிள் ஸ்பூன்
உப்புத் தூள் – தேவையானது (ருசிக்கேற்ப)
மஞ்சள்பொடி – கால் ஸ்பூன்
கோதுமை மாவு – 1 கப்
முட்டை – 2.
இஞ்சி – 1 துண்டு.
கொத்தமல்லி சிறிதளவு.

செய்முறை:-

நூல்கோல் காயை மேல் தோல் சீவி மாங்காய் துருவலில் துருவிக் கொள்ளவும். வெங்காயம், 1 பச்சை மிளகாய், வெள்ளைப் பூண்டு, இஞ்சி, கொத்தமல்லி ஆகியவற்றைப் பொடியாக நறுக்கவும். அடுப்பில் வாணலியை வைத்து நெய் ஒரு டேபிள் ஸ்பூன், எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன் விட்டு முந்திரிப் பருப்பை வறுத்து அதில் நறுக்கிய வெங்காயம் மற்ற சாமான்களைப் போட்டு வதக்கி, பின் நூல்கோல் துருவலைப் போட்டு மஞ்சள் பொடி, உப்புத்தூள் அளவாய்ப் போட்டு நன்கு காயை வதக்கி சற்று தண்ணீர் தெளித்து மூடி வைக்கவும். வெந்ததும் கடலை மாவைக் கொட்டி, கிளறி சிறு தீயில் நன்றாக வேகவிட்டு இறக்கி சிறு உருண்டைகளாக்கிக் கொள்ளவும். கோதுமை மாவில் உப்புப் போட்டு கெட்டியாய்க் கரைத்துக் கொண்டு நூல்கோல் உருண்டைகளை மாவில் தோய்த்து, காய்ந்த எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுத்து ஒரு தட்டில் வைக்கவும்.

இரண்டு முட்டைகளை ஒரு பாத்திரத்தில் உடைத்து ஊற்றி அளவாக உப்பு, மஞ்சள் பொடி போட்டு நன்கு கலக்கி கடாயில் அளவாக எண்ணெய் விட்டு அதில் இந்த முட்டையை ஊற்றி கரண்டியால் பொடிப் பொடியாக, கிளறி அதை உருண்டையின் மேல் பரவலாகத் தூவிவிடவும். சாப்பிடும் பொழுது முட்டைகளுடன் சேர்த்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும். முட்டை சாப்பிடாதவர்கள் உருண்டைகளை அப்படியே சாப்பிடலாம்.



லவங்க லதா

தேவையானவை:-

1 கப் (பச்சை) வேர்க்கடலை
1 சின்ன தேங்காய்
1 கப் கெட்டியான எருமைப் பால்
ஒன்றரை கப் பொடி செய்த வெல்லம்
4 ஏலக்காய் (தூள் செய்யவும்)
1 டேபிள் ஸ்பூன் நெய்
உப்புத் தூள் – 2 சிட்டிகை

செய்முறை:-

வேர்க்கடலையை முதல் நாளே ஊறவைத்து தோலை நீக்கி உப்புத்தூள் சேர்த்து வெண்ணெயைப் போல் மிகவும் மிருதுவாக அரைக்கவும். தேங்காயைத் துருவி சற்று அரைத்து கெட்டியாக 1 கப் பால் எடுத்துக் கொள்ளவும். அரைத்த வேர்க்கடலை விழுதை தேங்காய்ப் பாலில் கரைத்துக் கொள்ளவும். ஒரு வாணலியை அடுப்பில் வைத்து எருமைப் பாலை விட்டு அது கால்பாகமாக சுண்டியதும் வேர்க்கடலை விழுது கரைத்த தேங்காய்ப் பாலைவிட்டு மிதமான தீயில் கிளறவும். பால் இறுகத் தொடங்கியதும் வெல்லப் பொடியைச் சேர்த்துக் கிளறி பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும்போது ஏலப் பொடியையும் நெய்யையும் சேர்த்துக் கிளறி இறக்கவும். இதுவே பூரணமாகும்.

மேல்மாவிற்கு . . .

மைதா மாவு – கால்கிலோ
சோடாமாவு – 2 சிட்டிகை
நெய் – 2 ஸ்பூன்
லவங்கம் – தேவையானது.
எண்ணெய் – கால்கிலோ.

ஜீராவிற்கு:-

சர்க்கரை – கால்கிலோ
தண்ணீர் – அரை கப்
கேசரி பவுடர் – சிறிதளவு

மைதா மாவில், சோடாமாவு, நெய் சேர்த்துக் கிளறி பின் தண்ணீர் விட்டு கெட்டியாகப் பிசையவும். இதைச் சிறு உருண்டைகளாகச் செய்து மெல்லிய அப்பளமாக இட்டு நடுவில் வேர்க்கடலைப் பூரணத்தை வைத்து சப்பாத்திக்கு மடிப்பதுபோல் எதிரும் எதிருமாக நான்கு புறம் மடித்து அதன் நடுவில் பிரிந்து விடாமல் லவங்கத்தைக் குத்த வேண்டும். நிதானமான தீயில் பொரித்து எடுக்கவும். ஓர் உருளியில் சர்க்கரை, தண்ணீர், கேசரி பவுடர் சேர்த்து அடுப்பில் வைத்து முற்றிய கம்பிப் பாகு வந்தவுடன் இறக்கி வைத்து பொரித்து வைத்திருக்கும் லவங்க லதாக்களை (4) நான்கு நான்காகப் போட்டு ஊறியவுடன் தட்டில் எடுத்து வைக்கவும். ஆறியவுடன் பாகு பூத்து, பார்க்க அழகாக இருக்கும். மேல்பாகம் சர்க்கரை உள் பூரணத்தில் வெல்லம் இருப்பதால் சாப்பிட புதுவித சுவையுடன் நன்றாய் இருக்கும்.

– ஆர். அம்சதமயந்தி

சாதனை படைத்த சப்னா!

நான் 'ப்ளஸ் டூ' படிச்சிட்டிருந்தப்ப நடந்தது இது. 'டான்ஸ் ஸ்காலர்ஷிப்பு'க்குத் தேர்ந்தெடுக்க நடந்த போட்டியில் நான் கலந்துகிட்டேன். வந்திருந்த நடுவர்களில் திருமதி வைஜயந்தி மாலாவும் ஒருவர். டான்ஸ் முடிந்ததும் பாட்டு தெரியுமான்னு கேட்டாங்க. எனக்கு 'பீட்' தெரிஞ்சது. ஆனா கீர்த்தனையாகப் பாடத் தெரியாது. அதனால் 'ஸ்காலர்ஷிப்' கிடைக்கிற வாய்ப்பை இழந்தேன். இன்னி வரைக்கும் அந்தக் குறை என் மனசுல இருக்கு. இப்ப பாட்டும் கத்துக்கத் தொடங்கியிருக்கேன்..." என்றார், சப்னா.

சென்னை டவுண்டவுன் ரோட்டரி சங்கத்தின் தலைமைப் பொறுப்புக்குச் சொந்தக்காரராகி இருக்கும் சப்னா பரேக் கூறுகிறார்:

"எனக்கு 'ஆர்ட்ஸ்' படிக்கணும்னு ஆசை. சின்ன வயசுலேயிருந்து கலையார்வம் உண்டு. ஆனா காலேஜ் வந்தபோது பி.காம் தான் படிக்கணும்னு தீர்மானம் செய்து என்னைச் சேர்த்தது எங்கம்மாதான். எதிர்கால வாழ்வுக்கு உபயோகமான படிப்பை எடுத்துப் படிக்கணும்னு சொல்லி என்னைத் தூண்டினாங்க. 'ஆர்ட்ஸ் குரூப் படிக்க முடியலைன்னு வருத்தம்தான்" என்று சிரித்த



இப்போதைய சப்னா



குழந்தையாக நடன உடையில் சபனா

சப்னா, கம்ப்யூட்டர் கல்வியை மாணவமணிகளுக்குக் கற்றுத் தர வேண்டும் என்று ஆர்வமுடைய பள்ளிகளில் தனது சங்கத்தின் சார்பில் கம்ப்யூட்டர் இயந்திரங்களைத் தரச் செய்திருக்கிறார்.

"பெண் சுதந்திரம்னு நீங்க பேசறதுண்டா?"

சிரித்தார். "இப்ப நம்மகிட்ட பெண்ணுன்னு யார்ரும் எந்தவித அட்வான்டேஜும் சுதந்திரமும் எடுத்துக்காம இருக்கறாங்களான்னு பார்க்கணும். யாராவது வாலாட்டினாங்கன்னா அவங்கவங்க இருக்கிற இடத்துல இருங்கன்னு புரிய வைக்கணும். மத்தபடி பெண் சுதந்திரம்னு பேசறதுல என்ன இருக்கு? ஆணுக்குப் பெண் சரி நிகர்னு நான் நினைக்கல...."

"இந்த மாதிரி ஓர் உயர் பதவியில் ஒரு பெண் இருக்காங்களேன்னு வித்தியாசமா யாராவது நினைச்சு நடந்துக்கிட்டிருக்காங்களா?"

"அந்த மாதிரி இதுவரைக்கும் யாரும் நடந்துக்கல. அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்தாலும் எப்படிச் சமாளிக்கணும்னு எனக்குத் தெரியும்".

விதவைத் திருமணம், குடும்பத்திற்குத் தேவையான அத்யாவசியப் பொருட்களைக் கொடுப்பது, இருவரில் ஒருவருக்கு வேலை என்று இவையெல்லாம் சங்கத்தின் செயல்பாடுகள்.

"நான்கு வருடங்களுக்கு முன் என்னுடைய தந்தை இறந்து போனார். இந்தச் சேவை மனப்பான்மை அவரிடமிருந்து எனக்கு வந்ததுதான். வீட்டில உட்கார்ந்து சாப்பாடு இல்லையேன்னு கஷ்டப்படறவங்களைப் பார்த்து நான் வெறுக்கிறேன். இந்த நிமிஷத்து வயத்துப்பாட்டைத் தீர்த்து வைக்கிறதை விட, நிரந்தரமாப் பசி தீர வழி சொல்லணும்னு நான் நினைக்கிறேன். எல்லாத்துலேயும் என்னுடைய அணுகுமுறை இது தான்".

ஒரு திட்டம் என்று தொடங்கினால் அதற்கு அந்தந்தப் பகுதி மக்களுடைய ஒத்துழைப்பும் தேவை என்பதில் இவர் குறியாக இருக்கிறார்.

"நீங்கள் ராஜஸ்தானியாக இருந்தாலும் எப்படி இந்த ஊருடன் இங்கே கலைகளுடன் இப்படியோர் ஈடுபாடு?"

"'டோன்ட் கால் மீ எ ராஜஸ்தானி'. எங்க அம்மாவும் அப்பாவும்தான் ராஜஸ்தானியர். நான் காஞ்சிபுரம் பட்டுக் கட்டிக்கிற, பரதநாட்டியம் கத்துக்கிட்ட, நூறு சதவிகிதத் தமிழ்ப்பெண். பிறந்தது வளர்ந்தது படிச்சது எல்லாம் இங்கதான்" என்று அம்மாவைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தார் சப்னா.

— அனுராதா

இளைய தலைமுறை சிந்திக்கட்டுமே!





சமீபகாலமாக திருமணமான பெண்களிடையே ஒருவிதப் புரட்சி ஜுரம் பரவி வருகிறது. கணவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது மாத்திரமல்ல, அவன் இவன் என்று ஒருமையிலும், சில சமயம் அது என்று அஃறிணையிலும் குறிப்பிடுகிறார்கள். 'வா, போ' என்று ஏகவசனம்தான்.

பெண்களின் மாமியாரோ "நாம ஏதாவது சொல்லப்போனா 'மாமியார் கொடுமை'ம்பா. நம்மை அடீ மாமியாரே என்று கூப்பிடாதவரை க்ஷேமம்" என்று நினைத்து, கண்டு. கொள்ளாமல் இருக்கப் பழகிக் கொண்டு விட்டார்கள்.

"நாங்களும் கணவருக்குச் சமமா படிக்கறோம். வேலை பார்க்கிறோம். அவனைவிட எந்த விதத்திலும் நாங்கள் தாழ்ந்து போகவில்லை. அவன் எங்களை 'வாங்கோ போங்கோ'ன்னு கூப்பிடறானா? அவனுக்கு மட்டும் என்ன ஸ்பெஷல் மரியாதை? எதிர் நீச்சல் பட்டுமாமி மாதிரி, 'ஏன்னா... இங்கே வாங்கோன்னா...'ன்னு நீட்டி முழக்கணுமா?" என்று கர்ஜிக்கிறார்கள்.

இவ்வளவு புரட்சி பண்ணுபவர்கள் "ஏன் நாங்கதான் தாலி கட்டிக்கணுமா? கணவன் கட்டிக் கட்டுமே" என்று கூறாமல் தாலி மட்டும் கட்டிக் கொள்கிறார்கள். ஒருவேளை இன்னும் சிறிது நாள்களில் "நாங்கள்தான் கணவனுக்குத் தாலி கட்டுவோம்" என்று புதுமைப் புரட்சி தொடங்குவார்களோ என்னவோ?

பழைய காலம் போல் 'ஏன்னா...' என்றோ, மெட்டியை ஓசைப்படுத்தியோ, தொண்டையை ஒருவிதமாய் 'உக்கும்' என்று. கனைத்தோ கூப்பிட வேண்டாம். தாராளமாகப் பெயர் சொல்லியே அழைக்கட்டும். 'ஆம்படையான் பேரைச் சொன்னால் அவனுக்கு ஆயுசு குறைச்சல்' என்ற மூட நம்பிக்கை வேண்டாம். மூத்த பெர்ய்ம்மைகளை ஒழித்து; மூடக் கட்டுகளைத் தகர்க்கட்டும். 'அவன், இவன்' என்றோ, 'வா, போ' என்றோ கூப்பிடாமல் இருக்கலாம்.

இவர்கள் குழந்தை தன் அப்பாவை எப்படிக் கூப்பிடும்? "தாயைப் போல பிள்ளை". "அப்பா வரான். டேய் அப்பா" என்று கூப்பிடுமோ? குழந்தையைத் திருத்த முற்பட்டால் "நீ மாத்திரம் அப்படிக் கூப்பிடலாமா?" என்று கேட்கும். இந்த நாட்டின் பெருமையை உயர்த்தும் பொறுப்புடைய இளைய தலைமுறையினருக்கு இவர்கள் கற்றுத் தரும் பண்பாடு இதுதானா?

இன்றும் சில வகுப்பாரிடையே, மனைவியைக் குறிப்பிடும் பொழுது, 'அவங்க, அந்தம்மா' என்று கூறும் வழக்கம் இருக்கிறது.

யாராக இருந்தாலும் மரியாதை கொடுப்பதில் என்ன தவறு?

ஆங்கிலத்தில் இந்தப் பிரச்னை கிடையாது. 'ஹி வில் கம்' என்றால் 'அவன் வருவான்', 'அவர் வருவார்' எப்படி வேண்டுமானாலும் சமயத்திற்குத் தகுந்தபடி அர்த்தம் கொள்ளலாம்.

ஆனால் தமிழ் மொழிக்கே உள்ள சிறப்பு, 'அவர்', 'வாங்கோ' இம்மாதிரி மரியாதை வார்த்தைகள்தான். இந்தச் சிறப்பை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? யாராக இருந்தாலும் மரியாதை தருவதில் என்ன தவறு? வேலைக்காரி, வேலைக்காரன், சிறு குழந்தைகள் இவர்களை மரியாதையாகக் கூப்பிட்டால் அவர்கள் மனங்களில் சந்தோஷம் சிறகடித்துப் பறக்காதா? இளைய தலைமுறை சிந்திக்கலாமே.

மீனாட்சி,

சென்னை – 600 004.,

பரு நீங்க

அரிந்த வெங்காயத்தைக் கொண்டு பரு உள்ள இடத்தில் தேய்த்துவர பருக்கள் மறையும்.

எலும்புகள் உறுதிபெற

உணவோடு வெங்காயத்தை அதிக அளவில் சாப்பிட்டால் எலும்புகள் உறுதிபெறும்.

காசநோய்

தோல் உரித்த வெங்காயத்தைத் தினமும் சாப்பிட்டு வந்தால் காசநோய் மறையும்.

பல்வலி நீங்க

வெங்காயத்தைச் சிறுசிறு துண்டுகளாக்கிப் பல்வலி உள்ள இடத்தில் தேய்த்தால் வலி நீங்கும்.

சிறுநீர்த் தொல்லை

சிறுநீர் எரிச்சலுடன் வெளிவருகிறதா? சுண்ணாம்பைக் காலில் உள்ள கட்டை விரலில் பூசினால் அது உலர்ந்துவிடும். பிறகு சிறுநீர் எரிச்சலுடன் வெளிவருவது நின்றுவிடும்.

உடல் இளைப்பதற்கு

வெள்ளை வெங்காயத்தை நெய்யில் வறுத்து பனங்கற்கண்டு சேர்த்து காலை மாலை இரு வேளை சாப்பிட வேண்டும். – ஜி.எஸ்

திருமணத்திற்கு ஜாதகப் பொருத்தம் தேவையா?

'ஜனனீம் ஜன்ம செளக்யானாம்
வர்த்தனீம் குல சம்பதாம்
பதவீ பூர்வ புண்யானாம்
லிக்யதே ஜன்ம பத்ரிகா'

64 கலைகளில் சோதிடக் கலையும் ஒன்று. சோதிடக்கலையின் தந்தை வராஹ மிஹிரர். அவர் சோதிடக் கலை சம்பந்தமாய் ப்ருஹத் – சம்ஹிதை என்ற நூலும் இயற்றியுள்ளார். இவ்வளவு உயர்ந்த கலை ஜாதகத்தின் மூலம் பெண்ணைப் பெற்றவர்களைப் பாடாய்ப் படுத்துகிறது. திருமணத்தில் முதல்படியே ஜாதக பரிவர்த்தனை. பிள்ளை வீட்டாருக்கு வேண்டாத பெண்ணை நைசாகத் தட்டிக் கழிப்பதற்கு 'ஜாத்கப் பொருத்தம் சரியில்லை' என்ற காரணம் ஒரு கவசம்.

நானும் இந்தக் கலையைப் பயின்றவர்களிடம் பேசிப் பார்த்தேன். ஜாதகங்கள் கணிப்பது பற்றியே எவ்வளவு அபிப்பிராய பேதங்கள்! தற்காலத்தில் பெண்கள் வயதுக்கு வந்தபிறகு திருமணம் செய்வதால் ருது ஜாதகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு சாராரும், கலியுகத்தில் பூமியில் குழந்தை பிறந்த பிறகு தான் லக்னம் கணிக்க வேண்டும் என்று ஒரு சாராரும், ஜனன காலத்தில் சிரசு உதயமாகும் பொழுதே லக்னம் கணிக்க வேண்டும் என்று ஒரு சாராரும், தாயின் கர்ப்பத்தில் கரு உருப் பெற்ற சமயத்தை ஆதாரமாக வைத்து ஜாதகம் கணிக்க வேண்டும் என்று ஒரு சாராரும் அபிப்பிராயப்படுகின்றனர். ஆக ஜாதகம் கணிக்கும் முறையிலேயே இவ்வளவு அபிப்பிராய பேதங்கள்!

மொத்தம் 27 நட்சத்திரங்கள். இதில் பெண் நட்சத்திரம் முதல் பிள்ளை நட்சத்திரம் வரை கூட்டிய தொகையை 9ஆல் வகுத்தால் வரும் மீதி இரட்டைப் படையாக இருக்க வேண்டும். இதில் பெண்ணிற்கு ஏழாவது நட்சத்திரம் வதம், ஆணுக்கு 22ஆவது நட்சத்திரம் வைகாசிகம். இதிலும் சில நட்சத்திரங்களில் பிறந்த பெண்கள் நிலைமை மிகவும் பரிதாபம். மூலம் – பெண் மூலம் நிர்மூலம். மாமனாருக்கு ஆகாது. ஆயில்யம் – மாமியாருக்கு ஆகாது. கேட்டை – மூத்த மைத்துனருக்கு ஆகாது. விசாகம் – இளைய மைத்துனருக்கு ஆகாது. பூராடம் – நூலாடாது (மாங்கல்ய பாக்கியம் இருக்காது) திருவாதிரை – ஒரு வாய் களிக்குக் கஷ்டப்படுவாள். கடைசியில் மிஞ்சுவது ஏழெட்டு நட்சத்திரங்களே.

இந்தச் சொற்றொடர்களில் எதுகை மோனை நயம் நன்றாக இருக்கிறது. மற்றபடி உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. பெண்களை மட்டம் தட்டவென்றே இம்மாதிரி பழைய காலத்தில் வைத்திருக்க வேண்டும். ஆண்களுக்கு எந்த நட்சத்திரமும் தள்ளுபடி இல்லை. ஆண்மூலம் அரசாளும், மகத்துப்பிள்ளை ஜாதகத்தில் கிடைக்காது. இது எப்படி இருக்கு? 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை'க் கொளுத்துவாரில்லையே.

ஜாதகக் கட்டத்தில் இருந்து கொண்டு திருமண சமயத்தில் பூதாகாரமாக பயமுறுத்துவது செவ்வாய் தோஷம். இதிலும் அபிப்பிராய பேதங்கள் உள்ளன.

சுண்டைக்காயின் மகிமை

சுண்டைக்காயை உணவில் சேர்த்துக் கொண்டால் நல்ல பசி உணர்ச்சியை உண்டுபண்ணும்.

இரவில் சுண்டைக்காயை நல்லெண்ணெயில் வறுத்து உணவுடன் சேர்த்து சாப்பிட்டால் வாயுத் தொல்லை இருக்காது.

இக்காயில் 'விட்டமின் – A' உள்ளது. சுண்டைக்காயின் சிறந்த பயன் மார்புச் சளியைப் போக்குவது தான். பச்சை சுண்டைக்காயை தினமும் உணவில் சேர்த்தால் கபக்கோளாறு நீங்கும். வாத நோய்க்காரர்களுக்கும் சுண்டைக்காய் சிறந்த டானிக்.

— அகிலா கோபால்



தென் இந்தியாவிற்கு அதிபதி செவ்வாய் கிரஹம். ஆகையால் தென்னிந்தியாவில் பிறந்தவர்களுக்கு செவ்வாய்தோஷ பாதிப்பு கிடையாது. செவ்வாய் தோஷம் இருப்பினும் அதன் தசை நடப்பில் இருந்தால்தான் பாதிப்பு. செவ்வாய் தோஷம் உடையவர்கள் R.H. நெகடிவ் ரத்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆண், பெண் இருவருக்கும் செவ்வாய் தோஷம் இருந்தால் ரத்தப் பிரிவில் வேறுபாடு இருக்காது என்றும் கூறுகிறார்கள். (இதை ஆராய்ச்சியாளர்கள்தான் நிருபிக்க வேண்டும்).

காலஞ்சென்ற கிருபானந்த வாரியார் சுவாமிகள் கூறிய ஒரு கதை நினைவிற்கு வருகிறது. ஒரு பிரபல சோதிடரின் மனைவிக்குப் பிரசவ சமயம். அவர் பிரசவம் பார்க்கும் தாதியிடம், குழந்தை பிறந்த உடனேயே ஓர் எலுமிச்சம் பழத்தைப் பிரசவ அறையிலிருந்து வெளியே உருட்டி விட்டால் குழந்தை பிறந்த சரியான நேரம் தெரிந்து ஜாதகம் கணிக்கலாம் என்றார். அவ்வாறே கணித்தில் அந்தப் பெண் குழந்தை திருமணமாகி முதல் இரவன்றே விதவை

இளைய தலைமுறை சிந்திக்கட்டுமே!





சமீபகாலமாக திருமணமான பெண்களிடையே ஒருவிதப் புரட்சி ஜுரம் பரவி வருகிறது. கணவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது மாத்திரமல்ல, அவன் இவன் என்று ஒருமையிலும், சில சமயம் அது என்று அஃறிணையிலும் குறிப்பிடுகிறார்கள். 'வா, போ' என்று ஏகவசனம்தான்.

பெண்களின் மாமியாரோ "நாம ஏதாவது சொல்லப்போனா 'மாமியார் கொடுமை'ம்பா. நம்மை அடி மாமியாரே என்று கூப்பிடாதவரை க்ஷேமம்" என்று நினைத்து, கண்டு கொள்ளாமல் இருக்கப் பழகிக் கொண்டு விட்டார்கள்.

"நாங்களும் கணவருக்குச் சமமா படிக்கறோம். வேலை பார்க்கிறோம். அவனைவிட எந்த விதத்திலும் நாங்கள் தாழ்ந்து போகவில்லை. அவன் எங்களை 'வாங்கோ போங்கோ'ன்னு கூப்பிடறானா? அவனுக்கு மட்டும் என்ன ஸ்பெஷல் மரியாதை? எதிர் நீச்சல் பட்டுமாமி மாதிரி, 'ஏன்னா... இங்கே வாங்கோன்னா...'ன்னு நீட்டி முழக்கணுமா?" என்று கர்ஜிக்கிறார்கள்.

இவ்வளவு புரட்சி பண்ணுபவர்கள் "ஏன் நாங்கதான் தாலி கட்டிக்கணுமா? கணவன் கட்டிக் கட்டுமே" என்று கூறாமல் தாலி மட்டும் கட்டிக் கொள்கிறார்கள். ஒருவேளை இன்னும் சில நாள்களில் "நாங்கள்தான் கணவனுக்குத் தாலி கட்டுவோம்" என்று புதுமைப் புரட்சி தொடங்குவார்களோ என்னவோ?

பழைய காலம் போல் 'ஏன்னா...' என்றோ, மெட்டியை ஓசைப்படுத்தியோ, தொண்டையை ஒருவிதமாய் 'உக்கும்' என்று கனைத்தோ கூப்பிட வேண்டாம். தாராளமாகப் பெயர் சொல்லியே அழைக்கட்டும். 'ஆம்படையான் பேரைச் சொன்னால் அவனுக்கு ஆயுசு குறைச்சல்' என்ற மூட நம்பிக்கை வேண்டாம். மூத்த பொய்ம்மைகளை ஒழித்து; மூடக் கட்டுகளைத் தகர்க்கட்டும். 'அவன், இவன்' என்றோ, 'வா, போ' என்றோ கூப்பிடாமல் இருக்கலாம்.

இவர்கள் குழந்தை தன் அப்பாவை எப்படிக் கூப்பிடும்? "தாயைப் போல பிள்ளை". "அப்பா வரான். டேய் அப்பா" என்று கூப்பிடுமோ? குழந்தையைத் திருத்த முற்பட்டால் "நீ மாத்திரம் அப்படிக் கூப்பிடலாமா?" என்று கேட்கும். இந்த நாட்டின் பெருமையை உயர்த்தும் பொறுப்புடைய இளைய தலைமுறையினருக்கு இவர்கள் கற்றுத் தரும் பண்பாடு இதுதானா?

இன்றும் சில வகுப்பாரிடையே, மனைவியைக் குறிப்பிடும் பொழுது, 'அவங்க, அந்தம்மா' என்று கூறும் வழக்கம் இருக்கிறது.

யாராக இருந்தாலும் மரியாதை கொடுப்பதில் என்ன தவறு?

ஆங்கிலத்தில் இந்தப் பிரச்னை கிடையாது. 'ஹி வில் கம்' என்றால் 'அவன் வருவான்', 'அவர் வருவார்' எப்படி வேண்டுமானாலும் சமயத்திற்குத் தகுந்தபடி அர்த்தம் கொள்ளலாம்.

ஆனால் தமிழ் மொழிக்கே உள்ள சிறப்பு, 'அவர்', 'வாங்கோ' இம்மாதிரி மரியாதை வார்த்தைகள்தான். இந்தச் சிறப்பை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது? யாராக இருந்தாலும் மரியாதை தருவதில் என்ன தவறு? வேலைக்காரி, வேலைக்காரன், சிறு குழந்தைகள் இவர்களை மரியாதையாகக் கூப்பிட்டால் அவர்கள் மனங்களில் சந்தோஷம் சிறகடித்துப் பறக்காதா? இளைய தலைமுறை சிந்திக்கலாமே.

மீனாட்சி,
சென்னை – 600 004.,

பரு நீங்க

அரிந்த வெங்காயத்தைக் கொண்டு பரு உள்ள இடத்தில் தேய்த்துவர பருக்கள் மறையும்.

எலும்புகள் உறுதிபெற

உணவோடு வெங்காயத்தை அதிக அளவில் சாப்பிட்டால் எலும்புகள் உறுதிபெறும்.

காசநோய்

தோல் உரித்த வெங்காயத்தைத் தினமும் சாப்பிட்டு வந்தால் காசநோய் மறையும்.

பல்வலி நீங்க

வெங்காயத்தைச் சிறுசிறு துண்டுகளாக்கிப் பல்வலி உள்ள இடத்தில் தேய்த்தால் வலி நீங்கும்.

சிறுநீர்த் தொல்லை

சிறுநீர் எரிச்சலுடன் வெளிவருகிறதா? சுண்ணாம்பைக் காலில் உள்ள கட்டை விரலில் பூசினால், அது உலர்ந்துவிடும். பிறகு சிறுநீர் எரிச்சலுடன் வெளிவருவது நின்றுவிடும்.

உடல் இளைப்பதற்கு

வெள்ளை வெங்காயத்தை நெய்யில் வறுத்து பனங்கற்கண்டு சேர்த்து காலை மாலை இரு வேளை சாப்பிட வேண்டும். —ஜி.எஸ்.

திருமணத்திற்கு ஜாதகப் பொருத்தம் தேவையா?

'ஜனனீம் ஜன்ம செளக்யானாம்
வர்த்தனீம் குல சம்பதாம்
பதவீ பூர்வ புண்யானாம்
லிக்யதே ஜன்ம பத்ரிகா'

64 கலைகளில் சோதிடக் கலையும் ஒன்று. சோதிடக்கலையின் தந்தை வராஹ மிஹிரர். அவர் சோதிடக் கலை சம்பந்தமாய் ப்ருஹத் – சம்ஹிதை என்ற நூலும் இயற்றியுள்ளார். இவ்வளவு உயர்ந்த கலை ஜாதகத்தின் மூலம் பெண்ணைப் பெற்றவர்களைப் பாடாய்ப் படுத்துகிறது. திருமணத்தில் முதல்படியே ஜாதக பரிவர்த்தனை. பிள்ளை வீட்டாருக்கு வேண்டாத பெண்ணை நைசாகத் தட்டிக் கழிப்பதற்கு 'ஜாதகப் பொருத்தம் சரியில்லை' என்ற காரணம் ஒரு கவசம்.

நானும் இந்தக் கலையைப் பயின்றவர்களிடம் பேசிப் பார்த்தேன். ஜாதகங்கள் கணிப்பது பற்றியே எவ்வளவு அபிப்பிராய பேதங்கள்! தற்காலத்தில் பெண்கள் வயதுக்கு வந்தபிறகு திருமணம் செய்வதால் ருது ஜாதகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு சாராரும், கலியுகத்தில் பூமியில் குழந்தை பிறந்த பிறகு தான் லக்னம் கணிக்க வேண்டும் என்று ஒரு சாராரும், ஜனன காலத்தில் சிரசு உதயமாகும் பொழுதே லக்னம் கணிக்க வேண்டும் என்று ஒரு சாராரும், தாயின் கர்ப்பத்தில் கரு உருப்பெற்ற சமயத்தை ஆதாரமாக வைத்து ஜாதகம் கணிக்க வேண்டும் என்று ஒரு சாராரும் அபிப்பிராயப்படுகின்றனர். ஆக ஜாதகம் கணிக்கும் முறையிலேயே இவ்வளவு அபிப்பிராய பேதங்கள்!

மொத்தம் 27 நட்சத்திரங்கள். இதில் பெண் நட்சத்திரம் முதல் பிள்ளை நட்சத்திரம் வரை கூட்டிய தொகையை 9ஆல் வகுத்தால் வரும் மீதி இரட்டைப் படையாக இருக்க வேண்டும். இதில் பெண்ணிற்கு ஏழாவது நட்சத்திரம் வதம், ஆணுக்கு 22ஆவது நட்சத்திரம் வைகாசிகம். இதிலும் சில நட்சத்திரங்களில் பிறந்த பெண்கள் நிலைமை மிகவும் பரிதாபம். மூலம் – பெண் மூலம் நிர்மூலம். மாமனாருக்கு ஆகாது. ஆயில்யம் – மாமியாருக்கு ஆகாது. கேட்டை – மூத்த மைத்துனருக்கு ஆகாது. விசாகம் – இளைய மைத்துனருக்கு ஆகாது. பூராடம் – நூலாடாது (மாங்கல்ய பாக்கியம் இருக்காது) திருவாதிரை – ஒரு வாய் களிக்குக் கஷ்டப்படுவாள். கடைசியில் மிஞ்சுவது ஏழெட்டு நட்சத்திரங்களே.

இந்தச் சொற்றொடர்களில் எதுகை மோனை நயம் நன்றாக இருக்கிறது. மற்றபடி உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. பெண்களை மட்டம் தட்டவென்றே இம்மாதிரி பழைய காலத்தில் வைத்திருக்க வேண்டும். ஆண்களுக்கு எந்த நட்சத்திரமும் தள்ளுபடி இல்லை. ஆண்மூலம் அரசாளும், மகத்துப்பிள்ளை ஜாதகத்தில் கிடைக்காது. இது எப்படி இருக்கு? 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை'க் கொளுத்துவாரில்லையே.

ஜாதகக் கட்டத்தில் இருந்து கொண்டு திருமண சமயத்தில் பூதாகாரமாக பயமுறுத்துவது செவ்வாய் தோஷம். இதிலும் அபிப்பிராய பேதங்கள் உள்ளன.

சுண்டைக்காயின் மகிமை

சுண்டைக்காயை உணவில் சேர்த்துக் கொண்டால் நல்ல பசி உணர்ச்சியை உண்டுபண்ணும்.

இரவில் சுண்டைக்காயை நல்லெண்ணெயில் வறுத்து உணவுடன் சேர்த்து சாப்பிட்டால் வாயுத் தொல்லை இருக்காது.

இக்காயில் 'விட்டமின் – A' உள்ளது. சுண்டைக்காயின் சிறந்த பயன் மார்புச் சளியைப் போக்குவது தான். பச்சை சுண்டைக்காயை தினமும் உணவில் சேர்த்தால் கபக்கோளாறு நீங்கும். வாத நோய்க்காரர்களுக்கும் சுண்டைக்காய் சிறந்த டானிக்.

— அகிலா கோபால்



தென் இந்தியாவிற்கு அதிபதி செவ்வாய் கிரஹம். ஆகையால் தென்னிந்தியாவில் பிறந்தவர்களுக்கு செவ்வாய்தோஷ பாதிப்பு கிடையாது. செவ்வாய் தோஷம் இருப்பினும் அதன் தசை நடப்பில் இருந்தால்தான் பாதிப்பு. செவ்வாய் தோஷம் உடையவர்கள் R.H. நெகடிவ் ரத்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆண், பெண் இருவருக்கும் செவ்வாய் தோஷம் இருந்தால் ரத்தப் பிரிவில் வேறுபாடு இருக்காது என்றும் கூறுகிறார்கள். (இதை ஆராய்ச்சியாளர்கள்தான் நிரூபிக்க வேண்டும்).

காலஞ்சென்ற கிருபானந்த வாரியார் சுவாமிகள் கூறிய ஒரு கதை நினைவிற்கு வருகிறது. ஒரு பிரபல சோதிடரின் மனைவிக்குப் பிரசவ சமயம். அவர் பிரசவம் பார்க்கும் தாதியிடம், குழந்தை பிறந்த உடனேயே ஓர் எலுமிச்சம் பழத்தைப் பிரசவ அறையிலிருந்து வெளியே உருட்டி விட்டால் குழந்தை பிறந்த சரியான நேரம் தெரிந்து ஜாதகம் கணிக்கலாம் என்றார். அவ்வாறே கணித்ததில் அந்தப் பெண் குழந்தை திருமணமாகி முதல் இரவன்றே விதவை

யாகி விடுவாள் என்று தெரிந்து வருந்தினார். உரியவயது வந்து திருமணம் நடந்து முதல் இரவும் வந்தது. மாப்பிள்ளை உயிரோடு தான் இருந்தார். சோதிடர் தன் சோதிடம் பொய்த்துவிட்டதே என்று வருந்தி பிரசவம் பார்த்த தாதியைக் கூப்பிட்டு விசாரித்ததில் குழந்தை பிறந்த உடன் உருட்டி விட்ட எலுமிச்சம்பழம் வாசற்படி தடுக்கி வெளியே போகமுடியாது போயிற்று என்றும், அதை எடுத்து மறுமுறை உருட்டிவிட்ட பிறகு தான் வெளியே சென்று விழுந்தது என்றும் கூறினாள். ஆக ஜனன நேரம் தப்பியதால் சோதிடம் பொய்த்து விட்டது. துல்லியமாக ஜனனநேரம் கணிப்பது சாத்திய மான காரியமா?

ஜாதகத்தை அலசி அலசிப் பார்ப்பதால் நல்ல குடும்பப் பின்னணி, உயர்ந்த குணம், மேன்மையான பழக்க வழக்கங்கள் உள்ள வரன்கள் கை நழுவிப் போய் விடுகின்றன. சோதிடர் களின் கருத்து வேறுபாடால் பெண் வீட்டாருக்குப் பொருத்தமிருந்தால் பிள்ளை வீட்டாருக்குப் பொருத்த மாயிருப்பதில்லை. 'சம சப்தமப் பொருத்தம்' என்று செய்த திரு மணங்கள் கூட விவாகரத்தில் முடிந்திருக்கின்றன. ஜாதகமே பார்க்காமல் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் அமோகமாக இருக்கிறார்கள்.

திருமண வாழ்க்கை வெற்றிகர மாக அமைய, தம்பதிகளுக்குள் மனப்பொருத்தம் தேவை. பெற் றோர்கள், குடும்பப் பின்னணி, படிப்பு, மனப்பொருத்தம் ஆகிய வற்றை ஆராய்ந்து திருமணம் நடத்தினால் நல்லது. கடவுள் சந்நிதியில் பூப்போட்டுப் பார்த்து திருமணம் நிச்சயிக்கலாம். எல் லாம் வல்ல இறைவனின் உத்தர வுக்கு மேல் வேறு உண்டோ?

சோதிட சாஸ்திரத்தைக் குறை கூறுவதாக யாரும் நினைக்க வேண்டாம். அது ஒரு சமுத்திரம். சோதிட விற்பன்னர்களின் கருத்து வேறுபாடால் பெண் பிள்ளைகளின் திருமணம் உரியகாலத்தில் நடக் காமல் தள்ளிப்போகிறதைக் கண் கூடாகக் கண்டு என் ஆதங்கத்தில் இதை எழுதி இருக்கிறேன்.

– மீனாட்சி சங்கரன்

இயற்கை உணவுகள்


பீட்ரூட் கலப்புணவு

தேவையான பொருள்கள்

பீட்ரூட் துருவல், சிறிதளவு குடமிளகாய்த் துண்டுகள் (பொடிப் பொடியாக நறுக்கியது) தேங் காய்த் துருவல்.

செய்முறை

மேற்கூறிய பொருள்களுடன், பொடிப்பொடியாக நறுக்கப் பட்ட கொத்தமல்லி கறிவேப்பிலை யும் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும். கடுகு, சீரகம், கரு வேப்பிலையும் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும். கடுகு, சீரகம், உளுத்தம்பருப்பு, வேர்க் கடலை ஆகியவற்றைத் தாளித்துச் சேர்க்கவும். ருசிக்கேற்றபடி உப்பு எலுமிச்சைச் சாறும் சேர்க்கப்பட வேண்டும்.



பச்சைக் காய்கறிகளின் கலப்புணவு

தேவையான பொருள்கள்

நறுக்கப்பட்ட முட்டைக் கோஸ், பீர்க்கங்காய், புடலங்காய், தக் காளி, துருவப்பட்ட தேங்காய், சிறிதளவு இஞ்சி.

செய்முறை :

மேற்கூறியவற்றை நன்றாகக் கலந்துகொண்டு உப்பு, எலு மிச்சைச்சாறு, வெல்லம் ஆகிய வற்றை ருசிக்கு ஏற்றவாறு சேர்க் கவும். பொடிப்பொடியாக நறுக் கப்பட்ட கொத்தமல்லி, கறிவேப் பிலையும்கூட தாளித்த கடுகு சீரகம் உளுத்தம்பருப்பு வேர்க் கடலையும் சேர்த்துக் கொள்ளவும்.

நறுக்கிய கீரைக் கலப்புணவு

தேவையான பொருள்கள்

கீரையின் நறுக்கப்பட்ட தழைப் பகுதி நறுக்கப்பட்ட வெள்ளரிக்காய் (சிறிதளவு) மஞ்சள், பூசணித் துருவல், குடை மிளகாய்த் துருவல், இஞ்சித் துருவல், தேங்காய்த் துருவல்

செய்முறை :

மேற்குறித்த பொருள்களைக் கலந்து கொண்டு ருசிக்கேற்ற அளவு உப்பு, வெல்லம், எலு மிச்சைச் சாறு ஆகியவற்றைச் சேர்க்கவும். இவற்றுடன் பொடிப் பொடியாக நறுக்கப்பட்ட கொத்த மல்லி கறிவேப்பிலையுடன் கடுகு, சீரகம், உளுத்தம்பருப்பு, வேர்க் கடலை ஆகியவற்றைத் தாளித்துச் சேர்க்கவும்.

முளைகட்டிய பாசிப்பயறு கலப்புணவு

தேவையான பொருள்கள்

முளைவிட்ட பாசிப்பயிறு (பச்சைப்பயறு), காரட் துருவல், சிறிதளவு, குடைமிளகாய்த் துரு வல், இஞ்சித் துருவல், தேங்காய்த் துருவல் பொடிப் பொடியாக நறுக்கப்பட்ட கொத்தமல்லி, கறி வேப்பிலை, நறுக்கப்பட்ட தக் காளி.

செய்முறை :

மேற்குறித்த பொருள்களை நன்றாகக் கலந்து ருசிக்கேற்ற அளவு உப்பு வெல்லம் எலு மிச்சைச் சாறு ஆகியவற்றைச் சேர்க்கவும். கடுகு, சீரகம், உளுத்தம் பருப்பு, வேர்க்கடலை ஆகியவற்றைத் தாளித்துச் சேர்க் கவும்

நன்றி : ஆத்மஞான அறக்கட்டளை நிறுவனம் சென்னை – 41.



ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் வெறும் சிநேகிதமாக மட்டும் இருப்பது சாத்தியமா?

"அம்மா என் பிரெண்டுக்கு காபி குடு" என்று பெண் சொல்லும்போது எட்டிப் பார்த்தால் உட்கார்ந்திருப்பது ஒரு தோழியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை; தோழனாகவும் இருக்கலாம். இப்போதைய இளைஞர்கள் மத்தியில் பிரெண்டு என்பது காமன் ஜெண்டர். இதை இவர்கள் பெரிய விஷயமாக நினைப்பதில்லை.

இது ஓர் ஆரோக்கியமான வளர்ச்சி. LKGயில் இருந்தே கோஎஜுகேஷனில் படித்து வளர்வதால் ஒரு தோழமை உணர்ச்சியுடன்தான் வளர்கிறார்களே தவிர இதில் வேறு எண்ணங்கள் அவர்களுக்கு இருப்பதில்லை.

ஆனால் இந்தச் சலனமில்லாத நீரில் கல்லைத் தூக்கிப்போட்டுக் குழப்புவது சென்ற தலைமுறையினர்தான் எனலாம். அவர்கள் வளர்ந்த விதம் கட்டுப்பாடான சூழ்நிலை என்பதால் இந்த சிநேகிதத்தை தன் வீட்டில் இருந்தாலும் சரி, பக்கத்து வீட்டில் நடந்தாலும் சரி. சாதாரணமாகப் பார்க்க முடிவதில்லை, அவர்களால்.

அலுவலகத்திலும் சரி, கல்லூரி, பிளாட் மற்ற எந்த இடங்களிலும் சரி, ஆண் – பெண் சிநேகிதம் சரியான கண்ணோட்டத்தில் விமர்சிக்கப்படுவதில்லை.

நிறைகுறைகளோடு ஒருவரைப் புரிந்து கொண்டு ஒருத்தருக்கொருத்தர் ஆலோசனை கூறி வழிநடத்துதலே சிறந்த நட்பு என்றால் அது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் மலர்வதில் தப்பு என்ன? அது ஏன் காதலாக மட்டுமே இருக்க வேண்டும்?

நட்புக்கு அடுத்த கட்டம் காதல். சில நட்புகள் காதலாகக் கனியலாம். அதனால் நட்பே தவறென்பது என்ன வாதம்! இருவருக்கிடையே புத்தி பூர்வமாக ஏற்படுவது நட்பு. எந்த நேரம் வேண்டுமானாலும் அது திரும்ப எடுத்துக் கொள்ளப் படலாம்.

இருவருக்கிடையே மனம், உடல் ரீதியாக ஏற்படுவது காதல், கலியாணம். திரும்ப மாற்றிக் கொள்ள முடியாதது; மாற்றக் கூடாதது.

இந்த வித்தியாசத்தைத் துல்லியமாகப் புரிந்து கொண்டிருப்பவர்களால், "Opposite sex" உடன் நல்ல நட்பு வைத்துக் கொள்ள முடியும். அப்படி இருக்கும் மற்றவர்களை ஆரோக்கியமாகப் பார்க்க முடியும்.

வளர்ந்து வரும் இளம் தலைமுறையினர் இந்த மனவளர்ச்சி பெற்று வருகின்றனர். இவர்கள் தவறிவிடாமல் பெற்றோர்கள் வழி நடத்தலாம்; தவறில்லை. ஆனால் குறுகிய கண்ணோட்டத்தில் இதை விமர்சித்து அவர்களைக் கோபப்படுத்தாதீர்கள். "செய்யாததைச் செய்தேன் என்றா, சொல்கிறீர்கள், செய்து காட்டுகிறேன் பார்!" என்று அப்போதுதான் இடறி விழுவார்கள்.

ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் வெறும் சிநேகிதமாக மட்டும் இருப்பது கண்டிப்பாக சாத்தியம். இதைப் புரிந்து கொள்ளுங்கள்.

"ஜ்வாலமுகி"



பெண்கள் அந்திமக் கிரியைகள் செய்யலாமா?

அந்திமக் கிரியைகளைப் பெண்கள் செய்யக் கூடாது என்று யார் சொல்கிறார்கள்? எங்கள் ஊரில் உள்ள ஒரு சமூகத்தவர், இனத்தில், ஆண் சந்ததி இல்லை எனில், பெண்ணே பெற்றோர்களுக்கு அந்திமக் கிரியை செய்வார்கள்.

சில இனத்தவர்தாம் இதை ஒரு பிரச்னையாக கருதிக் குழப்புகிறார்கள்.

முன்பு பெண்கள், ஐயப்பன் சந்நிதிக்கு வரவே கூடாது என்றார்கள். இப்போது விதி முறைகளைத் தளர்த்தவில்லையா? அது போல், ஆண் சந்ததி அற்றவர்களுக்கு, பெண் அந்திமக் கிரியைகள் செய்யலாம் என்னும் வழக்கத்தை நாமும் ஏற்படுத்த வேண்டியதுதான்.

இக்காலத்தில், ஆணும், பெண்ணும், சரிசமமாக மதிக்கப்படுகிறார்கள். ஆண் குழந்தை இல்லாத எத்தனையோ பெற்றோர்களை, அவர்களின் பெண்கள் தாமே ஆதரிக்கிறார்கள்? அப்படி இருக்கும்போது, பெற்றோர்களுக்கு, அந்திமக் கிரியைகள் மட்டும் ஏன் செய்யக் கூடாது?

பெண்கள் என்றும், ஆண்கள் என்றும், பேதம் பார்க்கும் வழக்கம் இன்று மலையேறிப் போயிற்று. ஆண் செய்யும், அத்தனை வேலைகளையும் பெண் செய்து விடும் இக்காலத்தில், ' இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. முதலில் ஆட்சேபம் வந்தாலும், பின் இதையும் சமூகம் அனுமதித்துத்தான் தீரவேண்டும்.

— ஈசுவரி
பெங்களூர்.

நாவடக்கம்!

ஓர் காலத்தில் போதிஸ்தா என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் பெரிய வாயாடி. அவனுக்குச் சுபோதா என்ற மந்திரி ஒருவன் இருந்தான். அவன் பெரும் மதியூகி. ஒருநாள் அவர்கள் இருவரும் அரண்மனை நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்த போது மரத்திலிருந்து ஒரு குயில் குஞ்சு கீழே விழுந்ததும் அதன் மேலெல்லாம் காயங்கள். இதைக் கண்டு அரசன் வேதனை கொண்டான். 'அந்தக் குஞ்சை அதன் பெற்றோர் ஏன் இவ்வாறு இம்சிக்கின்றனர்' என்று அவன் கேட்டான்.

மன்னனுக்கு நாவடக்கத்தைப் போதிக்க இதுவே தருணம் என்று மந்திரி நினைத்தான். மந்திரி சொன்னான் : "அரசே! இந்தக் குஞ்சை இரண்டு காகங்கள் வளர்த்தன. அது குயிலின் குஞ்சு என்பது அவற்றுக்குத் தெரியாது. காக்கைக் கூட்டில் கள்ளத்தனமாக முட்டை இடுவது குயில்களின் வழக்கம். இந்தக் குயில் குஞ்சு சதா சளசளவென்று பேசிக் கொண்டிருக்கும். அது தங்கள் இனத்தின் குரலாக இல்லை, அந்தக் குஞ்சு தன் குடும்பத்துக்கு அழையாத விருந்தாளி என்று காகங்களுக்குப் புரிந்து விட்டது. அதனால் காகங்கள் கூட்டிலிருந்து அதைத் தள்ளிவிட்டன. அடக்கமின்றிப் பேசியதால் அந்தக் குயில் குஞ்சு இவ்வாறு தண்டனைக்கு உள்ளாயிற்று. வாயை மூடி அடக்கமாயிருந்தால் இதெல்லாம் நடந்திருக்காது. இறகு முளைக்கும் வரை அந்தக் குயில் குஞ்சு காகங்களுடன் மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்திருக்கலாம்!" அமைச்சர் சூசகமாகச் சுட்டிக் காட்டிய படிப்பினையை மன்னன் புரிந்து கொண்டான். அன்று முதல் அரசன் தன் வாயாடித் தனத்தை ஒழித்து விட்டான்!

இளைய அமுதம்

தயாரிப்பு : குண்டுமணி

பாம்பு ராஜா

ஓர் ஊரில் ஓர் இளவரசன் இருந்தான். அவனுக்கு அப்பா, அம்மா இல்லை. சின்னம்மாதான் இருந்தாள். இளவரசன் வளர்ந்து பட்டத்து ராஜா ஆனான். அவனுக்குக் கல்யாணமும் நடந்தது. ராஜாவின் மனைவியான ராணியை, சின்னம்மா மிகவும் துன்புறுத்தி வந்தாள்.

சிறிது காலம் சென்றதும் ராணி கருவுற்றாள். ராஜாவிடம். 'நமக்கு ஆண்பிள்ளைதான் பிறக்கும். எனக்குக் குழந்தை பிறக்கும் போது முத்து முத்தாக மழை பெய்யும்' என்று சொல்வாள்.

ஒருநாள் ராஜா வேட்டையாடச் சென்றார். இதுதான் சமயம் என்று அந்த சின்னம்மாகாரி ராணியை அழைத்துக்கொண்டு பயங்கரமான காட்டிற்குக் கூட்டிப்போய் அங்கு உள்ள பாழடைந்த ஒரு கிணற்றுக்குள் தள்ளி விட்டு விட்டாள். அந்தக் கிணற்றுக்குள் ஒரு நாகப்பாம்பு வசித்து வந்தது. அதனுடைய தலையில் மிகப் பெரிய கட்டி (புண்) இருந்து, மிகவும் வேதனையைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அப்போது, கிணற்றில் தள்ளிவிடப்பட்ட ராணி பாம்பின் தலையில் விழுந்தாள். உடனே கட்டி உடைந்துவிட்டது. கட்டி உடைந்து வலி நீங்கியதும், பாம்புக்கு அளவற்ற மகிழ்ச்சி. அதனிடம் ராணி தன்னைப் பற்றிய எல்லா விவரமும் சொன்னாள். அது அந்த ராணியிடம் 'நான் உன்னைப் பத்திரமாகப் பாதுகாக்கிறேன். நீ என்னை அண்ணா என்றே அழைக்க வேண்டும்' என்றது. அப்படியே ராணி அங்கு வாழ்ந்து வந்தாள்.

வேட்டைக்குப் போன ராஜா வீடு திரும்பியதும், ராணியைக் காணாமல் போகவே, சின்னம்மாவிடம், 'ராணி எங்கே?' என்றான். அதற்கு சின்னம்மா, 'உன் மனைவி என்னிடம் சொல்லாமல் எங்கோ சென்று விட்டாள்' என்று கூறி விட்டாள். ராஜா தினமும் ராணியை நினைத்துக்கொண்டே வருத்தத்துடன் காலம் கழித்தான். எங்கெல்லாமோ தேடியும் பார்த்தான்.

சில மாதம் கழித்து ராணிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அன்று நாடெங்கும் முத்து முத்தாக மழை பெய்தது. உடனே ராஜா, 'என் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. எங்கோயிருக்கிறாள்' என்று சிறு மகிழ்ச்சி கொண்டான்.

இவ்வாறு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. ராணியின் குழந்தைக்கு ஐந்து வயது ஆகிவிட்டது. அவன் பாம்பை 'மாமா' என்று



✶

கண்டுபிடியுங்கள்!

இந்தப் படத்தில் என்ன தவறு?

✶

வாத்தின் கால்கள் தவறாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன!

முதல் குழந்தைப் பத்திரிகை

■ 1840ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கான ஒரு பத்திரிகை வெளிவந்தது. 'பாலதீபிகை' என்பது அதன் பெயர். மூன்று மாதத்துக்கு ஒருமுறையாக அது வெளிவந்தது. நாகர்கோயிலில் இருந்த கிறிஸ்துவப் பிரசார சபையோர்தான் அதை வெளியிட்டனர். சுமார் பதின்மூன்று ஆண்டுகள் 'பாலதீபிகை' தொடர்ந்து வெளிவந்தது.

தான் அழைப்பான். அவன் அடிக்கடி கிணற்றின் மேற்பகுதிக்கு வந்து விளையாடுவான். ஒருநாள் வேட்டையாட இவர்கள் இருக்கும் காட்டிற்கு ராஜா வந்துவிட்டான். தண்ணீர் தாகம் எடுக்கவே இந்தக் கிணற்றருகில் வந்து விட்டான். அப்போது அங்கு சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்த ராஜா, 'சிறுவனே! இக் காட்டில் தனியாயிருக்கிறாயே. உனக்குப் பயமாயில்லையா?" எனக் கேட்டதும் அவன், 'என் மாமாவும், அம்மாவும் இருக்கும்போது எனக்கேன் பயம்' என்று கூறி, கிணற்றுக்குள் பார்த்து, அம்மாவையும் மாமாவையும் கூப்பிட்டான். இருவரும் வெளியே வந்தார்கள். தன் மனைவியைப் பார்த்த ராஜா பேராச்சரியம் அடைந்து அப்படியே தழுவிக் கொண்டான். மகனைத் தூக்கி முத்தமாரி பொழிந்தான். பாம்பைப் பார்த்ததும் வாளை உருவினான். "வேண்டாம். இவர்தான் எங்களை இதுவரை பாதுகாத்து வந்தார். இவர் என் அண்ணன்" என்றாள் ராணி. பாம்பும் ராஜாவும் அன்புடன் பேசிக் கொண்டார்கள். உடனே எல்லாரும் ஊருக்குப் புறப்பட்டார்கள்.

ராணி பாம்பைப் பார்த்து, "அண்ணா! போய் வருகிறோம்" என்றாள். உடனே பாம்பு, 'சில காலம் கழித்து, நான் உன் வீட்டிற்கு வருவேன். அப்போது உன் மகன் என்னை 'மாமா' என்று சொல்ல வேண்டும். மாறாக பாம்பு என்றால் உடனே கொத்தி விடுவேன். அப்புறம் நீ என்னைப் பார்த்து, 'சீறிச் சினந்து வா, ஆடி அடங்கி வா, அழகிய ராஜகுமாரனாக வா' என்று சொல்ல வேண்டும்' என்று சொன்னது. சிறுவனை ஆசைதீரக் கொஞ்சியது.


ராஜாவும் ராணியும் பையனுடன் பல்லக்கில் ஏறிக்கொண்டார்கள். பல்லக்கில் பின்னாலேயே பாம்பும் ஊர்ந்து வந்து, வீடு வரை விட்டுச் சென்றது.

வீட்டிற்கு வந்ததும் சின்னம்மாவை வீட்டை விட்டுத் துரத்தி விட்டார்கள். இவர்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். ராணியையும் மகனையும் பாம்பு வளர்த்ததால் மகனுக்கு 'நாகராஜன்' என்று பெயர் வைத்தார்கள். அவனுக்கும் பன்னிரண்டு வயது ஆகிவிட்டது.

ஒரு நாள் நாகராஜன் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது பாம்பைப் பார்த்து விட்டான். உடனே ஓடிப் போய், 'அம்மா! நம்மை அன்று சிறைகாத்த (பாதுகாத்த) நம் அம்மான் (மாமா) வந்திருக்கிறார்' என்று தாயைக் கூட்டி வந்தான். ராணி பாம்பைப்பார்த்துச் . 'சீறி, சினந்து வா' என்றாள். பாம்பு சீறிக் கொண்டு வந்தது. தாயும் மகனும் பயந்து விட்டார்கள். அடுத்து, 'ஆடி அடங்கி வா' என்றாள். உடனே பாம்பு படம் எடுத்து ஆடிக்கொண்டு அடங்கிவிட்டது. கடைசியாக, 'அழகிய ராஜகுமாரனாக வா' என்றாள். என்ன ஆச்சரியம்! பாம்பு ஓர் அழகான ராஜகுமாரனாகி விட்டது. ராஜகுமாரனான மாமா மருமகனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார். ராணி, ராஜாவிடம், 'இதோ என் அண்ணன், உங்கள் மைத்துனர் வந்துவிட்டார் பாருங்கள்' என்று கூற, எல்லாரும் சந்தோஷமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

ஆர்.கே. தேவி, கோவை.





கில்லாடிக்குக் கில்லாடி!

கொள்ளைக்காரன் (துப்பாக்கியை நீட்டி) : பர்ஸைக் கொடு! இல்லாட்டா உன்னைச் சுட்டுவிடுவேன்.

வழிப்போக்கன் : இந்தாப்பா! பர்ஸை நீயே வைச்சுக்கோ!

கொள்ளைக்காரன் : ஹஹ்ஹா! என் துப்பாக்கியில் குண்டு இல்லை.

வழிப்போக்கன் : ஒஹோ ஹோ! என் பர்ஸிலும் காலணாக் காசு இல்லையே!

தமிழ் – குழந்தைகள் கலைக்களஞ்சியம்

■ அறிவியல் துறையில் பெரிய சாதனை என்று சொல்லும் அளவுக்குத் தமிழிலே குழந்தைகள் கலைக்களஞ்சியம் முன்பு வெளிவந்துள்ளது. பத்துத் தொகுதிகள் கொண்ட இக்களஞ்சியம், குழந்தைகள் உள்ளம் கவரும் முறையில் வண்ணப் படங்களுடன் எளிய நடையில் அமைந்துள்ளது. மேல்நாட்டுக் கலைக் களஞ்சியங்களுடன் ஒப்பிடத்தக்க முறையில், சிறந்த முறையில் இதை உருவாக்கித் தந்த தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் தி.சு. அவிநாசிலிங்கத்துக்கும், கலைக் களஞ்சியத் தலைமை ஆசிரியர் பெரியசாமி தூரனுக்கும் தமிழ்க் குழந்தை உலகமும், பெற்றோர் உலகமும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளன.

✶

உண்மைக் கதை

தாயே தெய்வம்

பல மொழிகளைக் கற்பது வும் பயன் தரும். என் தகப்ப னுக்கு எட்டு மொழிகள் தெரி. எனக்கு மூன்று மொழிகள் தவும் பேசவும், ஒரு மொழி மாத்திரம் தெரியும். மொழி ியாதபடியால் நேர்ந்த சுவை சம்பவத்தை இங்கு எழுத சப்படுகிறேன்.

949 ஆம் ஆண்டு. அப்போது கள் வீட்டில் பல வகையான டிகள் இருந்தன. அவற்றுள் இழுக்கும் கைரிக்ஷாவும் ு. ஆந்திராவில் இருந்து ழ தெரியாத நண்பர் ஒருவர் கள் வீட்டிற்கு வந்திருந்தார். டின் வெளிப்புறத்தில் நின்று ண்டு வேடிக்கை பார்த்துக் ண்டிருந்தார். அந்தச் சமயம் கள் வீட்டு ரிக்ஷா தொழி ி முனுசாமி என்பவர் ல்லைப் புறத்திலிருந்து க்கக் காய்ச்சிய இரும்பை த்துக்கொண்டு வந்தார். ணம் ஞாபகமில்லை) நண்ப மிக அருகிலே வரும் ழுது, 'சூடு', 'சூடு' என்று கத்தி . 'சூடு' என்றால் தெலுங்கு ழியில் 'பார்' என்று அர்த்தம். ா ஞாபகமாக இருந்த நண்பர் னைத் தொட்டுப் பார்த்து ார். விளைவு? அவருக்கு ல் உதவி! வண்டிக்கார க் கிடைத்தது வசவு! ●

கல்வே. சு. சதாசிவம்

வரலாறு

தாதி பன்னாவின் தியாகம்!

ராஜஸ்தான், வீரத்துக்கும், தீரத்துக்கும் பேர்போன பூமியானா லும் அங்கும் சில வில்லன்கள் இருந்ததில் அதிசயமில்லை. வில்லன் பன்வீர் வளர்ச்சிக்கு அரசன் விக்ரமாதித்தனும் உடந் தையாக இருந்தான். மீவார் நாட்டு மன்னன் விக்ரமாதித்தன் சிகோடியா பரம்பரைக்குள்ள வீர தீர சாகசங்களுக்குப் பதி லாகக் கொடுங்கோலனாக விளங்கி னான். ஆகவே குஜராத் பகதூர்ஷா எளிதாக மீவார் மீது படையெடுத்து வந்துவிட்டான்.

விக்கிரமாதித்தனின் அன்னை கர்ணாவதி மீவார் நாட்டு வீர சிங்கங்களைத் தட்டி எசுப்ப முயன்றாள். பகதூர் ஷாவிடம் தோற்றுப்போய், ராணி கர்ணா வதி தன்னை மாய்த்துக் கொண் டாள். வில்லன் பன்வீர், மன்னன் விக்கிரமாதித்தனையும் அவனது சகோதரர் உதய்சிங்கையும் ஒழித்துக்கட்டத் திட்டம் போட் டான். வில்லன் பன்வீர் விக்கிர மாதித்தனைத் தீர்த்துக் கட்டி விட்டு, உதய்சிங்கிடம் வந்தபோது, தாதி பன்னா ஒரு தந்திரம் செய்து உதய்சிங்கைக் காப்பாற்றி னாள்! தன் மகனை அரச உடை யில் சயன அறையில் கிடத்தி, வில்லன் பன்வீரின் உடை வாளுக்குப் பலியாக்கினாள். உதய் சிங், பழக் கூடையில் மறைந்து தப்பிக்க உதவினாள்.

மீவார் நாட்டு வீர சிங்கங்கள் உதய்சிங் பிழைத்திருப்பதை அறிந்து அவனுக்கு உதவ முன் வந்தனர். வில்லன் பன்வீருக்கு எதிராகப் படைதிரட்டி, வெற்றி வாகை சூடியதும், சித்தூருக்கு உதய்சிங் திரும்பிவந்து முடி சூட்டப்பட்டான். ராஜபுதன சரித் திரத்தில் பன்னாவின் தியாகம் இன்றும் நினைவு கூரப்படுகிறது. ●



நாகரிகக் கோமாளி –

கவிதைப் போட்டியில்...

பரிசு பெற்ற கவிதை

தோழனாக வேண்டும்!

எஸ். ராஜகோபாலன்

உருண்டைக் கண்ணும் நீண்ட மூக்கும்
உயர்ந்த உடையும் கொண்டாய்!
உல்லாச மாய் ஊருக்கு நீ
உரைக்கும் செய்தி என்ன?

அரசு சார்பில் புதிய திட்டம்
அறிவிக்க வந்தாயா!
முரசு கொட்டி அதைப் பலர்க்கும்
முழங்க வந்தாயா?

கோட்டு, சூட்டு, தொப்பி, முரசு
கோமாளியே! நானும்
ஆட்டம் போட்டு உன்னுடனே
ஆடி வர வேண்டும்!



	கேது		
சனி	இம்மாத கிரக நிலை		
			செவ்
சூரி புதன்	குரு	சுக் ராகு	

16.12.1994 அன்று கிரக பாதசாரம்:

சூரியன் - மூலம் 1, சந்திரன் - கிருத்திகை 4, செவ்வாய் - மகம் 3, புதன் - மூலம் 1, குரு -அனுஷம் 2, சுக்கிரன் - சுவாதி 4, சனி - சதயம் 2, ராகு - சுவாதி 4, கேது - பரணி 2.

கிரக மாறுதல்

31.12.1994 முதல் விருச்சிக - சுக்கிரன்

02.01.1995 முதல் செவ்வாய் - வக்கிர ஆரம்பம்

03.01.1995 முதல் மகர - புதன்

மேஷம்: (அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம் முடிய)

மனத்தில் சிறு சிறு சலனங்கள் அவ்வப்போது குடி கொள்ளும். எடுத்த காரியத்தில் வெற்றி பெற அதிகம் பாடுபட வேண்டி வரும். குருபலம் குறைந்திருப்பதால் பொருளாதார நிலையில் விழிப்புடன் இருப்பது நல்லது. தந்தை நலனில் அக்கறை தேவைப்படும். மக்களால் ஓரிரு உபத்திரவங்கள் உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் அதிகம் லாபத்தை எதிர்பார்க்க இயலாது. அயல் நாட்டுத் தொடர்பால் அனுகூலமிராது. பிறமொழி, மதக்காரர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம். உங்களைக் காட்டிலும் வயதில் மூத்தவர்களிடம் பணிவன்புடன் பழகி வருவது நல்லது.

புதிய தொழில்துறைகளில் முதலீடு செய்ய இந்த நேரம் ஏற்புடையதாகாது. 31-ஆம் தேதி முதல் குடும்பத்தில் குதூகலம் கூடும். பணவரவும் சற்று அதிகரிக்கும். புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். 3-ஆம் தேதி முதல் புதபலம் கூடுவதால் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். உடன் பிறந்தவர்களால் ஓரிரு காரியங்கள் நிறைவேறும். எதிர்ப்புக்கள் கட்டுக்குள் அடங்கியிருக்கும். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகை யாளர்களுக்கும், மாணவர்களுக்கும் உற்சாகம் கூடும். சனி பலம் கூடியிருப்பதால் பிரச்னைகளைச் சமாளிக்கிற பக்குவத்தைப் பெறுவீர்கள். பொதுநலப் பணிகளில் ஈடுபாடு உள்ளவர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். தொழிலாளர் கள் நிலை உயரும். விவசாயிகள் லாபம் கூடுதலாக அடையப் பெறுவார்கள். டிசம்பர் 17, 19, 20, 21, 25, 27, 28, ஜனவரி 3, 6, 7, 11 தேதிகள் சிறப்பானவை. மேற்குத் திசை அனுகூலமானது. 1, 5, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை. ரிஷப, கடக, தனுசு, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

பொதுவில் சுமாரான காலமிது.

பவ ஆண்டு மார்கழி மாதத்திற்கு
உங்கள் ராசி பலன்
16-12-1994 முதல் 13-01-1995 வரை

பாலஜோசியர்
வித்வான் வே. லட்சுமணன்

ரிஷபம்: (கிருத்திகை 2-ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

7-ல் உள்ள குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் உங்கள் செல்வாக்கும் மதிப்பும் உயரும். உடல்நலம் திருப்திகரமாக இருந்து வரும். மனத்தில் மகிழ்ச்சி கூடும். எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிரச்னைகள் எளிதில் தீரும். நிர்வாக ஆற்றல் மேம்படும். பணநடமாட்டம் திருப்தி தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகள் ஆக்கம் தரும். தொழிலாளர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும் செழிப்பான பாதை புலப்படும். குடும்பத்தில் நற்காரியம் நிகழ அடிகோலப்படும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவ முன் வருவார்கள்.

கணவன், மனைவியரிடையே கருத்து வேறுபாடுகள் குறையும். பொதுநலப் பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். மற்றையோர் பாராட்டத்தக்க வகையில் ஓரிரு சாதனைகளை ஆற்றச் சந்தர்ப்பம் கனிந்து வரும். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், ஆன்மிகவாதிகள், சட்ட வல்லுநர்கள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். அலைச்சலும், உழைப்பும் கூடினாலும் அதற்கான பயன் கிடைத்து வரும். மாதர்கள், கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் ஓரிரு சோதனைகளுக்கு ஆட்பட வேண்டி வரும். நில புலங்கள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. இயந்திரப் பணியாளர்கள் பொறுப்புடன் காரிய மாற்றுவது அவசியமாகும். ஜனவரி 3-ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு ஓரிரு இடையூறுகள் உண்டாகும். டிசம்பர் 17, 19, 20, 21, 25, 27, 28, 30, ஜனவரி 3, 6, 7, 11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. 3, 4, 5, 8 எண்கள் அதிர்ஷ்ட மானவை. கடக, விருச்சிக, மீன ராசிக்காரர்கள் உதவுவார்கள்.

பொதுவில் சிறப்பான காலமிது.

மிதுனம்: (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3-ஆம் பாதம் முடிய)

3-ல் உள்ள செவ்வாய் உங்கள் ஆற்றலை வெளிப் படுத்துவார். துணிச்சலும், தன்னம்பிக்கையும் மனத்தில் அதிகரிக்கும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிட்டும்.

வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத்தை எதிர்பார்க்கலாம். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடை போடுவார்கள். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வரவேற்பு கூடும். உடன்பிறந்தவர்கள் ஓரளவு உதவுவார்கள். வாழ்க்கைத் துணைநலம் சீராக இருந்து வரும். மாதர்கள் எண்ணம் ஈடேறும்.

பொதுநலப் பணியாளர்கள் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சமான சூழ்நிலையைக் காண்பார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். தொழிலாளர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். அரசு விவகாரங்களில் ஓரளவு பயன்பெற முடியும். குருபலம் குறைந்திருப்பதால் பொருளாதார நிலையில் சிக்கல்கள் ஏற்படும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. மக்களால் ஓரிரு பிரச்னைகளுக்கு ஆட்பட நேரலாம்; எச்சரிக்கை. ஜனவரி 3-ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு வெளிச்சமான பாதை தெரிய வரும். கணிதம், விஞ்ஞானம் போன்ற இனங்கள் லாபம் தரும். டிசம்பர் 17, 19, 20, 21, 25, 27, 28, 30, ஜனவரி 6, 7, 11 தேதிகள் அனுகூலமானவை. தென்கிழக்கு, தெற்குத்திசைகள் நலம் தரும். சிம்ம, துலா, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6, 7, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சுமாரான காலமிது.

கடகம் : (புனர்பூசம் 4-ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

குரு, சுக்கிர பலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும், தோற்றப்பொலிவும் கூடும். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். மனத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பண நடமாட்டம் திருப்தி தரும். ஸ்பெகுலேஷன் கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். நண்பர்கள், உற்றார், உறவினரால் அனுகூலம் உண்டாகும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருள்களின் சேர்க்கை நிகழும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் நலம் ஏற்படும். மக்களால் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். அரசு விவகாரங்களில் நல்ல திருப்பத்தைக் காணலாம். அரசியல்வாதிகள் தங்கள் கொள்கைகளுக்கு வரவேற்பு கூடப் பெறுவார்கள். நிர்வாகத் திறமை பளிச்சிடும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும்.

சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். மாதர்கள் குறிக்கோள் பூர்த்தி பெறும். வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் செழிப்பான சூழ்நிலை உருவாகும். அலுவலகங்களில் பணி புரிபவர்கள் உற்சாகமான போக்கைக் காண்பார்கள். வாழ்க்கைத் துணைநலம் சிறக்கும். பக்தி மார்க்கத்திலும் ஞான மார்க்கத்திலும் ஈடுபாடு கூடும். 2-ல் செவ்வாயும், 8-ல் சனியும் உலவுவதால் எதிலும் பொறுமையுடன் ஈடுபடுவது நல்லது. அவசரப்போக்கு அடியோடு கூடாது. பயணத்தின் போது பாதுகாப்புத் தேவை. டிசம்பர் 17, 19, 20, 21, 25, 27, 28, 30, ஜனவரி 3, 7, 11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 5, 6, 7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் விசேடமான காலமிது.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1- ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் உலவாததால் உங்கள் எண்ணங்கள் ஈடேறத் தடைகள் முளைக்கும். மனத்தில் நிம்மதி குறையும். உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டி வரும். அலைச்சல் அதிகமாகும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற அரும்பாடுபட வேண்டி வரும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் ஓரிரு உபத்திரவங்கள் உண்டாகும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவத்துடன் பேசிப் பழகுவது நல்லது. எதிலும் அலட்சியப் போக்கு வேண்டாம். பொறுமையும், பக்குவமும் மிகவும் தேவை. பயணத்தின் போதும், இயந்திரங்கள் பக்கம் நெருங்கும் போதும் பாதுகாப்புத் தேவை. நூதன முயற்சிகளை ஒத்திப் போடுவது நல்லது. மாமூலான பணிகள் சீராக நடந்து வரும்.

மக்களால் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைகள் ஆக்கம் தரும். நிறுவன நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அனுகூலமான நேரமிது. எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் பாராட்டுகளுக்கு உரியவர்களாவார்கள். நூதனமானவர்கள் ஓரிருவர் உதவ முன் வருவார்கள். ஜனவரி மாத ஆரம்பத்திலிருந்தே உங்கள் மனத்தில் உற்சாகம் உண்டாகும். முக்கியமான ஓரிரு காரியங்கள் இனிது நிறைவேறும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். புதிய பொருள்களின் சேர்க்கையும் நிகழும். சமுதாய நலப்பணிகளில் ஈடுபாடு உள்ளவர்கள் மதிப்பு உயரப் பெறுவார்கள். மாதர்கள் எண்ணம் ஈடேறும். டிசம்பர் 17, 19, 20, 21, 25, 27, 28, 30, ஜனவரி 3, 6, 11 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, தென்மேற்குத் திசைகள் நலம் தரும். துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சுமாரான காலமிது.

கன்னி: (உத்திரம் 2- ஆம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ஆம் பாதம் முடிய)

புதன், சுக்கிரன், சனி ஆகியோர் பலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும், தோற்றப் பொலிவும், செயல் திறமையும் பளிச்சிடும். குடும்பத்தில் குதூகலம் கூடும். பண நடமாட்டம் சீராக இருந்து வரும். கலைத் துறை ஆக்கம் தரும். மாதர்கள் திறமை பளிச்சிடும். நண்பர்கள், உற்றார், உறவினரால் அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் வெற்றிநடை போடுவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் செழிப்பான பூதை புலப்படும். தொழிலாளர்கள் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள். எண்ணெய் வகையறாக்கள், தாதுப் பொருள்கள், தோல் பொருள்கள் ஆகியவை லாபம் தரும். பொதுநலப் பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள்.

கணவன், மனைவியர் உறவுநிலை சீராகவே இருந்து வரும். புனிதமான பணிகளில் நாட்டம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆதாயம் தரும். கணிதம், விஞ்ஞானம், போன்ற இனங்களைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றத்திற்கான மார்க்கத்தைக் காண்பார்கள். 3-ல் குருவும், 12-ல் செவ்வாயும் உலவுவதால் நிலபுலங்கள் சம்பந்தப்பட்ட இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. வீண் சண்டை, சச்சரவுகளைத் தவிர்த்தல் அவசியம். பேச்சிலும், செயலிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. செலவுகளைக் கட்டுப் படுத்திக் கொள்வதும் அவசியமாகும். டிசம்பர் 17, 19, 20, 21, 25, 27, 28, 30, ஜனவரி 3, 6, 7 தேதிகள் சிறப்பானவை. வடக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, தனுசு, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5, 6, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சுமாரான காலமிது.

துலாம் : (சித்திரை 3- ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ஆம் பாதம் முடிய)

குரு, செவ்வாய் ஆகியோரின் பலம் கூடியிருப்பதாலும் , சுக்கிரனின் சஞ்சாரம் திருப்திகரமாக இருப்பதாலும் உங்கள் செல்வாக்கும் மதிப்பும் உயரும். மனத்தில் உற்சாகம் வேர்விடும். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். பொருளாதார நிலை திருப்திகரமாக இருந்து வரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடி வரும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். நல்லவர்களது நேசத்தால் பயன் உண்டாகும். பேச்சு வன்மையும், செயல் திறமையும் பிரகாசிக்கும். நல்ல தகவல் வந்து சேரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். புதிய வாய்ப்புக்கள் வந்து சேரும். நூதன முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

அரசியல்வாதிகள் தங்கள் மதிப்பு உயரப் பெறுவார்கள். பொதுநலப் பணியாளர்கள் தங்கள் செல்வாக்கை உயர்த்திக் கொள்வார்கள். செந்நிறப் பொருள்கள் ஆதாயம் கொண்டு வரும். எதிரிகள் விலகிப் போவார்கள். பொறியியல், சட்டம், இராணுவம் போன்ற இனங்கள் ஆதாயம் தரும். புதிய பொருள்களின் சேர்க்கை நிகழும். பெண்களுக்கு உற்சாகமான சூழ் நிலை நிலவி வரும். ஆடவர்கள் பெண்டிரால் அனுகூலம் பெறுவார்கள். உடன்பிறந்தவர்களால் பரஸ்பர நன்மைகள் உண்டாகும். மக்கள் நலம் சீர்பெறும். ஜனவரி 3 -ஆம் தேதி முதல் கணிதம், விஞ்ஞானம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சமான சூழ்நிலையைக் காண்பார்கள். அலைச்சல் அதிகரித்தாலும் அதற்கான பயன் கிடைக்கும். டிசம்பர் 19, 20, 21, 25, 27, 28, 30, ஜனவரி 3, 6, 7 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்கு, தெற்கு, வடகிழக்குத் திசைகள் அனுகூலமானவை. விருச்சிக, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் உற்சாகமான காலமிது.

விருச்சிகம் : (விசாகம் 4-ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

ராசிநாதன் செவ்வாய் பலம் பெற்று உலவுவதால் உங்கள் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். எதிர்ப்புக்களைக் கடந்து வெளிவருவீர்கள். எடுத்த காரியங்களை எப்பாடுபட்டாவது நிறைவேற்றி மற்றையோரது நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவீர்கள். இயந்திரப்பணிகள் ஆக்கம் தரும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சாதனை புரிவார்கள். நிலபுலங்களால் அனுகூலம் உண்டாகும். பொருளாதார நிலை திருப்தி தரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடி வரும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழ அடிகோலப்படும். அரசுப் பணிகள் ஆக்கம் தரும். வாக்கு வன்மை பிரகாசிக்கும். வியாபாரிகள், கணிதத்துறையாளர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் ஆகியோர் சுபிட்சம் காண்பார்கள்.

கணவன், மனைவியர் உறவுநிலை சீராக இருந்து வரும். நற்பணிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். தந்தையாலும், உடன்பிறந்தவர்களாலும் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். மக்கள் நலம் சீர்பெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் தொடர்பால் ஓரளவு பயன் உண்டாகும். பக்தி மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும் ஈடுபாடு உள்ளவர்கள் தெளிவான பாதையைக் காண்பார்கள். 31- ஆம் தேதி முதல் உங்கள் தோற்றப்பொலிவு பிரகாசிக்கும். பணவரவும் கூடும். புதிய பொருள்களின் சேர்க்கை இல்லத்தில் நிகழும். ஆடவர்கள் மாதர்களால் அனுகூலம் பெறுவார்கள். பெண்கள் மனத்தில் உற்சாகம் பிறக்கும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் ஏற்றம் பெறுவார்கள். அலைச்சல் சற்று கூடவே செய்யும். டிசம்பர் 21, 25, 27, 28, 30, ஜனவரி 3, 6, 7, 11 தேதிகள் விசேடமானவை. தென்திசை நலம் தரும். தனுசு, விருச்சிக, சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5, 6, 7, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சுமாரான காலமிது.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம் முடிய)

3, 11-ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் பிரச்னைகளைச் சமாளிக்கக் கூடிய வல்லமையை உங்களுக்கு வழங்குவார்கள். பொதுநலப் பணிகளில் ஆர்வம் கூடும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் செழிப்பான சூழ்நிலை நிலவி வரும். எண்ணெய் வகையறாக்கள், தாதுப் பொருள்கள், தோல் பொருள்கள் ஆகியவை லாபம் தரும். கறுப்பு நிறப் பொருள்கள் ஆதாயம் கொண்டு வரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். மாதர்களின் திறமை பிரகாசிக்கும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். பிறமொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். பண நடமாட்டம் சீராகவே இருந்து வரும்.

புனிதமான பணிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். அந்தஸ்தும், புகழும், மதிப்பும் உயரும். மற்றையோர் பாராட்டத்தக்க வகையில் ஓரிரு சாதனைகளை ஆற்றுவீர்கள். நற்காரியங்களுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும். மனத்தில் சிறு சிறு குழப்பங்கள் கேதுவால் ஏற்படக் கூடும். அக்குழப்பங்கள் தீர இறை வழிபாட்டில் கவனம் செலுத்துவது நல்லது. பெரியவர்களின் ஆதரவையும், ஆசிகளையும் திரட்டிக் கொள்வதன் மூலம் நலம் உண்டாகும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். எலக்ட்ரானிக்,

கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. டிசம்பர் 17, 19, 25, 27, 28, 30, ஜனவரி 3, 6, 7, 11 தேதிகள் சிறப்பானவை. மேற்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 4, 6, 8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

பொதுவில் சுமாரான காலமிது.

மகரம் : (உத்திராடம் 2-ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ஆம் பாதம் முடிய)

குரு, ராகு ஆகியோரின் சஞ்சாரம் மட்டுமே அனுகூலமான நிலையில் உள்ளது. ஏனைய கிரகங்கள் திருப்திகரமாக உலவவில்லை. இதனால் நீங்கள் கடுமையாகப் பாடுபட்டே பயன்பெற வேண்டி வரும். அலைச்சலும் கூடும். எக்காரியத்திலும் பதற்றத்திற்கு இடம் தராமல் பொறுமையோடும், பக்குவத்தோடும், ஈடுபடுவது அவசியமாகும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. வீண் வழக்கு, விவகாரங் களில் ஈடுபட வேண்டாம். உடன்பிறந்தவர்களால் ஓரிரு பிரச்சினைகள் உருவாகும் என்றாலும் குருபலத் தால் அவற்றைக் கடந்து வெளிவருவீர்கள். உற்றார், உறவினர்கள், நண்பர்களால் அதிகம் அனுகூலத்தை எதிர்பார்க்க இயலாது. நிலம், மனை, வீடு, வாகனம் சம்பந்தப்பட்ட இனங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது.

பயணத்தின் போதும், இயந்திரங்களில் பணிபுரியும் போதும், தீ, மின்சாரம் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும் போதும் பாதுகாப்புத் தேவை. அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்கைக் காண்பது அரிது. வியாபாரி கள் அகலக்கால் வைக்க வேண்டாம். பெற்றோர் நலனில் அக்கறை தேவைப்படும். செலவுகள் சற்று அதிகரிக்கும். ஜனவரி மாத ஆரம்பம் அனுகூல மானதாக இருக்கும். மனத்தில் உற்சாகம் பிறக்கும். முக்கியமான ஓரிரு எண்ணங்கள் ஈடேற வழிபிறக்கும். பணநடமாட்டம் கூடும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடி வரும். பொன், வெள்ளி, இரத்தினங்களின் சேர்க்கையோ, அல்லது அவற்றால் ஆதாயமோ கிட்டும். மக்களால் மன மகிழ்ச்சி கூடும். நற்காரியங்களில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்து வரும். மாதர்கள் நிலை உயரும். டிசம்பர் 17, 19, 20, 21, 27, 28, 30, ஜனவரி 3, 6, 7, 11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3, 4 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் சுமாரான காலமிது.

கும்பம் : (அவிட்டம் 3-ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகியோர் கோசாரப்படி அனுகூலமான நிலையில் உலவாததால் உங்கள் எண்ணங்கள் ஈடேற இடையூறுகள் இருந்து வரும். மனத்தில் நிம்மதி குறையும். அதிகம் உழைக்க வேண்டி வரும். அலைச்சலும் அதிகரிக்கும். பயணத்தின்போது பாதுகாப்பை மேற்கொள்வது நல்லது. வீண்வம்பு, வழக்குகளில் பிரவேசிக்கலாகாது. கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் பக்குவமாகப் பேசிப் பழகுவது நல்லது. கணவன், மனைவியரிடையே ஓரிரு கருத்து வேறுபாடுகள் உண்டாகும். விட்டுக் கொடுத்துப் பழகினால் பிரச்னைகளுக்கு ஆட்படாமல் மீள லாம். உழைப்புக்குப் பின்வாங்கலாகாது. சோர்வை அகற்றி, சுறுசுறுப்புடன் பாடுபட்டால் அதற்கான பயன் கிடைக்கத் தவறாது.

அரசியல்வாதிகள், அரசுப் பணியாளர்கள் ஆகியோர் உற்சாகமான சூழ்நிலையைக் காண்பார்கள். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் கூடும். கணிதம், எழுத்து போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன் னேற்றம் காண்பார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் டிசம்பர் மாதம் முடிய அனுகூலமான போக்கைக் காண்பார்கள். அதன் பிறகு ஓரிரு பிரச்னைகள் உரு வாகும். மாதர்கள் நலம் மாத முன்பகுதியில் சிறப்பாக இருந்து வரும். மாதப் பின்பகுதி சோதனையானது. இறைவழி பாட்டில் ஈடுபடுவதன் மூலம் பிரச்னைகளி லிருந்து மீள வழிபிறக்கும். நல்லோர் தொடர்பாலும் நலம் பெறலாம். டிசம்பர் 17, 19, 20, 21, 28, 30, ஜனவரி 3, 6, 7, 11 தேதிகள் அனுகூலமானவை. கிழ்த் திசை நலம் தரும். தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 5, 6, 7 எண்கள் நலம் தரும்.

பொதுவில் முன்பகுதி சிறப்பான காலமாகும்.

மீனம் : (பூரட்டாதி 4-ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

ராசிநாதன் குரு 9-ல் அமர்ந்து உங்கள் ஜன்ம ராசியைப் பார்ப்பது விசேடமான நிலை ஆகும். இதனால் உங்கள் அந்தஸ்தும் மதிப்பும் உயரும். உடல் நலம் சீர்பெறும். மனத்திற்கினிய சம்பவங்கள் வாழ்க் கையில் நிகழும். பணநடமாட்டம் கூடும். ஸ்பெகு லேஷன், கொடுக்கல்-வாங்கல் இனங்கள் லாபம் தரும். திடீர்ப் பொருள்வரவும் உண்டாகும். வரவேண்டிய பாக்கிப் பணம் வசூலாகும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மீகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் செழிப்பான பாதை புலப்படும். 6-ல் உள்ள செவ்வாயும், 10-ல் உள்ள சூரியனும் புதனும் உங்கள் அறிவாற்றலை மேலும் கூட்டுவார்கள். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு விவகாரங்களிலும் போட்டிப் பந்தயங்களிலும் வெற்றி பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். தெய்வப் பணிகள் நிறைவேறும்.

பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடை போடுவார்கள். மாதர்கள் திறமை பளிச்சிடும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக் கும் அனுகூலம் உண்டாகும். தொலைதூரத் தொடர்பு ஆக்கம் தரும். அரசியல்வாதிகள், தங்கள் கொள்கை களுக்கு வரவேற்பு கூடப் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும். புதிய பொருள் களின் சேர்க்கை நிகழும். நூதன நட்பு வேண்டாம். வீண்செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. டிசம்பர் 17, 19, 20, 21, 25, 30, ஜனவரி 3, 6, 7, 11 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. சிம்ம, விருச்சிக, தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1, 3, 5, 6, 9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மொத்தத்தில் விசேடமான காலமிது.



நாணயம்

நேர்மை, நாணயம், உழைப்பு செழிக்கவும் உங்கள் பொருளாதாரம் கொழிக்கவும் வழிகாட்டும் புதிய பகுதி.

தேவை - பயனுள்ள கல்வி

எஸ். இராஜரத்தினம்

கல்வி பெறுவதற்கே வாய்ப்பு அல்லது ஆர்வமற்ற நிலையினர் ஒரு பகுதியாகவும், ஆர்வம் இருந்தும் இருக்கும் வாய்ப்புகளை அறிந்து பயன்படுத்திக் கொள்ளும் வசதியற்றவர்கள் ஒரு பகுதியாகவும், வரும் வாய்ப்புகளைப் பேராசையால் நழுவ விட்டுவிட்டு வருந்துபவர் ஒரு பகுதியாகவும் நமது சமுதாயம் தேக்கப்பட்டு, பின் தங்கியிருக்கிறது.

கல்வித் தரம் தேவை

கல்வி என்பது நமது நாட்டில் எதுவரை படித்திருக்கிறார்கள், பட்டதாரியா அல்லவா என்பதை வைத்து மட்டுமே அளவிடப்படுகிறது. தரத்தின் முக்கியத்துவத்தை உணராமையால் கல்வித் தகுதி அல்லது பட்டம் பெற்றும் உரிய பதவிகள் பெறவில்லையென நம் இளைஞர்கள் ஏமாற்றம் அடைந்து, பிறகு சமுதாயத்தின் மீதே ஒரு வக்கிர உணர்வுடன் வெறுப்புணர்ச்சியை வளர்த்துக். கொள்கின்றனர். தாம் பெற்றுள்ள சான்றிதழ்களுக்கும் தமது உண்மையான தகுதிக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கலாம் என்பதைப் பல பெற்றோர்கள் கூடத் தெரிந்து கொள்ளாததால் இவர்களும் இந்த வக்கிர உணர்ச்சிக்குத் தூபம் போடுபவர்களாகவே ஆகின்றனர்.

பட்டத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் வேலைத் தேர்வுகளில் தகுதி அற்றவர்களாக ஆவதற்கு ஜாதிக் கண்ணோட்டம், வேலை ஒதுக்கீடு, அரசியல் குறுக்கீடு, லஞ்சம் முதலிய பல காரணங்களைக் கூறுகிறோம். இவை பல சமயங்களில் உண்மையுங்கூட. ஆனால் இவை மட்டும் காரணமா?

உதாரணமாக, கணக்கெழுதுவது, சுருக்கெழுத்து (ஷார்ட் ஹேண்ட்) ஆகியவற்றில் பயிற்சி உள்ளவர்கள் கல்வி பத்தாவது வரை இருந்தாலும் வேலை கிடைக்கும். ஆனால் சான்றிதழ்களைத் தவிர வேலைத் தேர்வுப் பயிற்சியில் தங்களது தேர்ச்சியைச் சிறிதும் காட்ட இயலாவிட்டால் வேலை வாய்ப்பு கிடைப்பது எப்படி? அவர்களது மொழி அறிவு, கற்ற கல்வியின் தரம், கற்றபின் கற்ற வித்தையை மறவாதிருக்க தாங்கள் எடுத்த முயற்சி ஆகியவை மட்டுமே அவர்கள் வேலை பெறுவதற்குத் தடையாக இருக்கின்றன. தரமில்லாத கல்வி கல்வியே ஆகாது. இன்றைய சூழ்நிலையில் தரமற்ற கல்வி அல்லது வெறும் சான்றிதழ் தருவதையே தமது தொழிலாகக் கொண்டுள்ள நிறுவனங்கள் மலிந்துள்ளன. இதனால் தரமான கல்வி மட்டுமே கல்வி. மற்றெல்லாம் ஏமாற்றே.

கல்விக்கு ஓர் இலக்கு தேவை

அறிவு வளர்ச்சியே கல்வியின் இலட்சியம். உலகத்துடன் ஒட்ட ஒழுகல் கற்பது அதன் மற்றோர் இலட்சியம். அத்துடன் அந்தக் கல்வி பிற்காலத்தில் நல்ல வேலையைப் பெற்றுத் தர உதவ வேண்டுமென்பதுவும் ஓர் இலட்சியமே. அதில் தவறில்லை. ஆயினும் அவற்றுக்கு ஓர் இலக்கு தேவை. இன்று நமது பட்டப்படிப்பு இலக்கில்லாமலேயே இருக்கிறது. மொழியிலோ அல்லது கற்ற கலையிலோ போதிய நிபுணத்துவத்தை அவை அளிப்பதில்லை. பொது அறிவு தேவைதான். அத்துடன் தனித்திறமை ஏதேனும் ஒன்றில் பெற வேண்டுவதும் அவசியம்.

எந்தத் [illegible]ல் அந்தத் தனித்திறமை பெற வேண்டும் என்பதில் பெற்றோர் தங்களது விருப்பத்தை வலியுறுத்துவதை விட, தங்கள் குழந்தைகளுக்கு இயல்பாக உள்ள திறனைப் போற்றி வளர்ப்பது அவர்களுக்கு நல்லது என்பதை அறிவதில்லை. எல்லாரும் டாக்டராகவோ, எஞ்சினியராகவோ ஆக வேண்டுமென்பதில்லை. நாளை கணிப்பொறி (கம்ப்யூட்டர்) யுகத்தில் பலப்பல உத்தியோக வாய்ப்புகள் உள்ளன. எடுத்துக் கொண்ட துறையில் விருப்பமும், அதற்குரிய பயிற்சியும் இருந்தால் வளர்ச்சிக்கு எல்லையே இல்லை.

தொழிற்கல்வி ஒரு தேவை

இன்றைய உலகில் அடிப்படை அறிவும், தமது கருத்துகளை ஆணித்தரமாகச் சொல்வதற்கும் எழுதுவதற்கும் மொழி அறிவும் மிகமிகத் தேவை. அத்துடன் வேலை வாய்ப்பு என்று பார்த்தால் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய தகுதியைப் பெறுவதும் தேவையாகிறது. அத்துடன் தட்டெழுத்து (டைப்ரைட்டிங்), சுருக்கெழுத்து (ஷார்ட்ஹேண்ட்), கணிப்பொறி அறிவு (கம்ப்யூட்டர்) ஆகியவை அனைவருக்கும் தேவை. ஆனால் அந்தப் பயிற்சியில் உண்மையான ஈடுபாடும் கற்றதை மறக்காத முறையில் பயிற்சியின் தொடர்ச்சியும் தேவை. பள்ளி இறுதி ஆண்டிற்கு முன்னரே ஓரளவு இத்தகைய பயிற்சி பெற இப்போது நகரங்களில் வசதிகள் உள்ளன.

சுயதொழில் வாய்ப்புகளைப் பற்றி பலரும் எண்ணுவதில்லை. அரசாங்கத்தில் கீழ்நிலை வேலையைக் கூடப் பலரும் விரும்புவது நமது அறியாமையின் காரணமே.

வளரும் நமது பொருளாதாரத்தில் நமது பங்கு எவ்வளவு என்பதை நாம் எந்த அளவிற்கு நமது தகுதியை வளர்த்திருக்கிறோம் என்பது மட்டுமே நிர்ணயிக்கும். இன்றிருக்கும் தடைகள் தொடரலாம். புதுத் தடைகள் தோன்றலாம். தடைகளை முயற்சியால் தான் வெல்லமுடியும். ஊழையும் (விதியையும்) முயற்சி முறியடிக்கும் என்பது வள்ளுவர் வாக்கு.

விக்கிரமன்

18. அரசரின் முடிவு?

பெரும் புயல் வீசிக் கொண்டிருந்தது. வானமே பொத்துக் கொண்டதோ எனும்படியாக மழை தாரை தாரையாக ஊற்றிக் கொண்டிருந்தது.

கண்ணுக்கெட்டிய தொலைவு வரை நீர், நீர்! கோதாவரி நதியில் பெருக்கெடுத்த வெள்ளத்தோடு வானத்தையும் பூமியையும் இணைத்துக் கொண்டிருக்கும் மழை நீரும் சேர்ந்து கொண்டது.

இரவு பகல் என்று தெரியாமல் மழை பெய்து கொண்டிருந்தது. அவ்வப்போது வெட்டிச் செல்லும் மின்னலொளியில், பெரும் பெரும் மரங்கள் நதி நீரில் அடித்து வருவது தெரிந்தது.

கங்காபுரிக் காவலன்

இராசேந்திரன் தங்கியிருந்த மாளிகையை மெல்ல மெல்ல வெள்ளம் சூழத் தொடங்கியதால், அரச பரிவாரங்கள் சற்று மேடான இடத்தினை நோக்கிச் செல்லத் தொடங்கின.

வெண் கொற்றக் குடையின் கீழ் ஏழுலகையும் ஆளும் சக்தி படைத்த இராசேந்திரன் மழையால் நனையாமல் தடுக்கப் பிரிக்கப்பட்ட குடைகள் சூறாவளியில் பிய்த்துக் கொண்டு பறந்தன.

இராசேந்திரன், பட்டத்தரசியை உடன் அணைத்துக் கொண்டு பாதுகாப்பான இடம் நோக்கி விரைந்தார். அந்த முதுமையிலும் அவரிடம் நிறைந்திருந்த வலிமை அவரை வேகமாக இயங்க வைத்தது. பஞ்சவன்மாதேவியின் கரத்தை அவர் அழுத்தமாகப் பிடித்திருந்தார். அவருடைய வேகத்துக்கு இணையாக, பஞ்சவன் மாதேவியால் நடக்க இயலவில்லை. பல இடங்களில் தடுமாறினாள். காற்றுடன் கலந்து மழை நீர் முகத்தில் பளீர் பளீர் என்றடித்தது. உடலுடன் ஒன்றிப் போன பட்டாடை நடையைத் தடைப்படுத்தியது. மழைக் குளிரால் உடல் நடுங்கியது.

சிறு குழந்தையை அணைப்பதுபோல் அணைத்து எடுத்துக்கொண்டு இராசேந்திரன் விரைந்தார். அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடம் கோயிலொன்றின் மண்டபம். மேடான இடம். அங்கே மழை வெள்ளம் எட்டிப் பார்க்க முடியாது. கோயிலின் பாதத்தைத் தொட்டு ஓடியது.

கலங்காத இராசேந்திரன் மனம் கலங்கியது. பஞ்சவன்மாதேவி தரையில் படுத்திருந்தாள். விரைந்தோடி வந்த பணியாளர்கள் எங்கிருந்தோ சுளுந்துகளைக் கொண்டு வந்து தூண்களில் கட்டி மண்டப ஓரமாக ஒளி வீசச் செய்தனர்.

முற்றிலும் நனைந்திருந்த பஞ்சவன் மாதேவியின் உடலெங்கும் காய்ந்த துணியால் அரசர் துடைத்தார். தனக்கு அவர் செய்யும் பணிவிடை கண்டு திடுக்கிட்ட பஞ்சவன்மாதேவி அதைத் தடுக்க முயன்றாலும் அவளால் முடியவில்லை. அச்சத்தாலும், நாணத்தாலும் மரியாதை மிகுந்திருந்ததாலும் அவள் குறுகிப் போனாள். உதடுகள், 'வேண்டாம்; வேண்டாம்' என்று முணுமுணுத்தன.

நல்ல வேளையாக உடைகள் இருந்த பெட்டி மழையில் நனையவில்லை. அரசர், அங்கு உதவி வந்த பணியாளர்களையும் அதிகாரிச்சிகளையும் அங்கிருந்து விலகச் சொல்லி, பெட்டியைத் திறந்து வேற்றாடைகள் எடுத்து உடுக்கச் செய்தார். மண்டபத்தின் நான்கு புறமும் மறைக்கப்பட்டன. ஒருவரும் அருகே வர அரசர் அனுமதிக்கவில்லை.

இராசேந்திரன் வெளியே வந்து நின்று கொண்டார். பணிப் பெண்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள், அதிகாரிச்சிகள் - பாதுகாப்பான இடத்திற்குச் சென்று

விட்டனரா என்று அறிவதில் முனைந்தார். அவ்வப்போது வெட்டிச் செல்லும் மின்ன லொளியில் புயலின் கோரத் தாண்டவம் புலப்பட்டது. நடுநிசியைத் தாண்டி யிருக்கும்.

அருகேயிருந்த கிராமத்து மக்கள் அந்தக் கடுமையான மழையிலும் கூட்டமாக ஓடி வருவது தெரிந்தது. பானைகளைச் சுமந்து வந்தனர். அதில் சூடான கஞ்சி இருந்தது.

அந்த நேரத்தில் அது அமுதமாகத் தோன்றியது.

மழையும் புயலும் எப்போது நின்றனவோ தெரியவில்லை. அரசரும் அரசியும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். பொழுது புலர்ந்து நேரமான பிறகும் அவர்கள் எழுந்திருக்கவில்லை.

மழை ஓய்ந்தது. கரிய மேகங்கள் விலகி வானம் வெளுத்தது. எங்கோ தெரிந்த கதிரவனின் மெல்லிய கரங்கள் மக்களுக்கு ஆதரவு தர நீண்டன. பறவை இனங்கள் சிலிர்த்தவாறு பறந்தன. கடுமையான மழையில் சிக்குண்டு தவித்த ஆவினங்கள் 'அம்மா' என்று தீனக்குரல் எழுப்பின.

கோயில் மண்டபம் எந்த வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்படாத அளவுக்கு உயரமான இடத்தில் கட்டப்பட்டிருந்தது. அது சிவன் கோயிலின் உள் மண்டபம். சுற்றிலும் உயரமான மதிள்கள்.

பணியாளர்களும், அதிகாரிகளும் மண்ட பத்தின் வெளியே நின்று கொண்டு அரசரை எப்படி எழுப்புவது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர். பரிவாரங்களுடன் வந்திருந்த மருத்துவர், துணிவுடன் சுற்று மறைப்பை விலக்கிக் கொண்டு அரசர் படுத்திருந்த இடம் நோக்கிச் சென்றார். அரசியார் கண் விழித்து, அரசரின் அருகே செய்வதறியாது திகைத்தவாறு அமர்ந்திருந்தார்.

இராசேந்திர சோழ சக்ரவர்த்தியின் உடல் தணலாய்க் கொதித்தது. நெற்றியைத் தொட்டுப் பார்த்து நாடி பிடித்துப் பார்த்த மருத்துவர் பதற்றத்துடன் வெளியே வந்தார். மூலிகைச் சாறெடுத்து அவ ருக்குப் புகட்ட முயன்றார். கைவசமிருந்த தைலங்களைத் தடவித் தேய்த்தார். தன் உதவியாளர்களிடம் தகவல் கூறி அவர் களை விரைந்து சென்று சில மருந்துகளைக் கொண்டுவரச் சொன்னார்.

மெல்ல எழுந்த பஞ்சவன்மாதேவி, அரசர் அருகே கவலையுடன் அமர்ந்து மருத்துவர் அளித்த மருந்தைப் புகட்ட முனைந்தாள்.

நண்பகல் தாண்டியபிறகு அரசர் கண் திறந்து பார்த்து, சைகையால் வினவும் நேரம்வரை அனைவரும் பேய் அடித் தவர்கள் போல் பிரமிப்புடன் இருந்தனர். வேங்கிநாட்டுக்குச் செய்தி சென்றது.

கடும் காய்ச்சல் மெல்ல மெல்லக் குறைந்தது. சூழ்ந்திருந்த வெள்ளம் படிப் படியாகக் குறைந்தது. ஆனால் கோதாவரி யில் இன்னும் இரு கரைகளையும் உடைத்து விடுவதுபோல் வெள்ளம் பாய்ந்து ஓடியது. சுழல் குறையவில்லை.

கோதாவரி நதியில் இரண்டு முறை முழுமதி நிலவு மறைந்தது. கதிரவன் மறை வதையும், முழுகி உதயமாவதையும் கண்டு மன அமைதியடைந்தார் இராசேந்திரன்.

அந்தப் புயல் அடித்த இரவு நடந்த சம்பவத்தை அவள் மறக்கவில்லை. அன்று வலிமையுடன் அவர் இயங்கியதையும் இன்று அவர் துவண்டு கிடப்பதையும் பார்க்க அவள் அதிர்ச்சியடைந்தாள். அவ ருடைய திடமான கரங்களைத் தன் மடி மீது வைத்து மெல்ல வருடியவாறிருந்த பஞ்சவன்மாதேவி கடுங் காய்ச்சலிலிருந்து தப்பிய சக்ரவர்த்தியின் முகத்தையே நோக்கியவாறிருந்தாள்.

அவள் விழிகள், சக்ரவர்த்திகளின் வாடிய முகத்தை நோக்கின. ஒரு மாதத் திற்குள் இளைத்துப் போன மேனியை நோக்கி வேதனையடைந்தாள்.

இராசேந்திரனும் பஞ்சவன்மாதேவியை நோக்கி மெல்லப் புன்னகை புரிந்தார். அந்தக் கீற்றுப் புன்னகையில் பல நூறு அர்த்தங்கள் பளிச்சிட்டன.

'கவலைப்பட்டாயா, தேவி?' என்று அந்த விழிகள் கேட்டன.

"அந்தப் புயலடித்த இரவு வேளையில் நானே பயந்து விட்டேன். உன்னால் நடக்க முடியவில்லை. மிகவும் களைப்படைந்து விட்டாய். மலர் போன்ற நின் பாதங்கள்



மழை நீரில் சிக்குண்டு தள்ளாடின. பன்னீர் அன்றி வேறு நீரால் நனையாத உன் முகத்தில் பளீர் பளீர் என்று புயலும், மழையும் அடித்து வேதனையடையச் செய்தன. எப்படித் தாங்கிக் கொண்டாய், தேவி?"

"மிகவும் தொல்லைகளைக் கொடுத்து விட்டேன் அரசே! குடி மக்கள் துயரங்களைச் சுமக்கும் தாங்கள், என்னைச் சிறு குழந்தை போல் சுமந்தீர்கள். நானும் சோழ நாட்டுக் குடிமகள் என்பதை உணரச் செய்தீர்கள். என்னால் அன்றோ தாங்கள் கடுமையான நோயால் அவதிப்பட்டீர்கள்?"

"இல்லை. இல்லை. நீ அருகே இருந்து பணிவிடை செய்ததால் நான் பிழைத்தேன். இல்லாவிடில், கோதாவரி நதிக் கரையில் எனக்கு ஒரு நினைவு மண்டபத்தினை எழுப்பியிருப்பார்கள்".

"ஐயோ, என்ன சொல்கிறீர்கள்? சோழ நாட்டைக் கொடிய துயரில் ஆழ்த்தி விட வேண்டும் என்பது தங்கள் விருப்பமா?"

"இல்லை, இல்லை. சாவுக்கு அஞ்சுபவன் அல்லன் நான். ஐந்தெழுத்து மந்திரத்தை மனத்தில் நினைத்தவாறிருந்தேன். 'நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம்' என்று உறுதியாக நம்பினேன். 'நமசிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க' என்று ஆயிரம், லட்சம், கோடி முறை உச்சரித்தவாறிருந்தேன்".

சொல் வெளியே வரவில்லை. உதடுகள் அசையவில்லை. பஞ்சவன் மாதேவியின் விழிகளும், இராசேந்திர சோழ தேவர் விழிகளும் இமை கொட்டாமல் பார்த்து மேலே கூறியவாறு பேசிக்கொண்டிருந்தன.

சக்ரவர்த்தி இராசேந்திரசோழ தேவர் முகத்தில் புதிய ஒளி பிறந்தது. இவ்வளவு நாள்களாகப் பேசாத அவர் பேசினார்.

"தேவி! இரவும் பகலும் என்னருகே அமர்ந்து நீ செய்த பணிவிடையால் நான் பிழைத்தேன். நீ பயந்து விட்டாய், அப்படித்தானே?"

பஞ்சவன்மாதேவியின் விழிகள் பனித்தன. மெல்ல, விழிகளைத் துடைத்துக் கொண்டாள். இதயத்தில் அடக்கி வைத்திருந்த பாச உணர்ச்சியைப் பொங்கி வரும்

கண்ணீரால் வெளிப்படுத்த முயன்றாள்; அடக்கிக் கொண்டாள். மெல்லிய விம்மல் ஒலி விசும்பலாக வெளி வந்தது.

"சக்ரவர்த்திகளே! நான் அஞ்சவில்லை! தங்களைப் போன்றே நான், நம் குல தெய்வம் ஆடவல்லானின் திருவடிகளை மனத்திலெண்ணித் தங்கள் பாதத்தில் முகத்தைப் புதைத்தவாறிருந்தேன். சிவ பெருமானுக்கு மிகப் பெரிய கோயில் கட்டும் திருப்பணியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கு இத்தகைய கொடிய காய்ச்சலை ஏன் அவர் அளித்தார் என்று எண்ணினேன். சில நாள்களாகவே நான் தங்களை வற்புறுத்தி வந்தது நினைவிருக்கலாம். பழையாறைக்கு உடனே திரும்ப வேண்டும். அரிஞ்சயன் தேவியைப் பார்க்க வேண்டும் என்ற பரபரப்பு என் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமன்று; நம் நாட்டினின்று சில நாள்களுக்கு முன் வந்தவர்கள் கோயிலையும் அதிலுள்ள சிற்பங்களையும் வர்ணித்ததைக் கேட்கும் போது கோயிலைக் காண வேண்டும் என்ற ஆர்வம் என் உள்ளத்தில எழுந்து என்னை நிலை கொள்ளாமல் செய்தது. கங்கை நீரால் கோயிலின் குடமுழுக்கை நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந் தீர்களே, அதை நிறைவேற்ற வேண்டாமா?" என்று கூறும்போது பஞ்சவன் மாதேவியின் குரல் தழுதழுத்தது.

இராசேந்திரசோழ தேவர், பஞ்சவன் மாதேவியின் கரத்தை எடுத்து அன்புடன் தன் கரத்துடன் பிணைத்து, "புதிய கோயிலை, பெரிய கோயிலைக் காண வேண்டும் என்ற ஆவல் உனக்கு மட்டுமா? எனக்குந்தான். கோயில் திருப்பணியை அருகிருந்து நான் நடத்தாமல் கங்கை நீரின் மீது ஆசை கொண்டு புறப்பட்டது பிழை தானோ என்று எண்ணுகிறேன்.

"நகரம் பெரிதாக உருவாகி வருகிறதாம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப் போன்றே மிகப் பிரம்மாண்டமான கோயில் அங்கே கட்டப்பட்டு விட்டதாம். அழகிய சிற்பங்கள் சோழ நாட்டிற்கே பெருமை தரும் அளவுக்கு அங்கே அமைந்து விட்டன வாம். கருவறையில் மிகப் பெரிய பெரு வுடையார் லிங்க வடிவில் அமர்ந்திருக்கி றாராம். ஆவுடையாரும் லிங்கமும் தஞ்சைக்கு இணையாக இருக்கின்றனராம். அவற்றைக் காணாது நான் கோதாவரி நதிக்கரையில் அமர்ந்து என்ன செய்து கொண்டிருக்கிறேன்? பொழுதை வீண டித்து விட்டேனோ? கங்கையில் நீராடி, கங்கை நீருடன் திரும்பும் எண்ணத்தில் நான் போர்க்குணம் கொண்டு விட்டேனே. தவறு, தவறு என் செயல். பெரும் பிழை. தஞ்சையிலுள்ளது போல் பெரிய நந்தியின் சிற்பத்தைப் படைக்க வேண்டும் என்று சொல்ல நினைத்திருந்தேன். நந்தியை அமைக்காமல் கோயில் பணிகள் முழுமை யாகமாட்டா.

"கனவிலே, புதிய கோயில் தெரிந்தது. பெரும் மதிள்கள் சூழ கோயில் விமானம் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பது தெரிந்தது. பல நூறு வீடுகள் அந்த நகரத்தில் கட்டப்பட்டிருக்கும் காட்சி தெரிந்தது. அடர்ந்த காடுகள் நிறைந்த இடம் என்று சொல்ல முடியாத அளவிற்கு அந்தப் பகுதி மாறி விட்டது தெரிந்தது. புதிய நகரத்தைக் காண சோழ நாட்டின் பல காத தொலைவி லிருந்து மக்கள் வந்து பார்த்த வண்ணமாக இருப்பதைக் கண்டேன்.

"பாவம், வீரமாதேவி! தன்னந்தனி யளாகவே அந்த நகரத்தை, கோயிலை உருவாக்கி விட்டாள். அந்தக் கோயிலுக்கு வீரமாதேவீச்சுரம் என்று பெயர் சூட்டப் போகிறேன்". இராசேந்திர சோழர் விழி களை மூடியவாறு தன் கண்முன் தெரிந் ததை விவரித்துக் கொண்டே போனார்.

பஞ்சவன் மாதேவி நிமிர்ந்து உட்கார்ந் தாள். தன் மெலிந்த கரத்தை, இராசேந் திரன் கரத்திலிருந்து விருட்டென்று எடுத்துக் கொண்டு, "வீரமாதேவீச்சுரமா? இல்லை... இல்லை... அவள் பெயரைச் சூட்டக் கூடாது" என்று, மெல்லத்தான் சொல்ல எண்ணினாள். ஆனால் அந்தக் குரல் கிறீச்சென்று ஒலித்தது.

இராசேந்திரன் திடுக்கிட்டார். "தேவி, தேவி! உனக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டு நெருங்கினார்.

"எனக்கு ஒன்றும் ஆகவில்லை. உங்க ளுக்குத்தான் - உங்களுக்குத்தான். இன்னும் அவள் மீதுள்ள மோகம் மாறவில்லை. வீரமாதேவீச்சுரமாம் - வீரமாதேவி. இவ் வளவு ஆண்டுகள் ஆகியும் உங்களுக்கு

அந்த மோகினி மீதுள்ள மோகம் தணியவில்லையா?" பஞ்சவன்மாதேவியின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலையும், உள்ளத்துணர்ச்சியையும் பிரதிபலிக்கும் விதத்தில் முகத்தில் ஏற்பட்ட கடுமையையும் இராசேந்திரன் கண்டார்.

"என்ன சொல்கிறாய் தேவி!" - இராசேந்திரன் அவள் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பினார்.

"வழக்கத்திற்கு மாறாக அவள் பெயரை, புதிய கோயிலுக்கு இட விரும்புகிறீர்கள்..."

"வழக்கம்தானே - லோகமாதீச்வரம், செம்பியன்மாதீச்வரம் - பஞ்சவன்மாதீச்வரம் என்றெல்லாம் எனக்கு முன்பிருந்த பெரியவர்கள் கோயில்களுக்குப் பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்களே - "

"புதிய கோயில் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இராசராசீச்வரம் என்று தானே பெயர்? அதுபோல் இந்தப் பெரிய கோயிலுக்குத் தங்கள் பெயரைச் சூட்டுங்கள். இராசேந்திர சோழீச்வரம் என்று பெயரிட வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்".

இராசேந்திர சோழ தேவர் வியப்புடன் பஞ்சவன்மாதேவியை நோக்கினார். 'வீரமாதேவி மீது இவ்வளவு ஆத்திரமா? ஏன் அப்படி?' அவருக்கு விளங்கவில்லை.

"நாம் உடனே பழையாறைக்குப் புறப்பட வேண்டும்" என்று கூறினாள் பஞ்சவன் மாதேவி. அதில் பரபரப்பும் வேகமும் தெரிந்தன.

"ஆம். என் எண்ணமும் அதுதான். ஒரு கணம் கூட அந்தப் புதிய கோயிலையும் நகரத்தையும் நான் காணாமல் இருக்க முடியாது. ஆனால்..."

"ஆனால்... என்று கூறி, நம் பயணத்தை நிறுத்தி விடாதீர்கள்".

"நீ தானே அதை நினைவுபடுத்தினாய், கோயில் குட முழுக்குக்குக் கங்கை நீரைக் கொண்டு வருவதற்காக நான் பயணம் புறப்பட்டதை..."

"ஆம்; ஆனால், அந்தப் புனித யாத்திரையை நீங்கள் மறந்து, கோதாவரிக் கரையில் தங்கியது ஏன்? வடக்குத் திக்கு நோக்கிப் படைகளை அனுப்பினீர்கள். கங்கைக் கரைக்குப் படைகளை அனுப்பினீர்கள். ஏன்? நீங்கள் சென்றிருந்தால் உங்களை எதிர்க்கும் துணிவு யாருக்கு வந்திருக்கும்? இளைய படைத் தலைவர்களை கங்கைக் கரைக்கு ஏன் அனுப்பினீர்கள்? கங்கை நதிப் புனித நீர் தானாக வந்து விடுமா? கங்கை நீர் வரப் போவதில்லை; வீரர்கள் வெற்றியடைந்த செய்திதான் வரப்போகிறது. பிறகு ஏன் இங்கே காத்திருக்க வேண்டும்? மழையிலும்

→

புயலிலும் சிக்கி அநாதை போல் மண் தரையில் ஏன் உறங்க வேண்டும்? ஆட வல்லான் அருளால் புயலும் வெள்ளமும் நமக்கு எந்தவித இடையூறும் தரவில்லை. தெய்வ அருள் பூரணமாக இருந்ததால் தப்பினோம். இனியும் நாமிங்கே தங்கக் கூடாது. புறப்படுவோம்".

பஞ்சவன்மாதேவி இதுபோல் கருத்துத் தெரிவித்து அவர் அறிந்ததில்லை. அவர் மௌனமானார்.

"ஏதோ சிந்திக்கிறீர்கள். திட்டமிடு கிறீர்கள். நீங்கள் வருவதற்குள் அங்கே கருவூர்ச் சித்தரின் உதவியுடன் வீரம்மாள் குடமுழுக்கு நடத்தி விடுவாள். அவ்வாறு நடைபெற நான் சம்மதிக்க மாட்டேன்".

இராசேந்திரன் மறுமொழி கூறாமல் இருந்தார். ஆனால் அவருள்ளம் பெரிதாகக் கொந்தளித்தது. அவர் உள்மனம் கேட்ட கேள்விகளுக்கு அவராலேயே மறுமொழி கூற முடியவில்லை.

"கங்கையில் நீராடுவதற்காகத்தானே புறப்பட்டாய்?

கங்கையில் நீராட வேண்டும் எனும் தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றத் தானே புனித யாத்திரை மேற்கொண்டாய்?

புனித நதியில் நீராடும்போது பட்டத்து அரசியை அழைத்துச் செல்லவில்லை. ஏன் என்று தெரியும். அந்த வீரமாதேவியுடன் சென்று நீராட வேண்டும் என்பதுதானே தங்கள் உள்ளார்ந்த விருப்பம்?

'ஆம்; அப்படியும் இருக்கும். அதனால் தான் படைகளுடன் புறப்பட்டேன். பிறகு மனத்தை மாற்றிக் கொண்டேன். பஞ்சவன் மாதேவியைப் பழையாறையில் இருந்து வருமாறு அழைத்தேன்.

'இல்லை. இல்லை. மறைக்காதே. பழையாறையிலிருந்தால் வீரமாதேவியின் பணிகளுக்கு பஞ்சவன்மாதேவி இடையூறு செய்வாள் என்ற எண்ணத்தில்தானே, தேவியை அழைத்தீர்கள்?'

உள்மனக் குரலுக்கு விடை கூற, சமாதானம் செய்ய முடியவில்லை.

'பழையாறைக்குத் திரும்ப வேண்டும் - பஞ்சவன்மாதேவி பிடிவாதமாக இருக்கிறாள்'.

கோயில் திருப்பணியைப் பார்க்க வேண்டும் என்ற தன் ஆவலையும் கட்டுப்படுத்த முடியவில்லை. கங்கை நீரைக் கொண்டு வராமல் செல்வது, எடுத்த இலட்சியத்திற்குத் தோல்வி. என்னதான் செய்வது?'

இராசேந்திர சோழர் மறுமொழி கூறாமல் எங்கோ தொலை தூரத்திலுள்ளதை வெறித்துப் பார்ப்பதுபோல் அமர்ந்திருப்பதைக் கண்ட பஞ்சவன்மாதேவிக்குக் கவலை ஏற்பட்டது. தன் பேச்சைக் கேட்டு அரசருக்குக் கோபம் வந்துவிட்டதா? வரம்பு மீறிப் பேசிவிட்டேனா?

பஞ்சவன்மாதேவியிடம் மெல்ல நடுக்கம் ஏற்பட்டது. அவரை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் அச்சத்தால் தலை குனிந்து கொண்டாள். அதுபோன்ற சமயங்களில் அரசர் எதிரே நில்லாமல் போய் விடுவதுதான் சரி.

பஞ்சவன்மாதேவி குனிந்த தலையுடன் எழுந்தாள். அங்கிருந்து செல்ல முயன்றவளை, "தேவி! நில். என் மனத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை எப்படி நீக்குவது என்று நான் சிந்திக்கிறேன். கலிங்க நாடு சென்றவர்களிடமிருந்து செய்தியை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்திருக்கிறேன். சிலவற்றை நான் யூகித்து உணர்ந்துள்ளேன். அதன்படி நடக்கவும் யோசனை கூறியுள்ளேன். ஓரிரு நாள்கள் பொறுத்திருப்போம். கோதாவரிக் கரையிலேயே அமைதியாகப் பொழுதைக் கழித்து வருவது சரியில்லைதான். ஓரிரு நாள்களில் கோதாவரியில் பெரும் வெள்ளம் குறையும். நாம் கங்கைக் கரையை நோக்கிச் செல்வோம்" என்றார்.

இரண்டு நாள்கள் - ஐந்து நாள்கள் - ஏழு நாள்கள் என்று கழிந்தன. ஆற்றுவெள்ளக் கடுமை குறைந்தது. நதியைக் கடக்கப் பெரிய பெரிய படகுகள் ஆயத்தம் செய்யப்பட்டன. மறுநாள், நல்ல வேளையாகப் பார்த்து பரிவாரங்களுடன் அரசர் புறப்படும்போது, கோதாவரியின் மறுகரையினின்று படகுகள் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் படகுகளில் புலிக்கொடி கம்பீரமாகப் பறப்பது, படகு நெருங்க நெருங்க நன்றாகப் புலப்பட்டது.

—தொடரும்

சுழலும் புயல்


டாக்டர் டி.ஆர். சிவராமகிருஷ்ணன்

ஐப்பசி பிறந்ததுமே மாரிக் கால நினைவுகள் எழுவது இயற்கை. இவ்வாண்டு சொல்லி வைத்தாற் போல் ஐப்பசி பிறந்ததுமே மழை காலமும் (வடகிழக்குப் பருவக்காற்று) தொடங்கிவிட்டது. ஐப்பசி அடை மழை; கார்த்திகை கனமழை என்பது வழக்கில் வரும் பழமொழிகள், மழை யின்றி உணவில்லை. குடி நீரில்லை. எனவே மழை மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்க ஒன்று. ஆயினும் சேதம் விளைவிக்கக் கூடிய புயல் களும் இம்மழைக்காலத்தில் தோன்றி பாதிக்கும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இயற்கைச் சீற்றத்தை வெளிப்படுத்தும் இப்புயல் என்பதுதான் என்ன? அதன் தன் மைகள் யாவை? புயலைக் கண்டறி வது எப்படி?

பரந்திருக்கும் காற்றுமண்டலத்தில் குறைந்த காற்றழுத்த மையத்தைச் சுற்றி வீசும் சுழற்காற்றே 'புயல்' ஆகும். ஓடி வருகின்ற ஆறு, வாய்க் கால் நீரில் ஆங்காங்கே சிறுசிறு சுழல்கள் ஏற்படுவதைப் பார்த்திருப் பீர்கள், அதேபோல் நிலம் மற்றும் நீர்ப்பரப்பில் காணப் பெறும் வெப் பம், ஈரப்பதம், இவற்றை அனு சரித்து படர்ந்து விரிந்திருக்கும் காற் றின் போக்கிலும் அவ்வப்பொழுது ஒவ்வோரிடத்தில் குறைந்த காற்ற முத்தமண்டலம் உருவாகிறது. காற்ற முத்தத் தாழியை நோக்கி வீசும் காற்று, பூமியின் 'கொரியாலிஸ்' விசை யால் சுழற்காற்றாக வீசுகிறது. குறைந்தகாற்றழுத்த மண்டலம் நிலை நிறுத்தம் பெற்றால் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாறுகிறது. இதை Depression எனக் கூறுவர். இது வலுப்பெற்ற நிலையில் புயல்காற்றாக உருவெடுக்கிறது. அப் பொழுது சுழற்காற்றும் பலம் பெற்று, பெருங்காற்றாக வீசுகிறது, இந்தப் புயற் சுழல் (Cyclonic circulation) பூமியின் வடகோளத்தில் இடஞ்சுழியா கவும் (anti clockwise), தென்கோளத் தில் வலஞ் சுழியாகவும் (clock wise) இருக்கும்.


புயலின் முதல் கட்டமாகிய காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தைச் சுற்றி காற்றின் வேகம் மணிக்கு சுமார் 30 முதல் 50 கி.மீ. வரை இருக்கும். இதற்கு அடுத்த கட்ட தீவிரக் காற்றழுத்த தாழ்வு மண்டலத் தில் காற்றின் வேகம் 60கி.மீ வரை செல்லும். இதன் முதிர்ந்த நிலை 'புயல்' ஆகும். இதில் 60 முதல் 100கி.மீ. வரை காற்றின் வேகம் இருக்கும். ராட்சதக் கடலலைகள் எழும். மையக்காற்றழுத்தம் 8000 டைன் (8 மில்லிபார்) போலக் குறை யும். காற்றின் வேகம் மணிக்கு 120கி.மீட்டரைத்தாண்டினால் அது ஹரிக்கேன்வகைப் புயல் எனப்படும். இந்தியக் கரையைக் கடக்கும் தீவிரப் புயல்களில் காற்றின் வேகம் 200கி.மீ. வரை செல்லலாம். இருப்பினும் இந்தியாவை அடுத்த கடல்களில் ஏற்படும் புயல்கள், அட்லாண்டிக், பசிபிக் பெருங்கடல்களில் காணப் படும் புயல்களைவிட வீர்யத்தில் குறைந்தவை என்பது குறிப்பிடத் தக்கது.

புயலுக்குவேண்டிய நிலை நிறுத் தும் சக்தி நீராவியின் உள்ளுறை வெப்பத்தால் (Latent heat) கிடைப்ப தால், வெப்ப மண்டலப் புயல்கள் கடலிலேயே பிறக்கின்றன. கடல் நீர் வெப்பம் 27^{0}C அல்லது அதற்குமேல் இருந்தால்தான் புயல் பிறக்கும்.



1988இல் இன்சாட் பிடித்த வங்காள விரிகுடாப் புயல்

இத்தகைய நிலை அந்தமான் கடல் மற்றும் தென் வங்காள விரிகுடாவில் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலும், மே மாதத்திலும் காணப்படுவதால், தமிழ்நாட்டைப் பாதிக்கும் புயல்கள் பெரும்பாலும் இம்மாதங்களிலேயே உருவாகின்றன. இந்தியத் துணைக்கண்டத்தைத் தாக்கும் புயல்கள் சுமார் 10 முதல் 15கி.மி. உயர்பரிமாணமும், குறுக்களவில் 200 முதல் 800 கி.மீ. வரையும் இருக்கின்றன. ஆயினும் 1979இல் பசிபிக் பெருங்கடலில் உருவான 'டிப்' எனும் புயல் சுமார் 2000கி.மீ.விட்டம் பெற்றிருந்தது என்பது சுவையான செய்தி. புயலை ஓர் உருளை போல் உருவகம் செய்ய இயலும். காற்று சுற்றிச் சுற்றி வந்து, மேலெழுந்து வெளியேறும். இதைப் படம் 1இல் காண்க.



புயலின் தன்மை பற்றிய உருவகம்

பல புயல்களில் புயலின் இடப் பகுதியைவிட வலப் பகுதியில் அதிகக் காற்று வேகமும், உயர்ந்த கடலலைகளும் காணப்படுவதாக விஞ்ஞானக் கணிப்பு கூறுகிறது. சில சமயங்களில் புயல் கரை கடந்து செல்லும் பாதையின் வலப்புறம் சற்று அதிகமான அழிவுகள் காணப்படுவதன் காரணம் இதுவேயாகும். கடும்புயல் களத்தை நான்கு பகுதிகளாகப் பகுத்தறியலாம்.

1. புயல்கண்:

இது புயலின் மையப் பகுதியாகும். 20 முதல் 50 கி.மீ. குறுக்களவு கொண்டது. காற்று, மழை அற்ற அமைதியான பகுதியாகும். 'புயலுக்குப்பின் அமைதி' எனக் கேட்டுப் பழகிய நமக்கு புயலில் இடையேயும் அமைதியைக் கண்டுள்ளது அறிவியல் என்பது சற்றே வியப்பளிக்கும்.

2. புயல் வளையப் பகுதி:

இது புயற்கண்ணைச் சுற்றி அண்டியுள்ள பகுதி. பருத்த மதில் போன்ற மேகங்கள் காணப்படுவதால் இதைக் 'கண்சுவர்ப்பகுதி' என்போரும் உண்டு. ஊழிக் காற்று, பேரிடி மின்னலும், மழையும் கொண்ட பயங்கரப் பகுதி இதுவேயாகும்.

3. இடைப் பகுதி:


கண் சுவர்ப்பகுதிக்கும் புறப்பகுதிக்கும் இடையே சுமார் 50 முதல் 80 கி.மீ. வரை அகண்டிருக்கும் பகுதியாகும். இங்கு காற்றின் வேகம் சற்றே குறைந்திருக்கும். ஆனால் மழை இருக்கும்.

4. புறப் பகுதி:

புயலின் சீற்றத்திலிருந்து படிப்படியாக வெளியேறியிருக்கும் பகுதி. இங்கு மேக மூட்டம் மட்டுமே இருக்கும். காற்று, மழை அதிகம் இராது. புயலின் சீற்றம் தணிந்து காணப்படும்.

புயலோடு இணைந்த பேரழிவிற்கு மூன்று காரணங்கள். அவை பெருமழை, பேய்க்காற்று, கடல் பொங்குதல் ஆகியவையே. கடலோரப் பகுதிகளில் புயலின் பேராபத்தை படம் 2 கணிப்பொறி முறையில் விளக்குகிறது. மழையை விட ஊழிக்காற்று மற்றும் கடல் பொங்குதலினால் ஏற்படும் சேதங்கள் அதிகம். மரங்கள் மட்டுமின்றி கட்டடங்கள், தந்திக் கம்பங்கள், கோபுரங்களைத் தகர்க்க வல்லது காற்றுவிசை. புயல் நகர்ந்து செல்கையில் திசை மாறி மாறி, பெருங் காற்று அடிப்பது. எந்த நிலைத் தளத்தையும் ஆட்டி அசைக்க வகை செய்கிறது. புயல்மையத்தில் ஏற்படும் காற்றழுத்த வீழ்ச்சி, தொடர்ந்து வீசும் வேகக்காற்றால் ஏற்படும் பேரலைகள் இவற்றின் ஒட்டு மொத்த விளைவால் "கடல் பொங்குதல்" போன்ற நீர்மட்டம் உயர்வதே 'புயல் அலை' யாகும். குறைந்த ஆழம் கொண்ட கடற்கரைகளில் இந்தப் புயல் அலை அபாயம் மிக அதிகம். இதனால் ஊழி வெள்ளம் போன்று, கடல் நீர் புயல், கரை கடக்கையில் உள்ளே நுழைந்து கடலோர நகரம் அல்லது கிராமத்தைத் துடைத்து எடுத்து விடுகிறது. உயிர், பொருள், பயிர்ச் சேதம் பெருமளவு ஏற்படும்.

புயலைத் தொலைநோக்கும் சாதனங்களாக இன்று ராடாரும், வான்கோளும் விளங்குகின்றன. 1000 மைல்களுக்கப்பால் அந்தமான் கடலில் புயல் சின்னம் தோன்றிய உடனேயே, அதைக் கண்டறிந்து 'இன்சாட்' நமக்கு முதல் எச்சரிக்கை கொடுத்து விடுகிறது. கரைக்கு சுமார்





செங்கைக்கு அருகே ஸ்ரீஹரிகோட்டாவில் 1984 நவம்பரில் கரை கடந்த புயலின் ராடார் படம்.

300 கி.மீ. தூரத்தில் வந்ததும் புயலறி ராடார்கள் 24 மணிநேரமும் தொடர்ந்து கண்காணித்து, புயலின் போக்கு, திசை, வீரிய மாற்றங்களை உடனுக்குடன் தெரிவித்து விடுகின்றன. இந்தியாவில் புயலறி ராடார்கள் மேற்குக் கடற்கரையில் 4ம், கிழக்குக் கடற்கரையில் 6ம் உள்ளன. அரபிக்கடலை விட வங்காள விரிகுடாவில் ஏற்படும் புயல் எண்ணிக்கை அதிகமாகும். ராடார் காட்டும் புயல் படமும், இன்சாட் பிடித்த புயல்படமும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

இயற்கையின் சீற்ற வெளிப்பாட்டில் புயல் முக்கியமான ஒன்று. ஓர் அமெரிக்கக் கணிப்பின்படி 3லட்சத்திற்கும் அதிகமான அணுகுண்டு வெடித்தலால் வரும் சக்தியை விடச் சற்று அதிக சக்தி ஒரு பெரும் புயலில் உள்ளதாம். ஆயினும் இதில் 3சதவீதத்திற்கும் குறைவான சக்தியே இயங்கு சக்தியாக மாறுகிறது என்பது இயற்கையன்னை மனிதகுலத்திற்கு அளித்துள்ள ஆறுதல் ஆகும். புயலைத் தோன்றியவுடன் அழிக்க முடியுமா, அல்லது வீரியம் பெறுதலிலிருந்து தவிர்க்க முடியுமா என்பது பற்றியெல்லாம் ஆய்வுகள் நடந்துவருகின்றன. ஆயினும் திட்டவட்டமான முடிவுகளை இன்று வரை எட்டமுடியவில்லை. புயலின் போக்கினை மாற்றுவது சாத்தியம் எனினும்,ஒரு தேசத்தினை நோக்கிச் செல்லும் புயல், மற்றொரு தேசத்தினைத் தாக்கினால் வரும் அரசியல் விளைவுகள் புயல் ஆபத்தை விடப் பெரியவையாதலால், அத்தகைய ஆய்வுகள் நிறுத்தப்பட்டுவிட்டன.

புயல் தவிர்க்கமுடியாத ஓர் இயற்கை விளைவு. எனவே அதனோடு வாழப் பழகுதலே சிறந்தது. புயல் எச்சரிக்கை கிடைத்தவுடன், தக்க ஆயத்த நிலையில் இருந்து, உயிர், பொருட் சேதங்களைக் குறைக்க தனிப்பட்ட நிலையில் எடுக்கும் முயற்சிகளோடு, அரசு மற்றும் சமூகப் பணி மன்றங்கள் எடுக்கும் பொது முயற்சிக்கும் முழு ஒத்துழைப்பு தருவது அனைவரது கடமையாகும்.

முழுமையான திருப்தி



நாட்கள் மாறினால் வருடங்கள் ஆகலாம்
மலர்கள் மாறினால் கனிகள் ஆகலாம்
"மாற்றம்" என்கிற சொல்லேயன்றி



மற்றவை எல்லாம் மாறுதல் அடையும்
மாறாத மற்றொன்று உண்டெனில், அது
மக்கள் மனம் நிறைந்த எங்கள் சேவையே.



எங்கள் சேமிப்புத் திட்டங்கள்:

- சேமிப்புக் கணக்கு
- மாதாந்திர சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் தொகை
- வாமன விசுவரூப திட்டம்
- ரொக்க பத்திரங்கள்
- ஸ்ரீ சக்ரா திட்டம்
- CUB ஸ்டாக் இன்வெஸ்ட்
- NRI சேமிப்புத் திட்டங்கள்



CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,
(அந்நியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி)
பதிவு அலுவலகம்: கும்பகோணம் 612 001.

MCS/CUB/1090

CUB : வளர்ச்சிக்கு - உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும் வங்கி!

84, டி.டி.கே. சாலை, சென்னை-600018-இல் உள்ள 'தமிழ் அரசி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீராம் டிரஸ்ட்- 600001-சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ். ராஜா. ஆசிரியர்: 'கலைமாமணி' விக்கிரமன். நிர்வாக அலுவலகம்: 145 லிங்கிச் செட்டி தெரு, த.பெ. எண். 5043, சென்னை - 600 001. தொலைபேசி : 5228545, 510535.